Vol. 7. No 43 29th November 1936 Price 2 As.

ஸ்ரீ சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

K. V. Jaganathan.



திருவண்ணாமலை கோவிலும்
குளமும்.

வருட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14 சதம். மலாய் நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு. வெளிநாடுகளுக்கு ரூ. 10

அடைவதற்கு இயற்கையான

விருப்பம்

வுட்வர்ட்ஸ்

கிரைப் வாடர்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தை தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND



மெல்போர்னிலுள்ள கிரேக்கக் கோவில்.

மஹாபாரதம் : அநுசாஸன பர்வம்

"பிறப்பினுலன்றி பிராம்மணத்வம் வராது"

ஆனுல் விஸ்வாமித்திரர் பிரும்மரிஷியானதெப்படி?

"க்ஷத்திரியன், வைசியன், சூத்ரன் முதலியோர் எதனுல் பிராம்மணத் தன்மையை அடையலாம்? தவத்தினுலும், மிகச் சிறந்த ஸம்ஸ்காரத்தினுலும் வேத மோதுவதனுலும் மற்ற மூன்று வர்ணத்தாரும் பிராம்மணத் தன்மையை அடைவது அரிதானுல் பிராம்மணனுக விரும்புகிறவன் அதனை அடையும் வகையாது?' என்று யுதிஷ்டிரர் பீஷ்மரைக் கேட்டார். அதற்குப் பீஷ்மர் மதங்கன் கதையைப் பின்வருமாறு சொன்னர்:—

ஒரு பிராம்மணனுக்கு மதங்கன் என்ற ஒரு குமாரன் இருந்தான். ஒரு சமயம் மதங்கன் தகப்பனுரால் ஏவப்பட்டு அவரது யாக நிமித்தம் ஏதோ ஒரு வேலையாகப் புறப்பட்டான். அவன் கழுதைகள் கட்டிய தேரில் ஏறிக்கொண்டு கிளம்பினுன். தேரில் ஒரு பெண் கழுதையும் அதன் பிள்ளையான மற்றொரு கழுதையும் கட்டப்பட்டிருந்தன மதங்கன் இளைய கழுதையைப் பலமாக அடித்தான் அடிபட்ட தன் பிள்ளையின்மேல் அன்புகொண்டு தாய்க் கழுதை, "நீ வியசனப்படாதே. சண்டாளன் உன்னை அடிக்கிறுன். பிராம்மணன் கொடியவனுகவிருப்பதில்லை. எல்லாப் பிராணிகளுக்கும் அன்பனென்று சொல்லப்படுகிறுன். எல்லாப் பிராணிகளுக்கும் கற்பிக்கும் ஆசார்யனுகிய பிராம்மணன் அடிப்பானே? பாவத்தையே இயற்கையாகவுடைய இவன் உன்னிடத்தில் தயவாகவிருக்கவில்லை. இவன் தன் பிறப்பைக் கர்வப்படுத்துகிறுன். செய்கையே பிறப்பை நிச்சயப்படுத்துகிறது" என்று சொல்லிற்று.

இதைக் கேட்ட மதங்கன் தேரிலிருந்து இறங்கி அந்தப் பெண் கழுதையை, நோக்கி, "ஏ கழுதையே என் தாய் யாரால் கெடுக்கப்பட்டாள். என்னை ஏன் சண்டாளனென்று சொல்லுகிறுய்? என் பிராம்மணத் தன்மை யாராலாவது கெட்டதா?" என்று கேட்டான்.

இதற்கு அந்தப் பெண் கழுதை "நீ கள் மயக்கமுள்ள பிராம்மணப் பெண்ணினிடம் சூத்திரனுன நாவிதனுக்குப் பிறந்தவன். அதனுல் நீ சண்டாளனுகிறுய். அதனுல் உன் பிராம்மணத்வம் போயிற்று" என்று கூறியது.

இதைக்கேட்டவுடன் மதங்கன் தன் வீட்டுக்குச் சென்று கழுதை கூறியதைச் சொல்லிவிட்டுக் காட்டுக்குச் சென்றுவிட்டான். காட்டிற்குச் சென்று மதங்கன் தவம்செய்ய ஆரம்பித்தான். அவன் தவத்தினுல் தேவர்களும் தாபமடைந்தார்கள். தேவேந்திரன் அவனிடம் வந்து தான் வரம் கொடுப்பதாகச் சொல்லவும் மதங்கன் தான்பிராம்மணத்வத்தை விரும்புவதாகக் கூறினுன். அதற்கு தேவேந்திரன் "மதங்கா, நீ கேட்கும் பிராம்மணத்வம் கிடைக்காது ஆத்மசுத்தியில்லாதவர்கள் பெறக்கூடாத பிராமமணத்வத்தை வேண்டுகிற நீ அழிந்து போவாய். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் மானிடர்களுக்கும் எது மிகப் பரிசுத்தமென்று நினைக்கப்பட்டதோ அதைச் சண்டாளப் பிறப்பில் பிறந்தவன் எவ்வகையிலும் அடைய முடியாது' என்று கூறிச் சென்றுன்.

இந்திரனுல் இவ்வாறு கூறப்பட்ட மதங்கன் மற்றும் நூறு வருஷகாலம் ஒற்றைக் காலால் நின்றுகொண்டு தவம் செய்தான். அப்பொழுது மறுபடியும் இந்திரன் பிரஸன்னமாகிப் பின்வருமாறு சொன்னுன்:— 'மதங்கனே, உயர்ந்த ஜாதியை விரும்புகிற நீ கெடுவாய். நீ இந்தப் பிறப்பில் பிராம்மணத் தன்மையைப்பெறுவது முடியாது. திர்யக் ஜாதியில் பிறந்தவையனைத்தும் மானிடஜன்மத்தை யடையுமாயின், சண்டாளனுகப் பிறப்பது திண்ணம். அப்படிப் பிறந்தவன் அந்த ஜாதியிலேயே பலமுறை பிறந்து சூத்ர ஜன்மத்தை யடைகிறுன். அதே ஜாதியில் முப்பது தடவை பிறந்து வைஸ்ய ஜன்மத்தை யடைந்து, பிறகு அந்த ஜாதியில் அறுபதுமுறை பிறந்தபின் க்ஷத்திரிய ஜன்மத்தை யடைகிறுன். இந்த ஜாதியில் அறுபது முறையான பிறகு பிராமணனுகிறுன். பிராம்மண ஜாதியிலும் பலமுறை பிறந்து ஸ்ரோத்திரிய ஜன்மம் பெறுகிறுன் துயரம், மகிழ்ச்சி, விருப்பு: வெறுப்பு, கர்வம், அதிகப் பேச்சு முதலியவை தாழ்வான பிராம்மணனை வந்தடைகின்றன அந்தப் பிராம்மணன் மேற்சொனன் பகைகளை வெல்லுவானுயின் நற்கதியடைவான் அவ்வாறின்றி அப்பகைகள் அவனை வெல்லுமாயின் தாழ்ந்த ஜன்மத்தில் பிறப்பான். ஆகையால் நான் முன்னமேயே சொன்னபடி வேறு வரம் கேள், கொடுக்கிறேன். நீ பிராம்மணனுவது சிறிதும் முடியாது"

இந்திரனுல் இவ்வாறு கூறப்பட்ட மதங்கன் மேலும் மன உறுதியோடு ஒற்றைக் காலால் நின்றுகொண்டு ஆயிரம் வருஷ காலம் தவம் செய்தான். ஆயினும் அப்பொழுதும் இந்திரன் சண்டாள ஜன்மத்தில் பிறந்தவனுக்கு பிராம்மணத்வம கிடையாதென்று சொல்லிவிட்டதால் கால்கட்டை விரலால் நின்றுகொண்டு கயை என்னுமிடத்தில் நூறு வருஷகாலம தவம செய்தான். இந்திரன் அவன் முன் பிரத்யக்ஷமாகி, "பிராம்மணத்வம் அடைவதற்கு மிகவும் கடினம். எல்லாப் பிராணிகளின் யோகக்ஷேமங்களும் பிராம்மணனிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பிராம்மணனைப் பூஜிக்கிறவன் சுகமடைகிறுன். பூஜியாதவன் துன்பமடைகிறுன். ஆத்ம சுத்தியில்லாதவர்கள் பெறுதற்

காந்திஜியின் புதல்வரான ஹீராலால் சமீபத்தில் ஆர்ய சமாஜ விதிப்படி ஹிந்து மதத்தைத் தழுவினர். M2

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும் மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனுபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

"ஜனுண க்ரீம்"

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும் சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.

கிடைக்குமிடம்:—

SHIVLAL & CO.,
Princess Street, Bombay 2.

கரிதான பிராம்மணத்வத்தை விட்டுவிட்டு வேறு வரம்கேள். உனக்கு இந்த வரம் கிடைக்காது" என்று சொன்னன்.

இதற்கு மதங்கன் "இந்திரனே! நீயும் பிராம்மணத்தன்மையை அடைந்து மேலாக விரும்பாமலிருப்பதற்கு உன்னைப்பற்றியே நான் துயரப்படுகிறேன். பிராம்மணத்வம் அரிதாகவும் மற்ற மூன்று வர்ணத்தாரும் பெறத்தகாததாகவும் இருந்தும் அவ்வருமையான பிராம்மணத் தன்மையைப் பெற்றும் மனிதர்கள் எப்போதும் அதற்குத் தக்க ஒழுக்கமுள்ளவர்களாயிருப்பதில்லை. நான் தர்மம் தெரிந்தவனயிருந்தும் என் தாயின்குற்றத்தினல் இந்த நிலைமையை அடைந்தேன். விதியை முயற்சியினல் வெல்ல முடியாதென்பது திண்ணம். எதற்காக முயற்சி செய்தேனே அது கிடைக்கவில்லை. ஆகையால் எனக்கு இந்த வரத்தைக் கொடு. நான் நினைத்தபடி ஸஞ்சரிப்பவனும் நினைத்த உருவம்எடுப்பவனும் ஆகாயத்தில் பறக்கும் திறமையுள்ளவனுமாகக் கடவேன். பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் விரோதமின்றி மரியாதையையும் நான் பெறக்கடவேன்" என்று தன் வரத்தைக் கேட்டான். அவ்வாறே இந்திரனும் வரமளிக்க மதங்கனும் உயிரைவிட்டு தேவத்தன்மையை அடைந்தும பிராம்மணத் தன்மையை அடையாத நிலையைப் பெற்ருன்.

இந்த விருத்தாந்தத்தைக் கேட்ட யுதிஷ்டிரர் பீஷ்மரை நோக்கிப் பின்வருமாறு கேட்டார்:—மற்ற மூன்று வர்ணத்தாரும் பிராமமணத்வத்தை அடையமுடியாதென்ருல் ராஜரிஷியும் க்ஷத்திரியவம்சத்தில பிறந்தவருமான விஸ்வாமித்திரர் எப்படிப் பிராம்மண்யம் பெற்ருர்?

இதற்குப் பீஷ்மர் பின்கண்ட கதையைச் சொல்லிச் சமாதானம் கூறினர்:— பிருகு வம்சத்தில் பிறந்த ரிசீகரென்ற மஹர்ஷி காதியென்னும் அரசனுடைய பெண்ணன ஸத்யவதியை மணந்துகொண்டு வசித்து வந்தார். ஒரு சமயம் அவர் ஸத்யவதியின் ஒழுக்கத்தைக்கண்டு ஸந்தோஷமடைந்து வரம் கொடுப்பதாகச் சொன்னர். இந்த சமாச்சாரத்தை ஸத்யவதியானவள் தன் தாயிடம் சொன்னள். தாயும் தனக்குப் பிள்ளையில்லாக்குறையை மகளிடம் தெரிவித்தாள். ஸத்யவதியும தன் தாயின் விருப்பத்தைக் கணவனிடம் சொன்னள். ரிசீகர் இதைக்கேட்டு "நீங்கள் இருவரும் நல்ல பிள்ளைகளைப் பெறுவீர்களென்பது நிச்சயம்; குணங்களில் சிறந்தவனும் நமது ஸந்ததியைய பிவிருத்தி செய்கிறவனுமான சிறந்த புத்ரனும் உன் தாய் வம்சத்தை விருத்திசெய்யும் ஸஹோதரனும் பிறப்பார்கள். ருதுஸ்நானம் செய்த பிறகு உன் தாய் அரசமரத்தையும் நீ அத்திமரத்தையும் தழுவிக்கொள்ளுங்கள். இந்த இரண்டு ஹவிஸ்ஸுகளில் ஒன்றை நீயும் மற்றென்றை உன் தாயும் உண்ணவேண்டும்" என்று சொல்லி ஹவிஸ்ஸுகளையும் காட்டினர்

ஸத்யவதி ரிசீகர் சொன்னதைத் தன் தாயிடம் சொன்னள். அவளும, 'பெண்ணே! மூத்தவளான நான் சொல்வதைக் கேள். உன் பர்த்தா மந்திரத்தினல் ஸம்ஸ்காரம் செய்து உனக்குக் கொடுத்த ஹவிஸ்ஸை எனக்குக் கொடுத்துவிடு. என்னுடைய ஹவிஸ்ஸை நீ எடுத்துக்கொள். அதே மாதிரி மரத்தையும் மாற்றிக்கொள்வோம். எவனும் தன் ஸந்ததி சிறந்ததாகவும் குற்றமில்லாததாகவுமிருக்க விரும்புவான். ஸஹோதரன் எப்படிச் சிறந்தவனகவிருப்பான் என்பதைத்தான் நீ கவனிக்கவேண்டும்" என்று சொன்னள். அதன்படியே அவ்விருவரும் மாற்றிக்கொண்டனர். பிறகு அவர்கள் கர்ப்பம தரித்தனர்

ரிசீகர் தன் மனைவியைப் பார்த்து "ஹவிஸ்ஸிலும் மரத்திலும் மாறுதலேற்பட்டிருக்கிறதென்பது நிச்சயம். என்னல் பிரம்மதேஜஸ் அனைத்தும உன் ஹவிஸ்ஸிலும், க்ஷத்திரிய சக்தி முழுதும் உன் தாய் ஹவிஸ்ஸிலும் பொருத்தப்பட்டன. மூன்று உலகங்களிலும புகழ்பெற்ற பிராம்மணனை நீயும் அப்படியே சிறந்த க்ஷத்திரியனை உன் தாயும் பெறுவீர்களென்று நான் விரும்பினேன். ஆனல் நீ மாறிச் செய்துவிட்டாய். குழந்தைகள் பிறப்பதிலும மாறுதலேற்படப் போகிறது" என்று சொன்னர்.

பிறகு ஸத்யவதி ஜமதக்னி என்னும் பிள்ளையைப் பெற்ருள். அவள் தாய் விஸ்வாமித்திரரைப் பெற்ருள். அதனல் தான் சிறந்த தவமுள்ள விஸ்வாமித்திரர் க்ஷத்திரியராயிருந்தும் பிராம்மணத்வத்தை அடைந்து பின்னும் பிராம்மண சந்ததியை உண்டுபண்ணினர். அதனல் தான் அவர் பிரும்ம ரிஷியானர்.

(தொடரும்)

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டு பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

உன் குழந்தையின்
உத்தமமான துணைவன்.

சுத்தமாகவும் சிறப்பாகவும் மருந்தூட்டிய குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தாள் குழந்தையின் இளமையான தோலைத் தேற்றி, உல்லாசமான வாசனை உண்டாக்கும். குழந்தைக்கு ஸ்நாநம் செய்த பிற்பாடு குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளை உடம்பின்மேல் தூவினல், பதரும், எரிப்பும் வராதபடி காப்பாற்றும்.

குழந்தையின் தோலை சரியான பக்குவத்தில் வைக்கச் செய்யும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் நேர்த்தியாகவும் பரிசுத்தமாகவும் மிருப்பதினல், உலகமுழுதலும் வைத்தியர்களும், தாதிகளும் இதை குழந்தையின் கட்டிளமைத் தோலுக்கு உபயோகப்படுத்தும்படியாகபுகழ்ந்தோப்பு வித்திருக்கிருர்கள். இந்த காரணத்தினலேதான் ஸ்திரீகளும் இந்தத் தூளை ஸ்நாநம் செய்த பிற்பாடு உபயோகித்து சந்தோஷ மடைகிருர்கள். அதுவுமல்லாமல், இந்தத்தூளை உபயோகித்து ஸ்திரீகள் பதரையும் எரிப்பையும் போகச் செய்து களிப்படைகிருர்கள். அது வேர்வையைத்தணிக்கிறது; தோலின் சூடான மினுக்கத்தை நீக்கி, திரேகத்துக்கு முழுதலும் இனிப்பான வாசனை கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் வாங்க அகப்படும்.

குடிகூரா டால்கம்
CUTICURA TALCUM

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தாள் வேண்டுமென்று இன்றைக்கே கேள்.

மகரத்வஜம்
ஆரோக்ய சஞ்சீவி

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

தென்னிந்தியப் பிரமுகர்கள்

வைத்தியரத்ன பண்டித
டி. கோபாலாசார்லு

(1872—1920)

(கே. எஸ். ஆர்.)

[மேனாட்டு நாகரீகம் ஓங்கி நிற்கும் இந்நாளில் பண்டைகால முறைகளை முன்னுக்குக் கொண்டு வந்து அவற்றில் நம்பிக்கையை உண்டாக்குவது எல்லோராலும் இயலாத சேவையாகும். அடியோடு மறந்துவிடப்பட்ட ஆயுர்வேத சாஸ்திரத்தை உயிர்ப்பித்து, அதன் முன்னேற்றத்திற்காக தமது ஜீவிய காலம் முழுதும் ஏக மனதாகச் சிரமப்பட்டு உழைத்தவர் வைத்தியரத்ன பண்டித டி. கோபாலாசார்லு அவர். அவரது ஆச்சரியகரமான வாழ்க்கை இந்திய சாஸ்திர அபிமானமுள்ள ஒவ்வொருவராலும் பாராட்டப்படுமென்பதில் சந்தேகமில்லை. அச்சரித்திரம் கீழே பிரசுரிக்கப்படுகிறது.]

ஆயுர்வேத வைத்தியம்

கடந்த நூற்றாண்டின் அந்திய வருஷங்களிலிருந்தே இத்தேசத்தின் ஆயுர்வேத வைத்திய முறை பரவி விஸ்தரிக்கலாயிற்று; அப்போதுதான் சிலர் இச்சிறந்த முறையையும் இதன் பெருமையையும் பலருக்கும் உணர்த்தவேண்டுமென முன்வந்தனர். இறுதியில் இந்நாட்டில் ஆங்கில அரசாட்சி ஸ்தாபிக்கப்பட்டு, அதன் பயனாக இங்கு மேனாட்டு வைத்திய நிபுணர்கள் குடியேறிய போது, இத்தேசத்தினர்களுள் பெரும்பான்மையானவர் மேனாட்டு சிகித்சைகளைச் செய்துகொண்டு, அதனால் தங்களுக்கிருந்த கௌரவத்தை விருத்தித்துக்கொண்டதாக எண்ணிவந்தனர். இத்தேசத்தில் அநேகம் நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே பெருமை வாய்ந்தவர்களும் அசாதாரண திறமை வாய்ந்தவர்களுமான வைத்திய சாஸ்திர சமர்த்தர்கள் தோன்றியுள்ளனர். இம்மேதாவிகள் தங்களது சாஸ்திரத்தைப்பற்றியும், வியாதிகளுக்கு உபயோகப்படுத்தப்படவேண்டிய ஔஷதங்களைப்பற்றியும் ஸம்ஸ்கிருதத்தில் புத்தகங்கள் எழுதியுள்ளனர். இந்தக் கிரந்தங்கள் வெகுகாலம் மதிப்பாரின்றி இருந்து கிடந்தன; இதற்குக் காரணம் ஸம்ஸ்கிருத பாஷை அறிந்தவர்கள் வெகு சொற்பமானவர்கள் என்று எளிதில் சொல்லிவிடக்கூடும்! சுஸ்ருதன், சாரகன் போன்ற மஹா நிபுணர்கள் நமக்கு எழுதிவைத்துள்ள கிரந்தங்களில் எந்த விதமான வியாதிக்கும் சிகிச்சை முறைகள் சொல்லப்பட்டுள்ளன. இப்புத்தகங்களில் காணப்படும் சுலோகங்களில் வியாதியின் அம்சங்களையும், ஔஷதப் பிரயோகத்தைப் பற்றிய விஷயங்கள் பூராவையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இம்மாதிரியான ஆயுர்வேத கிரந்த கர்த்தர்களின் நோக்கம் என்னவென்றால் ஜனங்கள் வியாதி தீர்ந்து எக்காலமும் சுகமாக வாழவேண்டும் என்பதேயாகும். ஆயுர்வேத முறையின் ஒரு முக்கிய அம்சத்தைக் குறிப்பிடவேண்டும். அதாவது எத்தகைய பிணியையும் மருந்துகள் மூலம் போக்குவதேயாம்; சிகித்சைக்காக சாஸ்திரங்களை அசாதாரண சந்தர்ப்பங்களில் அவர்கள் பிரயோகித்து வந்தனர்.

"பிணியைப் போக்கி திரும்பி வாராமல் தடுக்கிறது"

ஆனால் மேனாட்டு முறை இங்கு நிலவவாரம்பித்த பின்பு, சஸ்திரப் பிரயோகங்களை நாம் அதிகமாகக் காண்கிறோம். இதனால் நாம் அதைப்பற்றி குறை காணுவதாகக் கருதுவது கூடாது. நம்முன்னோர்கள் பல மூலிகைகளின் உபயோகத்தை நன்கு அறிந்திருந்தனர். அவற்றை அவர்கள் "பச்சை இலை" என்று சொல்வது இயல்பு; அவர்களுக்கு மட்டும் அவ்விலைகளின் அம்சங்களும் அமைப்பும் தெரியும். பாரம்பர்யமாக இவ்விலைகளைப்பற்றின ரகஸ்யங்கள் அக்குடும்பத்தில் போதிக்கப்பட்டு வரும். தவிர இதரர்கள் இவற்றைத் தெரிந்துகொள்வது அசாத்தியம். வலுத்த ரண காயங்களுக்கும் சில பச்சை இலைகளை உபயோகிப்பதனால், வெகு சீக்கிரத்தில் ரணம் ஆறிவிடுகிறது; எலும்புகள் முறிந்துவிட்ட காலத்திலும் இவ்விலைகளை அந்தபாகத்தின்மேல் கட்டுவதனால் சீக்கிரத்தில் எலும்புகள் கூடி, வலுகுறைவதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் மேனாட்டு முறையைப் பின்பற்றுவதால் காலதாமதம் அதிகமாக ஆகின்றது. இதுபோல் நம் தேசத்தில் அநேகம் அதி லகுவான சிகித்சா முறைகள் வழங்கிவருகின்றன. அவற்றை சரிவர அறிந்துகொள்ளாமலிருப்பது நம் தவறு. இவற்றைப் பற்றி நம்மவர் அசிரத்தையாக விருந்துவிட்டதால், இப்போது பழைய கிரந்தங்களில் குறிப்பிட்டிருக்கப்படும்

(36-ம் பக்கம் பார்க்க)

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ணராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,

மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

குழந்தையின் அன்பு

———:[o]:———

(டி. வி. ராமமூர்த்தி)

அவனையும் அறியாது ஏதோ சக்தி உள்ளிருந்து இவனைத் தூண்டியது. நெருப்பண்டை தலைகால் தெரியாது ஓடினான். பிறகு திடீரென விழுந்துக்கொண்டான். வீடு யாருடையது? தன்னை பகிஷ்கரித்த ஜனங்களில் ஒருவருடையதல்லவா? ஆனால் குழந்தை. தனக்கும் ஒருகாலத்தில் அன்பும் ஆதரவும் காட்டி தேறுதல் அளித்ததும் ஒரு குழந்தையே!

கதிரவனின் காலைக் கிரணங்கள் எங்கும் தங்கு தடையின்றி ஊடுருவிப் பாய்ந்தன. கிழக்கு வானத்தில் தன் பொன்னிறக் கிரணங்களை அள்ளி யிறைத்துக்கொண்டு தோன்றும் சூரியன, தூக்க மயக்கத்தில் சொற்பன உலகில் காணும் பலவேறுகாட்சிகளைக் கண்டு மயங்கி திகைத்துக்கொண்டு இருப்பவர்களைத் தட்டி எழுப்புகின்றவன்போல தனது தூதுவர்களாகிய கிரணங்களை எங்கும் பரப்புகின்றான்போலத் தோன்றியது. படுக்கையைவிட்டு எழுமனமில்லாமல படுக்கையிலேயே புரண்டு கொண்டிருந்த ரங்காராஜனின் மனம் அலைகடல்போல் தத்தளித்தது. தன் எதிர்கால வாழ்வைப்பற்றி அவன் கொண்டிருந்த உயர்வான எண்ணங்கள் எல்லாம் தூரத்தில் தோன்றி மறையும் வான ஒளியை ஒத்துப் பாழடைந்து போவதை அவன் உணர்ந்தான்.

தன்னைப் பகிஷ்காரம்செய்து விலக்கிய தன் சமூகத்தாரின் சபபந்தத்தை வேருடன் அறுத்து எறிந்து எங்காவது கடல் கடந்துபோக அவன் மனம் நாட்டம கொண்டது. ஆனால் ஒரு சின்னஞ் சிறு மதலைக் குழந்தையின் அழகிய முகம் அவனது துணிவை எல்லாம் ஒரு கொடியில் சிதற அடித்தது. தான சிறையில் இருந்து வாடியபொழுது கல் உடைத்தும் மாவரைத்தும் கஷ்டப்படும் சமயத்தில், தன்னைப் பார்த்துப் பரிகசித்த மற்றைய சிறுவர் சிறுமியர்குழாத்தினிடையே தன்னை அன்பும் கருணையும் பொலிந்த பார்வையால் கண் குளிர நோக்கித் தானும் ஒரு ஜீவனும் சக்தியுள்ள மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவன்தான் என ஞாபக மூட்டிய அச்சிறுமியை இவனால் மறக்க முடியவில்லை. சபல புத்தியுடைய குழந்தைப் பிராயத்தில்கூட தனக்குக் கொடுக்கப்பட்ட பக்ஷணத்தைச் சிறிதும் யோசனை செய்யாமல் ரங்காராஜனுக்கு அதைத் தூக்கிக் கொடுத்த அச்சிறுமியின் தன்னலமற்ற மனப்பான்மையை என்னென்பது! அநேக நட்சத்திரக் கூட்டங்களிடையே தோன்றும் ஒரு சந்திர பிம்பத்தை ஒத்த அச்சிறுமியை நினைக்குந்தோறும் அவனை வருத்தும துன்பம் எல்லாம் மாறி மகிழ்ச்சி எய்தினான்.

ரங்காராஜன் சொற்ப சம்பளத்தில் ஒரு ஏழை குமாஸ்தாவாக இருந்தான. தன் வயிற்றுப் பாட்டுக்கே தாளம் போடும் நிலையில் இருந்த அவனை அமோகமான செல்வம் தேடி வந்தடைந்தது. ரங்கூனில் பெருத்த வியாபாரியாய் இருந்த அவன் சிறிய தகப்பனார் திடீரென மாரடைப்பினால் இறந்துவிட்டார். எனவே அவரது ஏராளமான ஆஸ்திக்கும் இவனே வார்சுதாரன் ஆனான். சொற்ப சம்பளம் வாங்கும்பொழுது தானுண்டு, தன்பாடுண்டு என்று கிடந்த இவன் தன் செழிப்பான காலத்திலும் அம்மாதிரியே இருப்பதைக் காண இவன் புது சிநேகிதர்கள் மனம் பொறுக்கவில்லை. அதனால் அவர்கள் இவனிடம் வலிய வந்து உறவு கொண்டாடினர்கள். அதன பொருட்டு அநத மகானுபாவர்கள் பிரதிப் பிரயோஜனமாகக் கருதியதெல்லாம் சிறு சிறு உதவிகளேயாகும் சில்லரைக் கைமாற்றுகள்-ஜாமீன் கையெழுத்துகள்-பரஸ்பர உதவிகள்-ஆகிய இத்தகைய அல்ப விஷயங்களே. பணம் பத்தும செய்யும் என்பார்கள். அதைப்போல் குடியும கூத்தியும் இவனை இணைபிரியா தோழமை கொள்ளலாயின. அப்புறம்கேட்கவும் வேண்டுமோ?

பணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து வந்தது. முடிவில் ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் தவிர மற்றைய ரொக்கம் எல்லாம் காலி புட்டிகளிலும் வேசிகள் இல்லங்களிலும் போய் தஞ்சமடைந்தன. செல்வமானது செல்வோம் என்ற முதுரைப்படி இவனை விட்டுப் போய் அங்கு சேர்ந்து விட்டது. பிறகு ஒவ்வொன்றாய் விற்கத் தொடங்கினான். அந்த சமயத்தில்தான் அவன் கல்யாணியைக் கண்டான். ஈரப் புடவையுடன் இடுப்பில் குடமும் ஒரு கையில் ரவிக்கையுடனும் ஆற்றிலிருந்து ஒய்யாரமாய் வரும் அவ்வழகியின் தோற்றம் முற்றும் துறந்த முனிபுங்கவர்களையும் நிலை தடுமாறச் செய்யும் என்றால் நம் ரங்காராஜனைப்பற்றிச்செப்பவும் வேண்டுமோ? அது முதல் விசேஷ நாட்களில் ஆலயத்தில் அவள் பிரதக்ஷிணம் வரும் பிராகாரங்களில் நின்றுகொண்டும் மற்றைய நாட்களில் ஆற்றுக்கு வரும் வேளையில் வழியில் நின்றுகொண்டும் அவளைக் காண்பதில் அவன் கொண்ட ஆவல் சொல்லத் தரமன்று. கண்ணோடு கண் நோக்கின் வாய்ப் பேச்செதற்கு? அவளும் அவனை நோக்கிய விழிகளால் அவனை முற்றிலும் வெறுக்கவில்லை எனத் தெரிந்தது.

இந்த சம்பவங்களை யெல்லாம் கூட இருந்துபழகியஇவன் சிநேகிதன் பாலு ஒரு கொடியில் அறிந்துகொண்டான். இருந்தாலும் அவன் இவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. சற்று மரியாதையுடன் நடந்துகொண்டிருக்கலாம். எப்படியும் மரியாதை தவறி நடந்ததற்குத் தகுந்த தண்டனை அடைந்தான்.

எல்லோரும் ஒருநாள் பொழுது போக்கிற்காக சீட்டாடிக்கொண்டிருந்தார்கள். ஏதோ பேச்சு பராக்கில் பாலு "என்ன ரங்காராஜா! குளிக்கப் போய்சேற்றை அல்லவா பூசிக் கொள்வாய் போலிருக்கிறது. நம்முடைய மோகன என்ன, சுந்தரி என்ன அவர்களை எல்லாம் விட்டு விட்டு ஆற்றிலிருந்துவரும் அந்தப் பெண்ணைப போய் அவ்வளவு சிரத்தையுடன் கவனிக்கிறாய்!" என்று குத்தலாய் மொழிந்தான். ரங்கராஜன் மனம் கொதிப்படைந்தது. இருந்தாலும் அவன் அதை அடக்கிக்கொண்டு "யாரிடம் என்ன பேசுகின்றோம் என்பது ஞாபகமிருக்கட்டும்! நான் உண்மையான காதல் கொண்டிருக்கும் பெண் விஷயத்தில் நீ அனாவசியமாய் தலையிடவேண்டாம்" என்றான்.

பாலு அந்த எச்சரிக்கையைச் சட்டை செய்யவில்லை.

"அவள் ஒரு வேசி என்பதை அறிந்தால் நீ இவ்வாறு பேசமாட்டாய்" என்று பெரிதாய் ஒரு போடுபோட்டான். "மறுபடியும் கூறுகின்றேன். இனிமேல் ஜாஸ்தியாய்ப் பேசாதே" என்று கடுமையாகக் கூறினான் நம் ரங்கராஜன்.

"நீ அவளைப்பற்றி என்ன வேண்டுமானாலும் பிரமாதமாய் நினைத்துக்கொள். அதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. ஆனால் நேற்றுகூட அவள் என்னிடம் ஒரு விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்தாள்" என்று மறுபடியும் கூறினான் பாலு.

ரங்காராஜன் உதட்டைக் கடித்துக்கொண்டான். பொறுக்க முடியவில்லை. அவனையும் அறியாது அவன் கைகள் மேஜையின்மேல் இருக்கும் கண்ணாடிக் கல்லண்டை சென்றது!

பாலுவும், "நான் மட்டும் சிரத்தை எடுத்துக்கொண்டால் நாளை தினமேகூட அவளை அழைத்துக்கொண்டு எங்காவது போய்விடுவேன். அவள் எப்பொழுதும் தயார்தான்?" என்று சற்றுகூட மட்டுமரியாதையின்றி கேவலமாய்க் கூறினான்.

இதற்குமேல் ரங்காராஜனால் பொறுக்கமுடியவில்லை. மறுநிமிஷம் கண்ணாடிக்கல் பாலுவின் தலைமேல் விழுந்தது. பிறகு மேஜைகளும் நாற்காலிகளும் பறந்தன. கடைசியில் பாலு மூர்ச்சைஅடைந்து விட்டான்.

பிறகு டாக்டரின் பரிசோதனைக்குப்பின் அது மரண மூர்ச்சையாய் முடிந்தது. தன்னுடைய குடிவெறியினாலும் தான் காதலிக்கும் பெண்ணைப்பற்றி அனாவசியமாய் அவதூறு கூறியதாலும், தான் அவனுடைய கொலைக்குக் காரணமாய் இருந்ததை ரங்காராஜன் ஒப்புக்கொண்டான். இவனுக்கு முடிவு சிறைச்சாலை தான என்று அறிந்துகொண்ட இவன் சிநேகிதர்கள் இவனை எட்டிக்கூடப் பார்க்க விரும்பவில்லை. வீடு ஒன்று தவிர மற்றைய சொத்துகள் எல்லாம் கடன்காரர்களின் பாக்கிக்காக ஏலம் கூறப்பட்டது. இவனது வக்கீலின் கோர்ட் செலவுகளுக்காக இவனது வீடும் ஏலம் போடப்பட்டு இவன் நிற்க நிழலும் இன்றி நிர்க்கதியாய் விடப்பட்டான். கடைசியில் ஜூரிகள் இவனுக்கு ஏழு வருஷ சிறைத்தண்டனை விதித்தனர். இவன் கடைசியாய் சிறைக்குப் போவதற்குமுன் கல்யாணியை சேதுராமன் என்ற ஒரு பால்ய நண்பனுக்கு விவாகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதை அறிந்துகொண்டான்.

* * * *

தேவடியாள் தெருவில் முத்துப் பல்லாக்கு விட்ட ஷோக்மைனருக்கு சிறைவாசம் அவ்வளவு தகுதி இல்லைதான். கல்லுடைக்கவும மாவரைக்கவும் அவன் ஏவப்பட்ட பொழுது அவன் அடைந்த வருத்தம் அளவிடமுடியாது. சிறைச்சாலைக் கம்பிகளுக்கு வெளியே உள்ள மைதானத்தில் குழந்தைகள் குதித்து விளையாடுவது வழக்கம். அவை அறியாமையால் கைதிகளைக் கண்டு பரிகசிப்பது வழக்கம். அந்த காலையில் தான் அவன் அச்சிறுமியைக் கண்டது. மற்றக் குழந்தைகள் எல்லாம் செய்யும் கேலிக் கூத்துகளில்கூட அவளது குழந்தை மனம் செல்லாமல் சிறையில் வாடி வதங்கும் ரங்காராஜனைக் கண்டதும் தன் அழகிய கண்களினின்றும் சிறு துளிகளைச் சிந்தினாள். தான் தின்றுகொண்டிருந்த பணகூன்களை அவனிடம் கொடுத்தாள்.

ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதனுக்கு அவர் சென்னைக் கார்ப்பொரேஷனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதை யொட்டி மிஸஸ பணிக்கர் சமீபத்தில் ஒரு உபசரிப்பு நடத்தினர்.

ரங்காராஜனும் அதை தெய்வப் பிரசாதமாகக் கருதி மறுக்கத் துணியாது கையேந்தி வாங்கிக்கொண்டான். அவன அச்சிறுமியிடம் கொண்ட அன்பிற்கு ஒரு அளவே யில்லை. இரண்டு மூன்று நாள் இவ்விதம் நடந்தது. நாலாம் நாள் அவளைக் காணவில்லை. அவன் அதனால் அடைந்த விசனம் கூறமுடியாது. உடலினின்றும் உயிர் பிரிக்கப்பட்டதைப் போல் உணர்ந்தான். தலைபிற்றுக் கன்றை விட்டுப்பிரிந்த பசு போல் கதறி அழுதான். பிறகு அவளைக் காணவேயில்லை யாரோ உறவின்மார் வீட்டிற்கு வந்த குழந்தையை அதன் பெற்றோர் அழைத்துச் சென்றிருக்கலாம் என்று மனம் தேறினான். எனினும் இவன் மனதைவிட்டு அவ்வுருவம் அகலவே யில்லை.

ஏழு வருடங்களும் கடந்தன. அவன் சிறையில் இருந்து விடுதலை அடைந்தான். வீடு வாசல் ஏதுவுமின்றி அவன் எங்குசெல்வான்? தன் உயிருக் குயிராய் இருந்த சிநேகிதர்களிடமாவது ஏதேனும் உதவி பெறலாம் எனக் கருதி முதலில் வக்கீலைப்போய்ப் பார்த்தான். இவனுடைய பணத்தைக்கொண்டே பெரிய பங்களா வாசம்செய்யும் யோக்யதையை அடைந்த அதே வக்கில் இப்பொழுது இவனை மதிக்கவல்லை. இவனிடம் பிரதிப்பிரயோஜனமின்றி அனுவசியமாய் பேச்சுக்கொடுக்கவும் மனமின்றி இவனைத் திரும்பிப் போகும்படி அவசரப்படுத்தினான். ரங்காராஜன் மனம் வெறுப்படைந்தது. ஆனாலும் வேறுவகையின்றி திரும்பினான். எங்கும் இதேகதிதான்! பழைய சிநேகிதர்களில் ஒருவர்கூட இவனிடம் பேசவும் விரும்பவில்லை. இவனிடம் எப்படியாவது சிநேகிதம பெற வேண்டும் என்று வலிய வந்தவர்கள் எல்லாம் இவனைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். என்ன இருந்தாலும் இப்பொழுது ரங்காராஜன் தகுந்த விலை கொடுத்தேனும் இந்த ஒரு பாடத்தையாவது கற்றுக் கொண்டான். ஜென்மா ஜென்மேபி இந்தப் பாடம் ஒன்றே அவனுக்குப் போதும! ஆனால் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா என்றதையே இது ஞாபகமூட்டுகின்றது.

பசியால் கண்கள் அடைத்தன தள்ளாடிக்கொண்டே மெதுவாக நடந்து ஒரு சிறு வீட்டண்டைபோய் கதவைத் தட்டினான். ஒரு கிழவி கதவைத் திறந்தாள். தன் பரிதாப நிலையை அவளிடம் கூறி அழுது நின்றான். அவளும் பச்சாதாபத்தினால் அவனுக்கு உண்ண உணவும் உறங்க இடமும் அன்று உதவினாள். படுத்த உடன் களைப்பினால் அவன் உறங்கிவிட்டான் மறுநாள் காலைதான் அவன் மயக்கம தெளிந்து சுய அறிவைப் பெற்றான்.

அப்பொழுதுதான் நாம் முன்னர் ஆரம்பத்தில் கூறிய நினைவுகள் எல்லாம் அவனைப் பற்றி வருத்தின. தனக்கு உண்ண உணவும் படுக்க இடமும் கொடுத்த கிழவியை வாயாற வாழ்த்தினான். பிறகு எங்கு செல்கின்றோம் என்பதைக்கூட அறியாது கால் போன வழியே செல்லலானான். ஒரு பர்லாங்கு தூரம் கூடச் சென்றிருக்கமாட்டான். எதிரில் ஒரு எதிர்பாராத காட்சியைக் கண்டதும் திகைத்து நின்றான். ஆம்! ஒரு பெரிய மூன்றடுக்கு மாளிகை தீப்பற்றி எரிந்தது. பெருத்த சப்தமும் கூக்குரலும் வானைப் பிளந்தன. அளவற்ற புகை கிளம்பி மேலே சூரியனை மறைத்துக்கொண்டது. நெருப்பு ஜ்வாலைகள் மேலே கிளம்புவதைக் கண்டான். தீ அணைக்கும் படையினர்எவ்வளவோ முயன்றும் வீட்டின் அருகில் கூட செல்ல முடியவில்லை எல்லோரும் விம்மி விம்மியழுதார்கள். வாயைத் திறக்கக்கூட முடியவில்லை. இவனும் உண்மையைக் கிரஹித்துக்கொண்டான். குழந்தை வீட்டிற்குள் அகப்பட்டுக்கொண்டது. நெருப்புப் பிடிக்கும்பொழுது குழந்தை தாயிடம் இருந்தது. தொட்டிலில் படுக்க வைத்திருந்தாள். குழந்தையும் தூங்கிற்று. தாயும் வெளியில் ஏதோ காரியமாக வந்தாள். வீட்டில் இருந்தவர்கள் வீடு நெருப்பினால் பற்றி எரிவதைக் கண்டு பரபரப்பினால் ஓடி வெளியே வந்தார்கள். ஒவ்வொருவரும் குழந்தை அவரிடம் இருக்கிறது, இவரிடம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு வெளியே வந்தனர். கடைசியில் குழந்தை எவரிடமும் இல்லை. பிறகுதான் குழந்தை

தமிழ்நாட்டில்
குறைந்த சந்தா மாதப்பத்திரிகை

“சித்தன்”

ஒன்றே கட்டுரைகள், கதைகள், ஹாஸ்யம், உலக விநோதப, வைத்தியக்குறிப்பு சினிமா விமர்சனம், முதலியனகொண்டது மாதிரிப்பிரதி இனம். 3000 பிரதிகள் வெளியாகின்றன. விளம்பர விகிதம் குறைவு.
சந்தா உள்நாடு அணு 8. வெளிநாடு ரூ. 1.
மானேஜர், சித்தன், பழனி.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிபலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித சாழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்

“வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி”

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

இருந்த அறை நெருப்பினுல் பற்றி எரிவதைக் கண்டார்கள். பிறகு அழுகையும் பல்லைக் கடிப்பதும உதடுகளைக் கடிப்பதும் மாரடிப்பதும் நிரம்பின. துணிச்சலான உதவியில்லை. அன்புடன் வளர்த்த குழந்தையைக் காப்பாற்றும்படி படையினரை வேண்டுகின்றனர். ஆனுல் அவர்களோ கையை விரிக்கின்றனர்.

“எப்படியாவது எங்கள் சிறிய இனிய குழந்தையைக் காப்பாற்றுங்கள், எங்கள் சொத்து முழுவதையும கொடுக்கிறோம். எங்களுக்குச் சொந்தமான எதையும் கொடுக்கிறோம். எங்கள் குழந்தையைக் காப்பாற்றுங்கள். ஐயோ! எப்படியாவது எங்கள் குழந்தையைக்காப்பாற்றுங்கள்” என்று அலறுகிருர்கள்.

ஆனுல் ரங்கராஜன் மனம் மட்டும் ஒரே நிலையில் இருந்தது. இந்த வீட்டில் ‘தான்’ கால்மணிநேரம் முன்னதாக வந்து ஏதேனும் கேட்டிருப்பானுகில் துரத்தியிருப்பார்கள். சற்று நின்ருல் வீட்டு வேலைக்காரனை ஏவுவார்கள்.

பிறகு அவனையும் அறியாது ஏதோ சக்தி உள்ளிருந்து இவனைத் தூண்டியது. நெருப்பண்டை தலைகால் தெரியாது ஓடினுன். பிறகு திடீரென விழித்துக்கொண்டான். வீடு யாருடையது? தன்னை பகிஷ்கரித்த ஜனங்களில் ஒருவருடையதல்லவா? ஆனுல் ஒரு குழந்தை! தனக்கும் ஒரு காலத்தில் அன்பும் ஆதரவும் காட்டி தேறுதல் அளித்ததும் ஒரு குழந்தையே! வேறு ஒன்றும் தேவையில்லை! அந்தக் குழந்தைக்காகவேனும் இதைக் காப்பாற்றவேண்டும். மனதை ஒரே நிலையில் நிறுத்தி துணிவடைந்தான். திடு திடு என தன் உயிரையும் கவனியாது வீட்டிற்குள் ஒரே பாய்ச்சலாய் ஓடினுன். எல்லோரும் திடுக்கிட்டார்கள். ஆரவாரித்தார்கள். ரங்காராஜன் நெருப்பைச் சிறிதேனும் லக்ஷியம் செய்யவில்லை குழந்தை இருந்த அறையை அடைந்தான். சுற்றிலும் நெருப்பு! ஆனுல் ரங்காராஜன் அஞ்சவில்லை. திடீரெனப் பாய்ந்து அறையினுள் சென்ருன். ஆ! என்ன ஆச்சர்யம்! ரங்காராஜன் முகம் அத்துன்ப வேளையிலும் பிரகாசத்தால் பலர்ந்தது.

குழந்தையைக் கையால்தூக்கினுன். அவன் அறிவு சோர்ந்தது. அங்கிருந்து ஒரே பாய்ச்சலாய் வெளியில் ஓடி வந்தான். குழந்தையை எல்லோரும் ஆவலுடன் வாங்கிக்கொண்டார்கள். ரங்காராஜன் மயக்கத்தால் மூர்ச்சை அடைந்தான்.

* * * *

அவன் தெய்வலோகத்தில் தான் கண் விழித்தான் அவன் எண்ணமாவது அத்தன்மையதாய் இருந்தது. கை கால் முகம் எங்கும் கட்டுகள்! அவனை கண்ணிமை கொட்டாது ஒரு பெண் கூர்மையாய் கவனித்து வந்தாள். ரங்காராஜனும் விழித்தான். ஆம் சந்தேகமில்லை! கல்யாணியே அது! அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்தோடிற்று பேசமுடியாது அவன் மார்புமேல் சாய்ந்தாள் அவனும் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

“ஹும், என்னுடைய ஒரே குழந்தை! தாங்கள்தான் எனக்குத் திரும்பவும் உயிர் கொடுத்தீர்கள்” என்று கூறி கதறி அழுதாள். அந்த அழுகைக்குத் தான் என்ன அர்த்தமோ?

ரங்காராஜன் எழுந்திருக்க முயன்ருன், முடியவில்லை. பிறகு மெதுவாக, “கல்யாணி! அந்தக் குழந்தை! சிறையில் இருந்தபொழுது எனக்கு ஆறுதல் அளித்து உபசரித்த அதே குழந்தை! அது உன்னுடையதா” என்ருன். ‘இன்னம் ஒருதடவையாவது குழந்தையின் முகத்தைக் காணவேண்டும்.”

“ஆம்! ஆனுல் உங்கள் உடலில் ஏற்பட்ட கொடிய காயங்கள் எவ்வளவு பயங்கரம்!”

“ஊய்! சேதுராமனுக்கு சந்தோஷமாய் இருக்கும்” என்ருன் ரங்காராஜன்.

“ஆப்! தெய்வலோகத்தில் இருக்கும் அவர் நம்மைக் கண்டு சந்தோஷப்படுவார்; சந்தேகமில்லை. பாழும் சமூகக் கட்டுப்பாடு என்ற எட்டைத் தவிர்க்கவேண்டி சீக்கிரம் விவாகம் செய்ய விருபபி என் தகப்பனுர் எனக்கு விவாகம் செய்து வைத்தார். ஆனுல் கடவுள் உண்மைக் காதலை தடை செய்ய விரும்பவில்லை” என்று கூறி அவனை உற்று நோக்கினுள்.

பிறகு அவர்கள் மேலும் தங்களுக்கு அறிமுகமான பிரதேசத்தில் வாழ விரும்பவில்லை. இருந்ததை விற்று எடுத்துக்கொண்டு புதுமனிதர்கள் வாழும் வேறு தேசத்திற்குச் சென்று காதல் மணம் செய்துகொண்டனர். என்ன ஊர் என்று அறிய நேயர்கள் விரும்புவார்கள். “பேரைச் சொன்னுலும் ஊரைச் சொல்லக் கூடாது! நான் என்ன செய்வது?”

“ஸங்கீத அபிமானி”

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை

உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8
வெளிநாட்டு ,, ரூ. 2—0

1935-ம் வருஷத்திய காலிகோ பயிண்ட் செய்த வால்யும் விலை ரூ 3

ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

ஜவஹர்லால் நேரு
சுய சரித்திரம்

பாரத நாட்டின் வீர திலகத்தைப் பற்றிய இணையற்ற தமிழ் நூல்.

முதல் பாகம்
கிளேஸ் பதிப்பு
500 பக்கங்கள்
விலை ரூ. 2-8.

பிரதிகளுக்கு உடனே எழுதுக

2-வது பாகம் — விரைவில் வெளிவரும்.
விலை ரூ. 2-8.
முன் பணம் அனுப்புவோருக்கு 2 பாகங்களும் ரூ. 4-8-க்கு கிடைக்கும்.

“சுதந்திரச் சங்கு” காரியாலயம்,
திருவல்லிக்கேணி — சென்னை.

மலரிற் சிறந்தது மல்லிகை
குக்கரிற் சிறந்தது ருக்மணி

போலி குக்கர்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.
எல்லா குக்கர்களும் குக்கர்களாகாது.

ருக்மணி குக்கர்

தான் எந்தக் காலத்திலும் ஆரோக்யமும் சூடுமான ஆகாரத்தைக் கொடுக்கும். எல்லோரும் வாங்கும் பொருட்டு விலைகளையும் குறைத்திருக்கிறோம். 1 முதல் 16 பேர்கள் வரை சாப்பிடக் கூடிய 7 அளவுகள் 9 ரூபாய் முதல் 38 ரூபா வரை இருக்கின்றன.

விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
ராயபுரம், (12 சென்னை

எமது ஏஜெண்டுகள் :

திருவண்ணுமலை:—ராவ்சாகிப் M. சேஷாசலம் அய்யர்.
சேலம்:—சேலம் சுதேசி எம்போரியம் (போலீஸ் ஸ்டேஷன் எதிரில்.)
மதுரை:—மதுரை கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், நாய்க்கர் புதுவீதி
திருநெல்வேலி டவுன்:—P. . சாமி . கோ, தெற்கு ரதவீதி.
தூத்துக்குடி:—V. S. S காளியப்ப நாடார், கிரேட் காட்டன் ரோடு
கோயமுத்தூர்:—பெஞரீஸ் சில்க் எம்போரியம் 115, ராஜவீதி.
கரூர்:—S. K. ராஜகோபால் செட்டியார் திண்டுக்கல் ரோடு
நாகைப்பட்டினம்—நாகை நாஷனல் எம்பொரியம் லிமிட்டெட்
திருச்சினுப்பள்ளி:—S. முத்துக்குமாரசாமிப் பிள்ளை ஜெனரல் மோட்டார் ஸ்டோர்ஸ்.

த்யாகராஜ கிர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கிதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

கருண ஜூடவய்ய மாயய்ய
காவேடி ரங்கைய (கருண)

அநுபல்லவி

பரம புருஷவிநு மாபாலி பென்னிதானமா
வரத நலுகுரிலோ வரமொஸகி கரமிடி (கருண)

சரணம்

சேரடேஸி கனுலசே செலங்குபய நாச்
சாருல தோனு மரிஸத் பக்துல தோயாள்
வாருல தோ நீவு வர நைவேத்யமுல
ஞரகிம்சு வேளல ஹரி த்யாகராஜு நிபை (கருண)

II

மாயய்ய	—என்னையனே!
காவேடி ரங்கய்ய	—உபயகாவேரி மத்தியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதரே!
பரம புருஷ	—எல்லாங் கடந்த பரமாத்மாவே!
மாபாலி பென் நிதானமா	—எங்கள்பால் அளவற்ற நிதிபோல விளங்குடவரே!
வரத	—பக்தர்களுக்கு வரங்களை யளிப்பவரே!
விநு	—அடியேனுடைய விண்ணப்பத்தைக் கேளும்!
நலு குரிலோ	—நாலுபேர்கள் முன்னிலையில்
வரமு ஒஸகி	—(என்னைப் பாராமுகம் செய்யாமல்) வரங்கொடுத்து
கரமிடி	—கைகொடுத்து,
கருண ஜூடவைய	—கருணை செய்யுமையனே!
ஹரி	—ஹரியே!
சாரடேஸி கனுலசே செலங்குபய நாச்சாருலதோனு	—விசாலமான நயனங்களோடு விளங்கும் உபய நாச்சியார்களுடனும்,
மரிஸத்பக்துலதோ	—மற்றும் பக்தர்களோடும்,
ஆள்வாருலதோ	—ஆழ்வார்களோடும்,
நீவு	—தேவரீர்
வர நைவேத்யமுல	—சிறந்த நைவேத்தியங்களை (தளிகைப் பிரசாதங்களை)
ஆரகிம்சு வேளல	—அமுது செய்தருளும் வேளையில்
த்யாகராஜு நிபை	—த்யாகராஜன் மீது
கருண ஜூடவைய	—கருணைபுரியும் ஐயனே!

III

இந்தக் கிர்த்தனம் அச்சுப் பிரதிகளில் பாட பேதமுற்றுக் காணப்படுகிறது. இங்கு அனுசரிக்கப்பட்ட பாடம் ப்ரம்ஹஸ்ரீ தில்லை ஸ்தானம் நரஸிம்ம பாகவதர்கள் பதிப்பில் உள்ளது. அதிலும், சிட்டாஸ்வரம் சிறிது வித்யாசப்பட்டிருக்கிறது. ஆதி அண்டு கம்பெனியார் பதிப்பித்த புத்தகத்தில், 'மாபால டேலெனீதனமா' என்றும், 'செலங்குவேள நா-சாருல தோனு' என்றும், 'த்யாகராஜுநி கரமிடி' என்றும் மூன்றிடங்களில் பாட பேதங் காணப்படுகிறது. நரஸிம்ஹ பாகவதர் பாடமே சுத்தமாகவும் பொருத்த மாகவுமிருக்கிறது.

இந்தக் கிர்த்தனம், ஸ்ரீரங்கநாதருடைய இராப்பத்து உத்ஸவ ஸமயத்தில் ஸ்வாமி ஸ்ரீரங்கத்துக்கு விஜயம் செய்த போது பாடப்பட்ட தென்பது அறியத்தக்கது. 'நாச்சாருலதோ'—'ஆள்வாருலதோ' என்ற இடங்களில் ஸ்வாமிகள் அப்படியே

(10-ம் பக்கம் பார்க்க)

பண்டிகை தினங்கள் நெருங்கிவிட்டன!

ஆனால் என்ன?

விலையில் குறைந்த கழுத்து நிறைந்த அழகு மிகுந்த

லேடீஸ் செயின்

ஒன்றே போதும்!

எந்த காலத்திற்கும் குழந்தைகளும் பெரியவர்களும்

உபயோகிக்கத் தகுதியான நகை.



தேசமெங்கும்

தினசரி

வேண்டப்படும்

செயின்

ரூபா

37

எல்லாப்

பெண்களாலும்

ஆசிக்கப்படும்

நகை.

உத்திரவாதம் – சவரன் பொன்னுல் செய்யப்பட்டது. நீலம், பச்சை, ஊதா, சிகப்பு முதலிய கற்களில் ஒரு தினுசாகவோ அல்லது கலந்தோ கிடைக்கும். நீளம் 25 அங்குலம்.

சூராஜ்மல் லல்லுபாய் & கம்பெனி,

ரத்ன வியாபாரிகள்,

313, எஸ்ப்ளனேட், : : மதராஸ்.

தமிழ்ப் பதங்களை யாண்டிருப்பதைக் கவனிக்கவும்; 'வரதராஜ' என்ற கீர்த்தனத்தில் 'பெருந்தேவி' என்றும், 'தாமா' என்ற கீர்த்தனத்தில் 'திருப்பதிச'என்றும் பிரயோகித்திருப்பது நோக்கத்தக்கது.

ஸ்வாமிகள் இரண்டு ஸமயங்களில் ஸ்ரீரங்கத்துக்கு விஜயம் செய்திருக்கிறாரென்று தெரியவருகிறது. 'ராஜுவெடலே' 'விநாத' என்ற கீர்த்தனங்களால் ப்ரம்மோத்ஸவத்தின்போது குதிரை வாஹன ஸேவையைத் தரிசித்ததாகவும், 'ஓரங்க சாயி' 'கமனஜுடவைய' இவற்றால் வைகுண்ட ஏகாதசி உத்ஸவத்தின்போது தரிசித்ததாகவும் தெரியவரும். இவ்வுத்ஸவத்தின்போது ரங்கநாதன் ஆழ்வாராசாரியர்களுடன் எழுந்தருளியிருப்பது வழக்கம்.

IV

ஸாரங்க. திஸ்ர த்ரிபுட சாபு.

இது 72 மேளகர்த்தா முறையின்படி 65-வதான (மேச) கல்யாணியில் ஜன்யம். 64–வதான வாசஸ்பதியில் ஜன்யமென்று சிலர் கொள்கை. ஆனால் அனுஷ்டானத்தில் அவ்வாறு காணவில்லை. வக்ர ஸம்பூர்ண ராகம்—பாஷாங்கம்-(அதாவது அன்ய ஸ்வரங்கள் ஓரோரிடத்தில் பேசும் இராகம்). ஸரிகம பதநிஸ்-ஸ்தாபம ரிகமரிஸ என்ற நடையையுடையது. ரிகமரிஸ என்னுமிடத்தில் சுத்த மத்யமமே பேசும். சுத்த ரிஷபம் அந்தரகாந்தாரம், சதுச்ருதிதைவதம் ராகச்சாயா ஸ்வரங்கள். அவரோஹணத்தில் சுத்த மத்யமமும் இராகச்சாயா ஸ்வரமாகும். இந்த ராகம் மந்த்ர நிஷாதத்திற்குக் கீழாகவாவது, தாரகாந்தாரத்திற்கு மேலாவது பிரஸ்தரிக்கப்படுவதில்லை. கீத கீர்த்தனாதிகளின் அமைப்பும் இதற்கேற்றவாறே உள்ளன. ஆரோஹணத்தில் 'ஸரிகம ரிப மபதநிஸ்' என்றும் ப்ரயோகமுண்டு. 'ஸரிஸ பாம'–'ஸஸபாம' என்பனவற்றிற்போல ஷட்ஜத்தை யொட்டியவாறு பஞ்சமத்தைப் பிடிப்பது அழகாக இருக்கின்றது.

பல்லவி

; * ஸா ;	ஸா ; ஸா	பா ; ;	மா ; பாமா	பா ; ;	; ; மாபா	தா ; நீ	; ஸ்ா ; ;
; * க ;	ரு ; ண	ஜு ; ;	ட ; வை	ய ; ;	; ; மா	யய் ;	; ய ; ;
; * ஸ்ா ;	ஸ்நிதாபா ;	பா மா ;	ரீகாமாரீ	ஸா ; ;	; ; ; ;	; ; ;	; ; ; ;
; * கா ;	வே டி ;	ரங் ;	தை	ய ; ;	; ; ; ;	; ; ;	; ; ;

அனுபல்லவி

; * ஸ்ாஸ்ா	ஸ்ாதாபா	பா பா ;	மாபாதாநீ	ஸ்ாஸ்ா ;	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்ா ; ஸ்ா ;	தாநீஸ்ா ;
; * ப ர	ம பு	ருஷ ;	வி து	மாபா ;	ல ; பென்	நி ; தா ;	ந மா ;
; * நீஸ்ா	ரீ ; ஸ்ா ;	தா பா ;	தாநீஸ்ா	; ஸ்ாஸ்ா	ஸ்ாதாபா ;	மாரீ ;	காமாரீஸா
; * வர	த ; ந ;	னு கு ;	ரி லோ	; வர	மொ ஸ ;	ங ;	ட மி
ஸா * ஸாபா	; மாபாதா	; பா மா	ரீகாமாரீ	; ரீஸா	நீஸா ரீஸா	; ஸா ஸா	; பாடா ;
டி *							
தாபாம	ரீகாமாபா	ரீ ; கா	மாபாதா ;	பாமாபா	; தாநீஸ்ா	தா ; நீ	ஸ்ாரீஸ்ாகா
ரீ ஸ்ா நீ	; ரீஸ்ாநீ	தா ; ஸ்ா	நீதாபா ;	நீதாபா	மா ; தாதா	பாமா ரீ	; பாமா ரீ
; ஸாரீ	; ஸா பா ,	மா தா ;	பாஸ்ா ; நீ	ரீ ; ஸ்ா	க்ாரீநீஸ்ா	தாபாமா	ரீகாமாரீ
ஸா * (கருணஜுடவய்ய)							

சரணம்

; * பா ;	பா ; பா ;	பா மா ;	ரீகாமாரீ	ஸாஸரி	கா ; மா ;	பா ; ;	பா ; பா ;
; * சே ;	ர ; டே ;	வி க ;	னு வ	சே செ	வங் ; கு ;	ப ; ;	ய ; நாச் ;
: * மாபா	தாநீஸ்ா ;	தா பா ;	பாமாரீ ;	; ரீ கா	மா ரீ . ஸா	ரீ கா ;	மா ; பா ;
; * சா	ரு ல ;	தோ ;	ந ம ; ரி	; ஸ	த்பக் ; து	ல ;	தோ ; யாள் ;
; * ஸ்ாஸ்ா	ஸாதாபா	பா பா ;	மாபாதாநீ	ஸ்ா ; ஸ்ா	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்ா ஸ்ா ;	தாநீஸா ;
; * வா	ரு ல	தோ ;	நீ	வு ; வ	ர ; தை ;	வே ;	த்யமுல ;
; * நீஸ்ா	ரீ ; ஸ்ா ;	தா பா ;	தா நீ ஸ்ா ;	; ஸ்ா ஸ்ா	ஸ்ாதாபா ;	மா ரீ ;	கா மா ரீ ;
; * ஆர	ழிம் ; ச ;	வே ;	ள ல ;	; ஹரி	த் யா க ;	ரா ;	ஜு நி ;
ஸா *							
பை *							

(இங்கு சிட்டாஸ்வரத்தைப் பாடிப் பல்லவியை எடுத்துக்கொள்ளவும்.)

சிறுவர் பகுதி

மோசம் எப்பொழுதும் நாசம்

(ஸ்ரீமான் எம். குமரசாமி பிள்ளை.)

பாண்ட மங்கலம் என்பது காவேரிக்கு அருகிலுள்ள ஓர் அழகிய கிராமம். அதில் அற்புத சாமி பிள்ளை என்ற ஒருவர் வசித்து வந்தார். அந்த ஊரில் அவரை விட பணக்காரர் வேறு ஒருவரும் இல்லை. அவர் மிகுந்த தயாள குணமுள்ளவர். அவருக்கு "தர்மதாதா" என்ற வேறு பெயரும் உண்டு. யார் போய் கடன் கேட்டாலும் இல்லை என்று சொல்லுவதில்லை. வட்டி, பாண்டு, பத்திரம் எதுவும் கிடையாது. "நம்ம பணமானல் நமக்கு வரட்டும், இல்லையானல் போகட்டும்" என்பது அவருடைய துணிபு.

ஏராளமான பேர் அவரிடம் கடன் பெற்றுச் சென்றனர். பக்கத்து கிராமத்திலுள்ள சவடால் சங்கரனும் இதைக்கேள்வியுற்று தானும் சென்று நூறு ரூபாய் கடன் வாங்கிவந்து தாராளமாகச் செலவு செய்ய வேண்டுமென்றும், திருப்பிக் கொடுக்காமல் ஏப்பம் விட்டு விட வேண்டுமென்றும் நினைத்தான்.

அதன்படியே ஒரு நாள் தர்மதாதாவிடம் வந்து "என் தோட்டத்தில் ஒரு கிணறு வெட்ட வேண்டும். அதற்காக நூறு ரூபாய் கடன்கொடுங்கள். இரண்டு மாதத்தில் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று சங்கரன் கேட்டான். அதற்கு அவரும் மனமுவந்து ரூபாயாக நூறு ரூபாய் கொடுத்தார். சங்கரனுக்கு நூறு ரூபாயுடன் பரம சந்தோஷத்தோடு வீடு திரும்பி வந்தான்.

வரும் வழியில், ஒரு கிணற்றில் குளித்துவிட்டு ஊருக்குப்போக நினைத்து ஒரு கிணற்றங் கரையில் பண முடிப்பை வைத்து

விட்டு, கிணற்றில் இறங்கி குளித்துக் கொண்டிருந்தான். அதுசமயம் அவ்வழியே வந்த ஒரு எருமைமாடு அதன்மீது ஒரு "மொத்தை" சாணத்தைப் போட்டுவிட்டுப் போய் விட்டது. குளித்துவிட்டு திரும்பிய சங்கரன், முடிப்பை வைத்த விடம் தெரியாமல் தேடி விட்டு, "திருடனைத் தேள் கொட்டிய துபோல்" வீடு போய்ச் சேர்ந்தான்.

சில தினங்கள் கழிந்தன. பின்னும் ஒரு நாள் கடன் வாங்கிக்கொண்டு எங்கேயாவது ஓடிப்போய் விட வேண்டும் என்று நினைத்தான் சங்கரன். அதன்படியே ஒரு நாள் சென்று கிணறு தோண்டியாய் விட்டதென்றும், இறைப்புக்கு ஒரு ஜதை எருதுகள் வாங்குவதற்கு பணமில்லை என்றும் நூறு ரூபாய், முன் போல் கடன் கொடுக்கும்படியும் கேட்டான். அவரும் உண்மை என்று நம்பி நூறு ரூபாய் கொடுத்தார்.

"கோட்டையைப் பிடித்து விட்டோம்" என்றெண்ணிக் கொண்டு ஊர் நோக்கிப் புறப்பட்டான். வரும் வழியில் முன்போல் முன் குளித்த கிணற்றில் குளித்து விட்டுப் போகலாம் என நினைத்து பண முடிப்பைக் கரையில் வைத்துவிட்டு கிணற்றில் குளித்தான். அது சமயம் அங்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்த கழுகு, அந்தப் பண முடிப்பை தூக்கிக்கொண்டு போய் அருகிலுள்ள ஆல மரக் கிளையில் வைத்து விட்டது.

பிறகு சங்கரன் எவ்வளவு தேடியும் பண முடிப்பைக் கண்டு பிடிக்க முடியவில்லை. உடனே சங்கரனுக்கு புத்தி வந்து விட்டது. "ஆ! நாம் பிறரை மோசம் செய்யக் கருதினோம். ஆண்டவன் நம்மை மோசம் செய்[...] விட்டார். மோசம் எ[...] பொழுதும் நாசமே[...]

என்று பலவாறு சிந்தி[...]தான்.

"பட்டினி கிடந்தேனு[...] அந்த தர்மதர்தாவி[...] கடனைத் திருப்பிக் கொ[...]த்து விட வேண்டும்[...]" என்று உறுதிகொண்[...] 'எந்த வழியில் கட[...] கட்டுவது' என்று சிந்தி[...]த்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

(30-ம் பக்கம் பார்க்க)

இந்தியா கவர்ன்மெண்டில் மெடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & I. . . ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா
ஸில்வாதி லேகியம்

பித்தவாயு, கில் ... பித[...] மயக்கம், பலஹீனம், அன[...] துவேஷம், அஜீர்ணம், மல[...] சிக்கல் இவைகளைக் கண்டிக்கும் ½ சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3 வி. பி. வேற

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவை[...]களில் இது ஒன்றுதான் மா[...]கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0 வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

கனம் சீப் ஜஸ்டிஸ் ஸர் M. வேங்கடசுப்பராவ், Kt., சென்னை ஹைகோர்ட்டு அவர்கள் எழுதுகிறார்:—

"நான் வைத்திய ஸித்தாச்ரமத்தைப் பார்வையிட்டேன். அ[...] செய்து வரும் வேலைகளுக்கு எல்லா அபிவிருத்திகளையும் நான் கோ[...]கிறேன். இவருடைய பிரயத்தனங்கள் இந்த பூர்வீகமான ஆயு[ர்]வேதத்தை சாஸ்திரீயமாக பயின்று அனுபவத்திற்குக் கொண்டுவரு[ம்] மார்க்கத்தில் ஆதரவுக்கும் அபிவிருத்திக்கும் தகுந்தவைகளே."

கனம் ராஜா of சிவகங்கா அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிகளை மிக்க சந்தோஷத்துடன் நான் பொது ஜனங்களுக்கு சிபார்சு செய்கிறேன். இவ[ரு]டைய மருந்துகளை உபயோகிக்கும்படி ஸந்தர்ப்பம் சேர்ந்து அவைகளை உபயோகித்து அம்மருந்துகளால் நான் ஜெயமடைந்து இருக்கிறேன். வைத்தியமுறையில் ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களிலும் அவர் எனக்கு பூர்ணமான திருப்தியைக் கொடுத்திருக்கிறார்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்

D. R. புதிய மோஸ்தர்கள்

சாம்பிலில் பாருங்கள்.

இனி மோஹினி, இந்திராணி, சுனந்தா பார்டர், ஒரு பூனை, ஒரு பெங்களூர் தலைப்பு புடவைகளையே உபயோகியுங்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு மாதிரி புத்தகம் உசிதம்.

ஜரிகைக்கும் தீர்த்தமைக்கும் தர்மாவரம் சேலைகள்

மைசூர் பட்டு

D. R. Narayanaswamy & Sons, Darmavaram (Anantapur Dt)

எஜமானி (புதிய வேலைக்காரியிடம்):—, நான் அதிகமாகப் பேசுகிறவளல்ல. நான் கையை அசைத்தால் நீ உடனே வந்து 'என்ன' வென்று கேட்கவேண்டும். தெரிந்ததா?

வேலைக்காரி:— நான்கூட அதிகம் பேசுகிறவளல்ல. நான் தலையை அசைத்தால் 'வர முடியாது' என்று அர்த்தம்

* * * *

முதன் முதலாக ஒருவன் நாடகம் பார்க்கப்போ யிருந்தான். ஆனால் அவன் சிக்கிரமாகவே வீடுதிரும்பிவிட்டதால் அவன் தகப்பனார் சந்தேகப்பட்டு, 'ஏன் நாடகம் பார்க்கவில்லையா?' என்றுகேட்டார்

'ஆமா, பார்த்தேன்'.

'முழுதும் பார்க்கவில்லையா?'

'இல்லை. நாடகம் அரைமணி நேரம் நடந்தது. அடுத்த காட்சி இரண்டு வருஷங்களுக்குப் பிறகு நடக்கிறது' என்று ப்ரோக்ராமில் போட்டிருக்கிறது. நாடகத்தின் பாக்கியைப் பார்ப்பதற்கு இன்னும் இரண்டு வருஷம் கழித்துத்தானே செல்லவேண்டும்.'

* * * *

'இந்தக் கூந்தல் வளரும் தைலத்திற்கு உத்திரவாதம் உண்டா'?

தைலத்துடன் நாங்கள் கொடுக்கும் நல்லசீப்பு ஒன்றே உத்திரவாதமல்லவா!'

* * * *

ஒரு உத்தியோகஸ்தர் கோர்டிற்கு அப்லைஸராக அழைக்கப்பட்டார். அவர் ஜட்ஜியிடம் சென்று.தமக்கு ஆபீஸில் அதிகவேலை இருக்கிறதென்றும், தாம் வர முடியாதென்றும் அதற்கு மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஜட்ஜ்:— நீங்களில்லாமல் உங்கள் ஆபீஸ் வேலை நடைபெறாதா?

"நடைபெறுமலென்ன? ஆனால் அது சொந்தக்காரர்களுக்குத் தெரியக் கூடாது."

* * * *

ஒரு போர்மன் புதிதாக உத்தியோகத்திற்கு வந்த வேலைக்காரனைப் பார்த்து ஒரிடத்தைக் காட்டி அதன் அகல நீளத்தை அளந்து வரும்படி ஒரு இரண்டடி 'ஸ்கேலை'க் கொடுத்தார்.

கால்மணி நேரத்தில் திரும்பி வந்த அவனைப் பார்த்த போர்மன் "என்ன அகலம், என்ன நீளம்?" என்று கேட்டார்.

"அகலம் இந்த ஸ்கேலால் நாலும் நான்கு விரலும். நீளம் இதால் ஆறும் மூன்று ஜாண் இரண்டு விரலும்"

* * * *

இருவர் அடுத்தடுத்து வசித்து வந்தனர். ஒரு நாள் ஒருவர் அடுத்த வீட்டுக்காரரிடம் சென்று "உங்களிடம் கிராமபோன் இருக்கிறதே, எனக்கும் கேட்கிறபோது சிறிது நேரத்திற்குக் கொடுத்து உதவுங்கள்" என்றார்.

"அதற்கென்ன பிரமாதம். நான் கேட்கும்போதெல்லாம் நீங்கள் கடன் கொடுத்து உதவுவதாகவிருந்தால் எனக்கு யாதொரு ஆட்சேபமும் இல்லை."

* * * *

ஒரு லோபியைப் பார்த்து ஒருவன் "நீ ஏன் இவ்வளவு கேவலமாகச் சொக்காய் துணிமணிகள் அணிந்துகொள்ளுகிறாய்?" என்று கேட்டான்.

லோபி:— இது விஷயத்தில் நான் எப்பொழுதும் லோபத்தனமாக இருப்பதில்லையே.

"இல்லை. உன் தகப்பனார் எவ்வளவு டாம்பீகமாக இருந்தார். நீ லோபியாகத்தான் இருக்கிறாய்."

"இந்தத் துணிமணிகள் எல்லாம் என் தகப்பனாருடையதுதான். தையற்காரன் வெட்டித் தைத்து எனக்குச் சரியாகவிருக்கும்படி செய்துவிட்டான்'.

* * * *



முதன் முதலாகக் கட்டப்பட்டுள்ள இரண்டு சக்கர மோட்டார் லண்டனுக்கு வந்திருக்கிறது. இது மோட்டார் சைகிளைப்போல் குறைந்த செலவில் மோட்டாரைப் போன்ற சௌகரியங்கள் கொடுக்கக் கூடியதாகவிருக்கிறது.

NO MORE GREY HAIR

வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப் புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.

KESHKALA
RESTORES NATURAL TINT

Obtainable from:—

அப்பா & கம்பெனி, சைனுபஜார் ரோட், மதராஸ். வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சி & டி கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-பி-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொளும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No. (M)5506. Bombay 14.

'EVEREST'
COPYING & LEAD PENCILS
'EVEREST'

Carbon Papers are the best in the Market.
Sole Distributors in INDIA.

P. R. NATHAM & Co., High Class Stationers.
Phone 2305 China Bazaar Road, MADRAS.

திருவாங்கூர் மஹாராஜா பிறந்த தினக் கொண்டாட்டத்தை பொட்டி பம்பாயிலுள்ள திருவாங்கூர் வியாபார ஏஜன்ட் ஸ்ரீமான் காஞ்ஜி த்வாகான் தாஸ் நடத்திய விருந்தின்போது எடுத்த படம்.

நாட்டு நடப்பு
சித்திரக் கண்ணாடி

சீனவில் இரானிய ஸ்தானீகர் காரியாலயத்தை ஸ்தாபித்து விட்டுத் திரும்பிய செய் ஒஸ்டாவன் (இடது பக்கம்) மாட்ரிட் நகரில் சர்க்கார் துருப்புகள் கலகக்கார்மீது சுடுகின்றனர்.

ஷோரனூரிலிருந்து செங்கோட்டைக்கு மாற்றப்பட்டுச் செல்லும் ரயில்வே ஆடிடர் மிஸ்டர் ஸ்பிங்கிற்கு ஒரு உபசாரம் நடத்தப்பட்டது.

நரைமயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெளுப்பாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலின் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலின் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பேனி

(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)

பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—

ஜே. ஹஸாரிமால் & கம்பேனி, 260, சைனாபஜார் ரோட,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—

தாதா & கம்பேனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—

பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

ரூ. 500 இனம்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகப் பிரசித்தி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co

(34) Panchpota, Bengal.

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தேசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொப்பலர், N. சுப்பிரமணியம்,

நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)

வாலாஜாபாத், S. I. R. சென்னை

வலுவாகவும்,

நிரந்தரமாகவும், பத்திரமாகவு மிருக்க இரும்பையே கட்டிடங்களில் உபயோகியுங்கள்.

உயர் ரகத்திற்கு

டாடா இரும்பையே

கேளுங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும் வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும் இருக்கின்றனர்.

Tata Iron & Steel Co., Ltd.,

18 எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

தந்தி: IRONCO MADRAS போன்: 2703.

உங்கள் குழந்தைக்கு

டோங்கரேயின்

பாலாம்ருதமும்

கொடுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. டோங்கரேயின் பாலம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.
2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.
3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.
4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது

மதராஸ் ஏஜண்டுகள் :

ஏ. பி. பரேக், 268 சைனாபஜார் ரோட்.

அசல் புஞ ஜாகர்

லவரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)

நல்முத்துக்கள்

கிடைக்குமிடம் :

சிமன்லால் பிரதாப் சந்த்

175, சைனாபஜார், மதராஸ்.

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :

187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரிமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,

செக்ரிடரி.

HAVE A SOUND SLEEP

By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

				Ordi-nary.	Supe-rior.	Best	
6'	x 3½'	x 3½'	Re.	1- 0	1- 4	1- 8	each
6'	x 4'	x 4'	„	1- 4	1- 8	1-12	„
6½'	x 4½'	x 4½'	„	1- 8	1-12	2- 0	„
7'	x 5'	x 5'	„	1-12	2- 0	2- 4	„
7½'	x 6'	x 6'	„	2- 0	2- 4	2- 8	„

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free. POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,

12, Sikderpara Lane, Barabazaar,

CALCUTTA.

ராதா

(திருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை.)

முன் கதைச் சுருக்கம்.

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த நந்தகோபமுதலியாரின் குமாரி ராதாவிற்கு அமரேசன் செட்டியார் தமிழ்ப்படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார். நந்தகோபரும் அவரது மனைவி அநந்தகல்யாணி அம்மாளும் தாய் தகப்பனற்ற அமரேசனை மிகவும் பக்ஷமாக நடத்திவருகின்றனர் சிலகாலத்தில் அமரேசன் அவர்களது குடும்பத்திற்கே உற்ற தோழனுகிருன்.

நந்தகோபரின் பிறப்பிடம் பாற்கடல். அங்கு அவரது மைத்துனன் நச்சுமுதலியார் தனது ஏராளமான சொத்துக்களை அழித்து சிறைக்கும் போய்வந்தார். அவரது அந்தரங்க நண்பன் பிச்சு அய்யர். நச்சுமுதலியாரின் பிள்ளை தண்டபாணியும் தகப்பனைப்போல் குடி, விலைமாதர்கள் முதலிய விஷயங்களில் ஈடுபட்டான். நந்தகோபர் தாம் ஸ்வயமாகச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பாற்கடலில் சொத்துக்கள் வாங்கியிருந்தார். அதை நச்சு முதலியே மேற்பார்வை பார்த்து வந்தார்.

ஒரு சமயம் நந்தகோபர் பாற்கடலுக்கு வந்து விட்டுத்திரும்புகையில் நச்சு முதலியார், தண்டபாணிக்கு ராதாவை பெண் பேசத்தாம் மகேந்திரம் வரப்போவதாய் கூறவே நந்தகோபரும், "வாருங்கள், அமைப்பிருந்தால் நடக்கட்டும்" என்று கூறிச் சென்றூர்.

4. காதலர் கவலை

பாற்கடல் விட்டு மகேந்திரம் சென்ற நந்தகோபர் தன்னிடம் நச்சு முதலி பெண் கேட்ட விஷயத்தை மனைவியிடம் சொன்னபொழுது,

அநந்தகல்யாணி:— உங்களுக்கு இன்னும் பண்ணைவீட்டாசை இருக்கிறதா?

நந்த:—அநந்தா, சொத்தெல்லாம் போய்விட்டதென்று சொல்கிறுயா? நம்முடைய சொத்து யாருக்கு? எல்லாம் ராதாவுக்குத்தானே? அந்நிய மனுஷன் கொண்டுபோவதை நமது வழியில் ஒட்டிய தண்டபாணி கொண்டுபோனுலென்ன?

அநந்:—நான் சொத்தை விரும்பவில்லையே? தண்டபாணி சிற்றப்பனைவிடப் பெரிய துஷ்டனுய் வருவான். மெட்ரிக்குலேஷன் வரையாவது படித்தானு? நல்ல செய்கையும் நல்லகுணமுமாவது இருக்கிறதா? ஆனும் பெண்ணும் மரியாதைகெட்ட வீட்டில் நமது ராதாவைக் கொடுப்பதில் சிறிதும் மனமில்லை தவிரவும், பதினைந்து வருஷங்களுக்கு முன் இந்த நச்சுமுதலி செய்த கொடுமைகளை அதற்குள் மறந்துவிட்டீர்களா?

என்று பண்ணை வீட்டுச் சம்பந்தத்தை ஆக்ஷேபித்துப் பேசவே, நந்தகோபரும் மனைவியின் நியாயத்தை உணர்ந்து பேசாதிருந்துவிட்டார். மறுநாள் மாலை அமரேசன் வந்து ராதாவுக்குப் படிப்பித்து விட்டு வெளியேறும் சமயம்.

அநந்:—தம்பீ, அவசரமில்லையே? கொஞ்சம் இருங்களேன்? ராதாவின் கல்யாண விஷயமாய் ஒரு சமாசாரம் சொல்ல வேண்டும்.

அம:—(திகைத்து) அம்மா, என்ன சமாசாரம்?

அநந்:—ராதா இதுவரை நல்ல அதிர்ஷ்டசாலிதான். இனி எப்படியோ? ராதாவின் அப்பா பாற்கடலில் ஒரு மாப்பிள்ளை பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

அம:—அம்மா, மாப்பிள்ளையா? ராதாவுக்கா? மாப்பிள்ளையா?

அநந்:—பண்ணை வீட்டில் ஒரு முறை மாப்பிள்ளை இருப்பதாய் நான் சொல்லவில்லையா? அவன்தான் மாப்பிள்ளை இந்த வீட்டு முதலியார்வாளுக்கு யாராவது இனிப்பாய் பேசி ஒரு நாள் விருந்தும் செய்துவிட்டால் எந்தக் காரியத்துக்கும் சரி சரி யென்று தலையசைத்துவிடுவார்கள். தம்பீ, நான் ஏதாவது முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆலோசிக்க வேண்டுமானல் தங்களைத் தவிர சொந்தமானவர்கள் இல்லை இந்தத் தெலுங்கு நாட்டிற்கு வந்து இதுவரையும் தங்களைப்போல் எங்களுக்கு அந்தரங்கமானவர்கள் கிடையாது. தாங்களும் ராதாவின்மீது அதிக பக்ஷம் வைத்துப் படிப்பிக்கிறபடியால் சொல்லுகிறேன்.

அம:—அம்மா என் மனத்தில் உங்கள் குடும்பத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணத்தை வெளியிட்டால், முகஸ்துதி செய்வதுபோலிருக்கும். மாதா பிதாவைக் கண்டு கேட்டுமறியாத நான், உங்களையும் முதலியாரவர்களையும்தான் எனது அன்னையும் பிதாவுமென்று எண்ணியிருக்கிறேன். உலகத்தில் என்போன்ற ஏழைகள் தங்கள்பேரில் விசுவாசமாய் நடப்பது பெரிதல்ல. மேலான பதவியிலிருக்கிற தாங்கள் என்னை ஒரு பொருட்டாய் எண்ணி இவ்வளவு அருமையாய் நடத்தி வருவதுதான் ஆச்சரியம் நீங்களும் உங்கள் அருமைக் குழந்தை ராதாவும் க்ஷேமமாய் வாழ வேண்டுமென்பது எனது பிரார்த்தனை. அம்மா, கல்யாண விஷயமாய் ஏதோ சொன்னீர்களே?

அநந்:—தம்பீ, அந்த மாப்பிள்ளை பெரிய குடும்பமென்பதைத் தவிர, அவன் ராதாவுக்கு இசைந்த மாப்பிள்ளையல்லவென்று எனக்குத் தோன்றுகிறது தங்கள் வயது தானிருக்கும். மெட்ரிக்குலேஷன் வரை வாசித்திருப்பதாய் கேள்வி. இந்த ஜன்மத்தில் பரீக்ஷை தேறமாட்டான். அந்தஸ்துக்கு வாசிப்பதைத் தவிர, படிப்பில் ஸாரமில்லை. தமிழும் கூட நன்றாய்த் தெரியாது. அதாவது போகட்டும்; நடை மிகவும் கேவலம். கெட்ட செய்கைகள் ஒன்று பாக்கியில்லாமல் படித்துக்கொண்டுவிட்டான். இனி, அவனுடைய தாயார் என்னுடைய சம்பந்தக்காரி ஒருத்தி தலையெடுத்திருக்கிறுள். அவள் ஆயுள் வரை என்னுடைய ராதாவை அந்த வீட்டிற்கனுப்ப எனக்கு இஷ்டமில்லை.

அம:—அந்த அம்மாள் அவ்வளவு குணக்கேடுள்ளவளா?

அநந்:—குணக்கேடு மட்டுமென்றல் குற்றமில்லையே? அவள் என ராதாவிற்கு மாமியென்ற ஸ்தானத்திலிருக்கச் சிறிதும் யோக்யதையற்றவள். நான் அவ்வளவுதான் சொல்லலாம். இனி, மாப்பிள்ளையின் சிறிய தகப்பனர் என் அண்ணு நச்சாடரவலிங்க முதலியார் பெருமையை நாங்கள் வாய் திறந்து பேசவும் நாவில்லை நம்முடைய ராதாவுக்குங்கூட அவர்களைக் கொஞ்சமும் பிடிக்காது அதுவும் நீங்கள் பாரதம் சொல்லிக் கொடுத்த பிறகு ராதா அந்த அண்ணுவை "சகுனி மாமா சகுனி மாமா" வென்று எனனிடம் பரிகாசம் செய்கிருள்.

அம:—நீங்களே இப்படிப் பேசிக்கொண்டு, அந்த மாப்பிள்ளையை உத்தேசிக்கக் காரணமென்ன?

அநந்:—நான் உத்தேசிக்கவில்லையே? முதலியார்வாளுக்குக் கொஞ்சம் எண்ணமிருக்கிறது. அவர்களுக்குப் பண்ணை வீட்டார் சொந்தப் பந்துக்கள். நான்மட்டும் கொஞ்சம் அந்நியம் அன்றியும், நச்சு முதலியார் யாரையும் வசப்படுத்திவிடுவார். முதலியார்வாளோ, ஏதோ அதிர்ஷ்டத்தினல் இந்த உத்தியோகத்துக்கு வந்துவிட்டார்களே தவிர, இன்னர் நல்லவர் இன்னர் கெட்டவர் என்று அறியும் கபடமும் ஆழ்ந்த யோசனையுமில்லை. அவர்கள் அவ்வளவு கெட்டிக்காரராயிருந்தால், எனக்கு இவ்வளவு கவலையும் வேண்டாம். ஆகையினல்தான் நாம் முன் கூட்டியே முதலியார்வாளுக்கு எச்சரிக்கை செய்து, அந்த நச்சு முதலியார் வலைக்குள் அகப்படாமலும் இந்தச் சம்பந்தம் கூடாமலுமிருக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டும். நானும் போதித்திருக்கிறேன். இன்றும் சொல்வேன். ஆனாலும், தங்கள் பேரில் அவர்கள் மிகுந்த பிரீதி வைத்திருப்பதால், நீங்கள் சொலவதைக் கவனிப்பார்களென்று நம்புகிறேன். தம்பீ, என் ராதா மிகவும் சிறுபிள்ளை. அவளுக்கு என்னையும் உங்களையுமன்றி உற்றதுணை ஒருவருமில்லை. பிதாவோ சூதுவாதற்ற சாது. கடவுள் எப்படி விடுவாரோ!

அம:—அம்மா. கவலைப்பட வேண்டாம். அந்த மாப்பிள்ளை எனக்கும் பிடிக்கவில்லை. ராதாவினுடைய கல்விக்கும் குணத்துக்கும் மணிபோன்ற மாப்பிள்ளைமார் உனக்கெனக் கென்று வருவார்கள். அதற்குள்ளே என் இத்தனை அவச

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை.
இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!
எம் எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

ரம்! ஆனால், முதலியாரவர்கள் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டால்மட்டும் நான் இதைப்பற்றிப் பேசுவது பொருத்தமேயன்றி, நானாக அவர்களிடம் இதைப்பற்றிப் பேசுவது என்னுடைய ஸ்தானத்திற்கும் வயதுக்கும் அவ்வளவு அழகாயிராது. ஆனாலும், யோசித்துச் சொல்லுகிறேன்

என்று சொல்லிவிட்டு வீட்டிற்குப் போய்விட்டான்.

இதுவரையும் வீட்டிற்குள் நின்று கொண்டிருந்த ராதா சகல சமாசாரங்களையும் கேட்டுக்கொண்டு பின்வாயிலுக்குப் போய்விட்டாள். அவள் தனது விவாக விஷயத்தைப் பற்றி அன்றுவரை ஒரு நாளாவது ஊன்றி நினைத்தவளல்ல. ஏகதேசமாய், பாற்கடற் பண்ணை வீட்டில் தனக்கொரு முறை மாப்பிள்ளை யுண்டென்பதைமட்டும் கேட்டிருப்பாள். ஆனால், அவனே தன்னை நிச்சயமாய் மணம் செய்வானென்று ராதா நம்பியிருக்கவில்லை. அதைப்பற்றி எண்ணக்கூடிய உலக ஞானமும் வயதும் இதுவரையும் வரவில்லை. ஆனால் அன்று மாலை தன் தாயும் தன் அன்பிற்குரிய அமரேசனும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்த பேச்சைக் கேட்டபொழுதுதான் ராதா தன் விவாகத்தைப் பற்றித் தன் இளம்புத்திக் கேற்றவாறு தன்னுள் முதன் முதற் சிந்திக்கத் தொடங்கினாள். அதாவது தண்டபாணி தனக்கு இசைந்த நாயகன் அல்லவென்ற கருத்து மட்டும் அவள் மனத்தில் குறிப்பாய்ப் பதிந்துகொண்டது. தன் சுகதுக்கங்களையும் லாப நஷ்டங்களையும் கவனித்துத் தன்னைப் பாதுகாப்பதற்கு அமரேசன் ஒருவன் இருப்பதாயும், அவன் கருணையும் அன்பும் தன்மீது நீங்காதிருக்கும்வரைதான் யாதொரு கவலையும் கொள்ள வேண்டியதில்லையெனவும் ராதாவின் மனத்தில் ஒரு திண்ணமிருந்து வந்தது.

பெற்றதாயின் மடிமீதிருக்கும் ஒரு குழந்தை கொடூரமான ஒரு தொனியைக் கேட்டாலும் பயங்கரமான ஒரு ரூபத்தைக் கண்டாலும் தன் தாயின் தைரியத்தினால் சிறிதும் பயமடையாமலிருப்பது போல், சிசுப்பருவத்தினளாகிய ராதாவும் தன் குருவாகிய அமரேசனுடைய தைரியத்தினால் யாதொரு கவலையையும் கொள்ளவில்லை. நான்கு பக்கங்களிலும் சுவர்களாற் சூழப்பட்ட ஒரு தெப்பத்தில் சிறிதும் சலனமின்றிக் கிடக்கும் தெளிந்த ஜலத்தில் ஒரு சிறு கல்லையெறிந்தால், அந்த ஜலம் சிறிது நேரம் நான்கு பக்கமும் சிறிய அலைகளை வீசிப் பழயபடிச் சலனமின்றி நிற்பதுபோல், ராதாவின் மனமும் சிறிது நேரம் விவாக விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துவிட்டுப் பழயபடியே அமைதியடைந்துவிட்டது. ஜலத்தினுள் எறியப்பட்ட கல் எவ்வாறு முங்கி அடிவாரத்திற் சென்று அறிகுறியின்றிக் கிடக்குமோ அவ்வாறே தண்டபாணி தனக்கிசைந்த நாயகனல்லவென்ற ஒரு எண்ணமட்டும் ராதாவின் தெளிந்த மனத்தின் அடிவாரத்திற் போயிருந்துகொண்டது.

ராஜு, "நம்ம சின்னம்மாளுக்கு வாத்தியாரய்யா இத்தனை நேரம் படித்துக் கொடுத்த மாதிரி மாப்பிள்ளை பார்க்கவேண்டும்" என்றான்.

இனி, ராதாவின் விவாகவிஷயமான செய்தியைக் கேட்ட அமரேசன் 'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி யேழை மனம் புண்ணாக நொந்து'கொண்டு விரைவாய்ச் சாப்பாட்டை முடித்துக் கொள்ளச் சென்றான். போகும்பொழுதே, அவன் ராதாவைப் பிரியும்படி நேர்ந்தால் அப்பிரிவை எப்படிச் சகிப்பதென்று மனம் வருந்தினான்; தனக்குள் "இன்றுமுதல் ராதாவின் வீட்டிற்குப்போவதையே நிறுத்திவிடலாமென்றாலும், என் மனம் சகிக்கவில்லையே? நான் ஒரு நாள் ஒருபொழுது சிறிது நேரம் சென்று போய்விட்டாலும்கூட, அவள் என் வரவை எதிர்பார்த்து முன் வாயிலில் நின்று அங்குமிங்கும் பார்ப்பாளே? அத்தனையன்பு பூண்ட ராதா நான் திடீரென்று இந்த யோசனை செய்வதையறிந்தால் எவ்வளவு வருத்தமடையமாட்டாள்? அந்தக் கன்னிகாரத்தினத்தின் மெல்லிய மனதிற்கு வருத்தமுண்டாக்கலாமா? அவள் விவாக விஷயமான ஒரு அபாயம் வரப்போகும் இந்தத் தருணத்திலா அவளை விட்டுப் பிரிவது? இனி, இதை உத்தேசித்து நான் வழக்கம்போல் போய்க்கொண்டிருந்தாலும் எப்படியாவது ஒரு நாள் நானும் அவளும் பிரியும்படிதானே ஏற்படப்போகிறது? இன்னும் இரண்டு வருஷங்களாவது கழிந்தால் என்னுடைய மனத்தின் அடிவாரத்தில் அமிழ்ந்து கிடக்கும் பாரமான எண்ணத்தை அவளுக்குக் குறிப்பாய் வெளியிடலாம். என் எண்ணத்திற் கிசைவதற்கு என் கண்மணியாகிய ராதா ஆக்ஷேபிக்கவேமாட்டாளென்பது மட்டும் திண்ணம். முதலில் அவள் மனம் பற்றிவிடுமாயின், அவள் தாய் அந்த உத்தமி அநந்தகல்யாணியும் தன் அருமைக் குழந்தையின் மனப்படியே நடக்கும் அறிவுடையவள்தான். அவ்விருவரும் ஒரு மனப்பட்டுவிட்டால் அந்த சாதுவாகிய நந்தகோபர் மனதைத் திருப்புவது மிகவும் எளிது.

எனக்கும் அவர்களுக்குமிடையிலுள்ள ஜாதி பேதமாகிய ஒரு ஆக்ஷேபனையைத்தானே அவர்கள் கவனிப்பார்கள்! அந்த ஆக்ஷேபனையை நீக்கிவிட என்னாலியலுமாயின், என் எண்ண முழுதும் திட்டமாய் நிறைவேறுமென்பதில் ஐயமில்லை. ஆனால்

(25-ம் பக்கம் பார்க்க)

THE RELIABLE HOUSE
MURCH & SEMOUR
MARSHAL ROAD, EGMORE, MADRAS.

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

வருங்கால பலன்

புராதன சாஸ்திர
ஆராய்ச்சியின் பேரில
அனுபவம் பெற்ற
இருவர் கலந்து
தெளிவுபடக்
கூறுவதாம்.

பண்டிட் M. R. K. மூர்த்தி
ஜாதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி.
ஜோதிஷ தத்வக்கியானி
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10 ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
"ஜோதிட கழகம்" 70, தேவராஜமுதலி தெரு, பி. டி., மதராஸ்

பிரெஞ்சு காலனிகள் இன்ஸ்பெக்டர் கோடார்ட் நாகூர் தர்க்காவுக்கு விஜயம் செய்தபோது தர்க்கா டிரஸ்டிகளால் வரவேற்கப்பட்டார்.

மற்ற பக்கங்களில்

பிறப்பினாலன்றி பிராம்மணத்வம் வராது (மஹாபாரதம்) 2
தென் சிறையப் பிரமுகர்கள் 4
குழந்தையின் அன்பு 5
[illegible] 8
மோசம் எப்பொழுதும் நாசம் (சிறுவர் பகுதி) 11
[illegible] 12
நாட்டு கட்டுப்-சித்திரக் கண்ணாடி 13
ராதா (தொடர்கதை) 15
இந்தியவர்த்தமானம் 18
பிரபஞ்சவர்த்தமானம் 23
கண்ணோட்டம் [illegible] 28
பேச்சுத் திருத்தம் 29
தையல் வேலை 30
நவநாகரீகம் 31
ஆஹாரமும் ஆரோக்கியாநுகூலமா[illegible] ஜீர்ண முறையும் (நோயற்றவாழ்வு) 33
கிருஷ்ண தேவராயர் 39

புஸ்தக விமர்சம்

அமிர்தராஜம் அல்லது மின்சார மாளிகையின் ரகசியம்

[அ. இரத்தின சபாபதி எழுதியது. கிடைக்குமிடம்:— ஸ்ரீ சித்தார்த்தா புத்தகசாலை, ஆண்டர்ஸன் பேட்டை. கோலார் தங்க வயல். விலை ரூ. 1-8]

தற்கால நாகரீகத்திற்கேற்ப அநுபவத்திற்கும் அறிவிற்கு முட்பட்ட விஷயங்களைக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இந்த நாவல் நன்கு வரவேற்கப்படுமென்று நம்புகிறோம். வாசகர் வியக்கத்தக்க விதமாயும் பலவிடங்களில் எதிர்பாராதவிதமான போக்கையுடையதாயுமிருக்கும் இக்கதை எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவரின் சிறு பிராயத்தில் ஏற்படும் பழக்கவழக்கங்களே பிற்காலத்தும் தொடர்ந்து வருமென்பதும், கெட்ட நடவடிக்கைகளையுடையவர் முதலில் நன்மை பெறுவதுபோல் தோன்றினும் முடிவில் அவர்கள் தீமையே அடைகிறார்கள் என்பதும் நற்குணமுடைய உத்தமர்கள் முதலில் தீமை அநுபவிப்பது போல் தோன்றினும் முடிவில நன்மையே அடைகின்றனர் என்பதும் இக்கதையினால் அறியப்படும். இந்த நாவல் அச்சடிக்கப்பட்டிருக்கும் காகிதம் மட்டும் மட்டமானதாக விருக்கிறது.

——

வேதாந்த தீபிகை

நவம்பர்மாதம்

[ஆசிரியர்கள். ஸ்ரீமான்கள் வாஸுதேவாசார்யர், வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்கார் வாணி விலாஸ். பத்ரைய கார்டன் தெரு, பார்க்டௌன், சென்னை.]

ஸம்ஸ்கிருதத்தில் அதிகப் பரிச்சயமில்லாதவர்கள் பொருட்டு ஸ்ரீமான் வி. கே. ராமாநுஜாசார்யார் எழுதிவந்த மீமாம்ஸா ஸங்கிரஹம் இந்த ஸஞ்சிகையுடன் பூர்த்தியடைந்துவிட்டது. வாதராஜ பஞ்சாஸத், ஸ்ரீவைகுண்டஸ்தவம், திவ்யசூரி சரிதம் ஆகியவை தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன. சென்னை சட்டசபை அங்கத்தினர் மதுரை டி. வி. ஸ்ரீனிவாஸய்யங்கார் சமயாசாரியர்களும் தமிழும் என்றதொரு ரஸமான கட்டுரை எழுதியிருக்கிறார்.

விவாத பாகத்தில் 'அத்யமே சபலம் ஜன்ம' ஸ்லோகத்தின் அர்த்தத்தைப் பற்றிய மற்றொரு கடிதம் பிரசுரமாகியிருக்கிறது ஸ்ரீமான் திருமலை அய்யங்கார் மன்னுபுகழ் மாமுனிவனைப்பற்றி ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

——

மனோரஞ்சனி

[பிரசுரதார்கள்:—எம். எஸ். ராமுலு அண்டு கோ, எஸ்பிளனேட், சென்னை வருடச்சந்தா ரூ1-8-0]

இம்மாதாந்திர தமிழ் நாவல் பத்திரிகையின் 9, 10–வது மலர்கள் வரப்பெற்றோம். செய்யூர் சாரநாயகி அம்மாள் எழுதிவரும் இராஜலக்ஷ்மி என்ற தொடர்கதையின் சில பாகங்கள் மேலும் பிரசுரமாகியிருக்கின்றன. பெரிய குடும்பங்கள் எவ்விதம் சீர்குலைந்து போகின்றனவென்பது இவற்றில் தெளிவாகக் காட்டப்படுகின்றது. அப்பனையங்காரும் அம்மணியம்மாளும் இறந்து போன பிறகு அவர்களின் வளர்ப்புப் புதல்வன இராஜகோபாலன் ஜெயலக்ஷ்மியுடன் வாழ்ந்து வருவதும், அவர்களுக்குப் புத்திர பாக்கியம் ஏற்படாமல் இராஜகோபாலனுக்கு வெறுப்பு உண்டாவதும், அவன் சென்னைக்கு ஒரு வழக்கு சம்பந்தமாகச் சென்ற போது தனுக்குந் தங்கத்தினிடம சிக்கிக் கொள்வதும், பிறகு ஒரு லக்ஷ ரூபாயை இழந்து அவளை மணப்பதும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

எந்தப் பல் பசையானாலும் சரி— அதன் விலை எவ்வளவானாலும சரி, அதன் புகழ் எவ்வளவு உயர்ந்ததாயினும் சரி— "நீம் பல் பசை"யை விட வேறு எதுவும் உங்கள் பற்களைப் பத்திரமாகச் சுத்தி செய்யாது; ஈறுகளைப் பாதுகாக்காது இவ்வளவு தூரம் நாம் புகழ்ந்து பேசுவதற்குக் காரணம் யாதெனில் "நீம் பல் பசை" ஒன்றில் தான் வேப்பங்குச்சி (நீம்)யின் சத்து பூராவும் அடங்கியிருக்கிறது; நம் தேசத்தில் பற்களைச் சுத்தப்படுத்தவும், பயரியாவைத் தடுக்கவும் ஈறுகளைக் கெட்டிப்படுத்தவும் வேப்பங்குச்சி உபயோகிக்கப்பட்டு வருகிறது.

இன்றே "நீம் பல் பசை" டியூப் ஒன்றை வாங்கி பற்களையும் ஈறுகளையும கவனியுங்கள்.

'Neem' TOOTH·PASTE

கல்கத்தா கெமிக்கல்





லாகூரில் "லஜபதிராய் தினம்" கொண்டாடப்பட்டது. அப்போது பலர் லஜபதிராயின் உருவச்சிலைக்குப் பூமாலை போட்டது சிலையையே மறைத்துவிட்டது.

இந்திய வர்த்தமானம்

மலேயாவுக்கு இந்திய தூது கோஷ்டி

மலேயாவில் இந்தியத் தொழிலாளர் நிலைமையைப்பற்றிப் பரிசீலனைசெய்ய ஒரு தூது அனுப்புவதென இந்திய கவர்ன்மெண்டார் முடிவு செய்து இப்பொழுது அது பற்றி அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தூதினராகச் செல்லுவார். மிஸ்டர் ஜி. எஸ். பாஸ்மன் ஐ. ஸி. எஸ் இவருக்கு ஆலோசனை கூறுபவராகச் செல்லுகிறார்.

கூலி விகிதம், வேலைநேரம், குடியிருப்பு, வைத்தியம், கல்வி, விவசாயத்திற்கு நிலமளிப்பது முதலியன மூலம் உபவித் தொழில் அளிப்பது ஆகிய விஷயங்களில் அளிக்கப்படும் உதவி; ஸ்திரீபுருஷர்கள் தொகை விகிதாசாரம், அரசியல் சமூக அந்தஸ்து, இவ்விஷயங்களை விசாரித்து ஏற்கனவே மலேயாவில் குடியேறியுள்ள இந்தியர் நன்மையை கூடி இவற்றில் என்ன மேம்பாடு செய்யவேண்டும் ... காலத்தில் ... மலேயாவுக்குக் குடியேற்றம் அனுமதிக்கவேண்டுமா? வேண்டுமானால் என்ன நிபந்தனைகளின் பேரில் இதைச் செய்வது ஆகிய விஷயங்களில் சிபார்சு செய்யவேண்டுமென்று தூது கோஷ்டியின் வேலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

எம். என். ராய் விடுதலையடைந்தார்.

இந்தியன் பீனல்கோட் 121 (ஏ) பிரிவின்படி ஆறு வருஷ தண்டனை அனுபவித்து வந்த ஸ்ரீமான் எம். என். ராய் தண்டனை காலம் முடிந்த பிறகு சென்ற 20-ந் தேதி டேராடூன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். 1931-ம் வருஷம் ஜூலைமாசம் 21-ந் தேதி பைகுல்லாவில் (பம்பாய்) ஒரு வீட்டில் நடந்த சோதனைக்குப் பிறகு இவர் கைது செய்யப்பட்டார். அப்பொழுதுதான் அவர் ஜெர்மனியிலிருந்து திரும்பி வந்திருந்தார். அவர்மீது அரசர் பெருமானை எதிர்த்துச் சண்டை செய்யச் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த வழக்குதான் பிறகு கான்பூர் சதிவழக்கு என்று பிரஸித்தி பெற்றது. இவ்வழக்கில் ராய்க்கு 12 வருஷ தண்டனை விதிக்கப்பட்டது. அப்பீலில் தண்டனை பாதியாகக் குறைக்கப்பட்டது.

* * *

பிணம் தின்னும் சாது

சென்ற 17-ந் தேதி தேஜ்பூரிலிருந்து பின்கண்ட ஒரு அதிசயச் செய்தி கிடைத்திருக்கிறது:—

மைமன்சிங் ஜில்லா வாசியான துக்கா சரணதாஸ் என்பவர் தாந்திரிக சாதுவானார். அவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வரப்பட்டார். ஆனால் முடிவில் அவர் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டார்.

சில தினங்களுக்கு முன்பு இவர் ஒரு ஸ்திரீயின் பாதி வெந்துபோன கை கால்களிலுள்ள மாமிசத்தை உண்டதாகச் சொல்லப்படுகிறது. இவர் இவ்வாறு செய்ததற்கு முன் தினம்தான் அந்த ஸ்திரீயின் சவம் தகனஞ் செய்யப்பட்டதாம்.

சென்ற 13-ந் தேதி ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளினுடைய பெண்ணின் சவம் புதைக்கப்பட்டதாம். உடனே இப்பெண்ணின் சவத்தை இவர் எடுத்துச் சமைத்துச் சாப்பிட்டாரென்று சொல்லப்பட்டது. இவர் சுடுகாட்டுக்குப் பக்கத்திலுள்ள குன்றில் குடிசை அமைத்து அங்கு தனியாக வசித்து வருகிறாராம்.

* * * *

அதிக ஓட்டுப் பெற்றால் அதிக நாள் ஸ்தானம்

புதிய அரசியல்படி சென்னை மாகாணத்திற்கு அமைக்கப்படும் ராஜாங்க சபையில் 54க்குக் குறையாமலும் 56க்கு மேற்படாமலும் மெம்பர்கள் இருப்பார்கள். சாதாரணமாகச் சபை மெம்பர்கள் 9-வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டபோதிலும் முதல் தடவை தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களில் மூன்றில் ஒரு பாகத்தினர் 3 வருஷங்களுக்குப் பிறகும், அதே மாதிரித் தொகையினர் 6 வருஷங்களுக்குப் பிறகும், பாக்கியுள்ளவர்கள் 9 வருஷங்களுக்குப் பிறகும், ஸ்தானங்களைக் காலி செய்வார்கள். இவர்களை எப்படி நிர்ணயிப்பதென்பதை கவர்னர் முடிவு செய்ய வேண்டும். சென்னை கவர்னர் இது சம்பந்தமாகப் பிறப்பிக்கவிருக்கும் உத்தரவு அடுத்த ஏப்ரலுக்குப் பிறகே வெளிவரவேண்டும். ஆனால் ஓட்டர்கள் தாங்கள் எத்தனை காலத்திற்குத் தேர்ந்தெடுக்கிறோமென்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு கவர்ன்மெண்டார் இதை விளக்கி ஒரு அறிக்கை வெளியிடப் போகிறார்கள். தேர்தலில் மிகவும் அதிகமாக ஓட்டுப்பெறுகிறவர்கள் 9 வருஷமும், அடுத்தபடியானவர்கள் 6 வருஷமும், குறைவாக ஓட்டுப்பெறுகிறவர்கள் 3 வருஷமும் ஸ்தானம் வகிக்குமாறு செய்ய கவர்னர் உத்தேசிக்கிறார்.

* * * *

தேசியக்கொடி பிடுங்கப்பட்டது

ராமனாதபுரம், செய்க்குப்பை கிராம காங்கிரஸ் காரியதரிசி பின்கண்டவாறு பத்திரிகைகளுக்கு அறிவித்திருக்கிறார்:- சிவகங்கை ஜமீன்தார் தம் கீழ் வேலை செய்யும் ரயத்துகளையெல்லாம் காங்கிரசுக்கு எதிராக ஓட்டுச்செய்ய உத்திரவிட்டிருக்கிறாரென்று தண்டோரா போடப்பட்டது. சில கிராமத்தார்கள் இவ்வாறு தண்டோரா போடுவதை ஆட்சேபித்து நிறுத்தினார்கள். அதன் பேரில், எஸ்டேட்டைச் சேர்ந்த ஒருவர் சில ஆட்களுடன் அவ்விடம் வந்து காங்கிரஸ் ஆபிசுக்கு முன்பாக விருந்த காங்கிரஸ் கொடியைப் பிடுங்கினார். சச்சரவு ஏற்படும்போலிருந்ததால் உடனே போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவ்விடம் தோன்றித் தேசியக் கொடியை வாங்கிக் கொடுத்து அமைதியை நிலவச்செய்தார்

* * * *

தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை காலமானார்.

உத்தம தேசபக்தரான ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை சென்ற 18-ந் தேதி காலமானார். தமிழ் நாட்டில் தேசியம் என்பது என்னவென்று தெரியாமலிருந்த காலத்தில் அதைத் தமிழ் மக்களுக்கு ஊட்டுவதற்காக உழைத்த உத்தமர்களில் அவர் ஒருவர். தூத்துக்குடியில் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியை ஸ்தாபித்தவர்களுள் அவர் ஒருவர். அந்தக் காலத்தில் தீவிரக் கொள்கைகளுக்காக அவர் பல கஷ்டங்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. அவர் சிறைக்கும் சென்று வந்தார். பின்னர் வக்கீல் சன்னது பெற்றுக் கோயில்பட்டியில் தொழில் நடத்தி வந்தார். அவர் சிறிது காலமாக ராஜிய வாழ்வில் அதிகமாக ஈடுபடாத போதிலும் தேசம் விடுதலை பெறும்படிச் செய்யவேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு மிகுதியும் இருந்து வந்தது. அவருடைய மரணத்தினால் தமிழ் நாடு ஒரு உத்தம தேசபக்தரை இழந்துவிட்டது.

(24-ம் பக்கம் பார்க்க)

ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம் 125,6600. ஜனங்கள் போற்றுவது பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2. மாந்திரீக மருத்துவ ஆபீஸ், வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

சத்தியசீலன்

திருச்சி தியாகராஜா டாக்கீ பிலிம் கம்பெனியின் "சத்தியசீலன்" என்ற தமிழ் பேசும் படத்திலிருந்து இரு காட்சிகள். எம். கே. தியாகராஜ பாகவதர், ஸ்ரீமதி தேவசேனா முதலியோர் முக்கிய நடிகர்கள்.



கிங்கார்டின் என்னுமிடத்தில் போர்த் ஆற்றின்மேல் கட்டப்பட்டிருக்கும் புதிய பாலம். படகுகள், கப்பல்கள் போவதற்கும் பாலத்தின்மேல் வண்டிகள் போவதற்கும் ஏற்றவாறு இது கட்டப்பட்டிருக்கிறது. பாலம் மின்சார விசையினுல் வேலை செய்கிறது. அந்த மின்சார யந்திரங்களின் அறை கீழ்ப் படத்தில் காணப்படுகிறது

புதிய மடக்குப் பாலம்





பிலிப்போ காரிடோனி என்பவர் ஸீனர் முஸோலினியின் அந்தரங்க நண்பர். 1917-ம் வருஷத்தில் மஹா யுத்தத்தின்போது அவர் கொல்லப்பட்டார். அவரது ஞாபகார்த்தமாக முஸோலினி காரிடோனியாவில் சமீபத்தில் ஒரு சிலையைத் திறந்து வைத்தார். சிலையையும் அது திறந்து வைக்கப்படுகையில் கூடியிருந்த கூட்டத்தின் ஒரு பகுதியையும் படத்தில் காணலாம்.

(கீழ்ப் படம்) ஜாரோ நகர் லண்டனிலிருந்து 300 மைல் தூரத்திலிருக்கிறது. அந்நகரின் நிலைமையை அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக அங்கிருந்து ஒரு கோஷ்டி புறப்பட்டுக் கால் நடையாகவே லண்டனுக்கு வந்து சேர்ந்தது. லண்டன் ஹைட்பார்க்கில் ஜாரோ தொகுதிக்கு பார்லிமெண்டு அங்கத்தினரான மிஸ் எலன் வில்கின்ஸன் கோஷ்டியினருக்கு ஒரு பிரசங்கம் செய்தார்.



மேரி அரசியின் புதிய அரண்மனையான லண்டனிலுள்ள ''மார்ல்பரோ ஹௌஸ்''



இங்கிலாந்து கடற்படையைப் பெருக்கிக் கொண்டு வருகிறது. படத்தில் காணப்படும் ''ஸன்பிஷ்'' என்ற நூதன நீர்மூழ்கி சமீபத்தில் தயாரிக்கப்பட்டது.

லண்டன் ராயல் ஆல்பர்ட் ஹாலில் பல தேச தேசிய உடைகள் காட்சியொன்று சமீபத்தில் நடைபெற்றது.

பிரபஞ்ச வர்த்தமானம்

—:[o]:—

யுத்த நிறுத்த தினத்தன்று மன்னர் பிரான் யுத்த ஞாபகார்த்த ஸ்தூபியின் முன்பாகப் புஷ்பங்கள் போடுகிறார்

ஸ்பெயின் கலக நிலைமை

ஸ்பெயின் கலகநிலைமை இன்னும் ஒன்றும் சொல்லமுடியாததாக விருக்கிறது. சர்க்கார் துருப்புகள் கலகக்காரர்களை எதிர்த்து வருவதாயும் அவர்கள் முன்னேற்றத்தைத் தடுத்து வருவதாயும் கூறப்படுகிறது. கலகக்காரர்கள் விமானங்களிலிருந்து மாட்ரிட் மீது வெடிகுண்டுகளைப்போட்டு வருகின்றனர் ஆனால் சில தினங்களில் கால நிலைமை காரணமாக வெடிகுண்டு வீச்சு இல்லாமலிருந்தது ஜனங்கள் மாட்ரிட்டிலிருந்து வேகமாகவே வெளியேறிவருகின்றனர். சர்க்கார் சில முக்கியவிடங்களைப் பிடித்துவிட்டதாயும் ஹூஸ்கா-ஸாகோஸா ரயில்வேயைத் தகர்த்துவிட்டதாயும், இது வழியாகத்தான் கலகக்காரர்களுக்குச் சாமான்கள் கிடைத்து வந்ததாயும் கூறப்படுகிறது.

இத்தாலியும் ஜெர்மனியும் கலகசர்க்காரை அங்கிகரித்திருப்பது பற்றி காமன்ஸ் சபையில் கேள்வி கேட்கப்பட்டது. அது நடு நிலைமை ஒப்பந்தத்தை மீறிய தாகாதா வென ஒரு அங்கத்தினர் கேட்டார் அதற்கு மிஸ்டர் ஈடன் பதிலளிக்கையில் ஸ்பெயினிலுள்ள இரு அரசாங்கங்களில் எந்த அரசாங்கத்தை அங்கீகரித்தாலும் அதேசமயத்தில் ஆயுத சப்ளை சம்பந்தமாக நடு நிலைமைக் கொள்கையைக் கையாண்டு வரலாமென்றும் நடு நிலைமை ஒப்பந்தம் மீறப்பட்டு வருவது சம்பந்தமாக ஜெர்மனியையும் இத்தாலியையும் விட வேறு சில நாடுகள் மீது அதிகமாகக் குற்றஞ் சாட்ட இடமிருக்கிறதெனத் தாம் எண்ணுவதாகக்கூறினார்.

கப்பல் போக்குவரத்திற்கு கலகக்காரர்கள் தடை விதிக்க விருப்பதை முன்னிட்டு பார்ஸிலோனுவுக்குச் சரக்கு ஏற்றிச் செல்லும் பிரிட்டிஷ் கப்பல்களுக்குப் பாதுகாப்பளிக்கப்படுமாவென ஒரு அங்கத்தினர் கேட்டார். பிரிட்டிஷ் நலத்தைப்பாதுகாக்க சர்வதேசிய நடவடிக்கை பற்றிய விதிகள்படி பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமென மிஸ்டர் ஈடன் பதிலளித்தார்.

கலகக்காரர்களுக்கு உதவி புரிவதற்காக 'ஐரிஷ் படை' யைச் சேர்ந்த நாற்பது பேர்களுடன் ஜெனரல் ஓடபி ஸ்பெயினுக்குப் புறப்பட்டுவிட்டார். ஜெனரல் பிராங்கோவின் படையுடன் சேர்ந்து ஸ்பானிய சர்க்காரை எதிர்ப்பதே இந்தக் கோஷ்டியின் நோக்கமாம்.

ஸ்பெயினைக் குடியேற்ற நாடாக்க ஜெர்மனியும் இத்தாலியும் சூழ்ச்சி செய்து வருவதாகப் பன்கண்ட ஸ்பானிய சர்க்கார் அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டிருக்கிறது:—

"இத்தாலியும், ஜெர்மனியும் ஸ்பெயினைத் தங்களுடைய குடியேற்ற நாடாக்கிக்கொள்ளச் சூழ்ச்சி செய்துவருகின்றன. இத்தாலி ஜெனரல் பிராங்கோவைத் தனது கூட்டாளியாகக் கொண்டு, அபிசீனியாவை விழுங்கியது போதாதென்று, பாலியாரிக் தீவுகளையும் தனது ஆதிக்கத்துக்குட்படுத்தி விடலாமென நம்பியிருக்கிறது.

ஜெர்மனி தனது யுத்த முஸ்தீப்புத் திட்டங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை இனி ஸ்பெயினிலிருந்து பெறலாமென எண்ணியிருக்கிறது.

ஆனால் ஸ்பானியக் குடியரசுக் கட்சியினர் இச்சூழ்ச்சி ஈடேறாமல் தடுக்க உறுதி கொண்டிருக்கின்றனர். இதற்குத் தேவையான அளவு தங்கள் சக்தியைப் பெருக்கிக் கொள்வர். இம்முயற்சியில் அவர்கள் தங்களுக்கு ரஷ்யாவும் மெக்ஸிகோவும் உதவி புரியுமென நம்புகிறார்கள்."

* * * *

பொது உடைமை இயக்கத்தை எதிர்க்க ஜெர்மனி-ஜப்பான் ஒப்பந்தம்

பொது உடைமை இயக்கத்தை எதிர்க்கும் பொருட்டு ஜப்பானும் ஜெர்மனியும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. டோகியோ ஜெர்மன் ஸ்தானீகரான ஹைர்வான் டிக்ஸன் சமீபத்தில் பெர்லினிலிருந்து டோகியோவுக்குத் திரும்பியபின் இவ்வொப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயிற்றெனவும் தெரிகிறது. இது பற்றிய செய்தியெதையும் வெளியிடாதிருக்குமாறு ஜப்பானிய வெளிநாட்டிலாகாவைச்சேர்ந்த ஒரு அதிகாரி பத்திரிகை நிருபர்களுக்கு அறிவித்திருக்கிறார். இத்தகைய ஒரு செய்தியை வெளியிட்ட ஒரு ஜப்பானியப் பத்திரிகை இனி தலைகாட்டக் கூடாதென ஜப்பானிய சர்க்கார் உத்தரவு பிறப்பித்துவிட்டனர்.

இந்த ரகஸிய உடன்படிக்கையைக் கண்டு ரஷ்யா ஆத்திரமடைந்திருக்கிறது. இதனால் மீன் தொழில் பற்றிய ரஷ்யா—ஜப்பான் உடன்படிக்கையில் கையெழுத்திடுவதில்லையென முடிவு செய்துவிட்டது. மஞ்சுகோ—சோவியத் எல்லை நிர்ணயக் கமிஷன் ஏற்படுத்துவதுபற்றித் தற்பொழுது நடந்துவரும் சமாஸப் பேச்சை நிறுத்திவிடுவதுபற்றியும், ஸ்காலினில் பெட்ரோல் சம்பந்தமாக ஜப்பானுக்கு அளிக்கப்பட்ட சலுகையை ரத்துசெய்வதுபற்றியும் ரஷ்ய சர்க்கார் ஆலோசித்துவருவதாகவும் கூறப்படுகிறது.

* * * *

ருஷ்யாவில் உளவறிந்ததாக ஜர்மானியர் கைது

ருஷ்யாவில் சென்ற வாரம் 22 ஜெர்மானியர் கைது செய்யப்பட்டனர். அவர்கள்மீது உளவறிந்ததாகவும், சர்க்காருக்கு விரோதமான புரட்சிச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகவும், குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றது. இதுபற்றி மாஸ்கோவிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகர் தமது கண்டனத்தை சோவியத் சர்க்காருக்குத் தெரிவித்தார். ஆனால் சோவியத் சர்க்கார் தாங்கள் அக்கண்டனத்தை நிராகரிப்பதாகவும், இரு ஸ்திரீகள் உள்பட (மேற் கூறப்பட்ட ஜெர்மானியர்) கைதுசெய்யப்பட்டிருப்பதாயும், அவர்கள்மீது உளவறிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாயும் ஜெர்மன் ஸ்தானீகரிடம் கூறினர்.

* * * *

கிறிஸ்தவர்-முஸ்லீம் கலகம்

லெபான் என்னும் நாடு ஸிரியாவைப் போல் பிரான்ஸினிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாடாகும். பிரான்ஸிற்கும் லெபானுக்கும் சமீபத்தில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இதை லெபானிலுள்ள முஸ்லீம்கள் எதிர்த்து வருகின்றனர். உடன்படிக்கையை வரவேற்கும் முறையில் கிறிஸ்தவர் ஆர்ப்பாட்டம் நடத்திவந்தனர். இது காரணமாக முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சச்சரவேற்பட்டுக் கலகத்தில் ஆரம்பித்திருக்கிறது. கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி செய்ய மலைஜாதிகளைச் சேர்ந்தவர்கள் கூட்டங் கூட்டமாக வருவதாகக் கூறப்படுகிறது. கொள்ளைகளும், கொலைகளும் நடந்து வருவதாகவும், நிலைமை மிக்க நெருக்கடியானதாகவே இருந்து வருவதாகவும், போலீசாரும் ராணுவப் படையினரும் எங்கும் காவல் புரிந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

வெண் குஷ்டம்
பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும் எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விபரங்களுக்கெழுதுக,
KAMALA WORKS (S. M.
Panchpota—Bengal, India.



பாளையங் கோட்டைக்குச் சமீபத்தில் விஜயம் செய்திருந்த சென்னை கவர்னர் அங்கு ஒரு புஸ்தகசாலையைத் திறந்து வைத்தார்.

ஜெர்மனியைக் கண்டிக்க மறுப்பு

வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தில் ஜெர்மன் நதிகளைப்பற்றி யுள்ள பிரிவுகளை இனி தாம் மதிக்கப் போவதில்லை என்று ஹிட்லர் அறிவித்ததைத் தன்னுடன் சேர்ந்து கண்டிக்குமாறு பிரான்ஸ் இத்தாலிக்கு அழைப்பு விடுத்திருந்தது. இதை ஏற்க இத்தாலிய சர்க்கார் மறுத்து விட்டனர்.

* * * *

பிரெஞ்சு உள்நாட்டுமந்திரி தற்கொலை செய்துகொண்டார்.

பிரெஞ்சு உள்நாட்டு மந்திரியான மிஸ்டர் ஸாலிங்ரோ தற்கொலை செய்துகொண்டு விட்டார். மிஸ்டர் ஸாலிங்ரோ ராணுவத்திலிருந்தபொழுது அவர் நடந்துகொண்ட முறையைப்பற்றி சமீபத்தில் பிரெஞ்சுப் பிரதிநிதிகள் சபையில் விவாதம் நடந்தது. மஹாயுத்தத்தின்போது அவர் பயங்கொள்ளித்தனமாக நடந்துகொண்டதாக அவர் மீது சில பத்திரிகைகள் குற்றஞ்சாட்டியிருந்தன. இது பற்றி விசாரித்த ஒரு கமிஷன் அக்குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரமில்லையென அறிக்கை வெளியிட்டது. பிரதிநிதிகள் சபையில் இவ்வறிக்கை பற்றி விவாதம் நடந்தபின் சர்க்காரிடம் நம்பிக்கை தெரிவிக்கும் முறையில் ஒரு பிரேரணை நிறைவேறியது.

* * * *

ஜப்பானின் வரிவிதித முறை

ஜப்பான் காப்புவரிக் கமிஷனின் நிரந்தரக் கமிட்டி இரு வகையான வரி விகிதங்களை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென முடிவு செய்திருக்கிறது. இவற்றில் ஒன்று பொதுவான விகிதம். ஜப்பானுடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள நாடுகளின் சரக்குகளுக்கு இவ்விகிதப்படி வரி விதிக்கப்படும். மற்றொன்று பொது விகிதத்தைப்போல் இருமடங்கான விசேஷ விகிதமாகும். ஜப்பானுடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளாத நாடுகளின் சரக்குகளுக்கு விசேஷ விகிதப்படி வரி விதிக்கப்படும். ஜப்பானியச் சரக்குகள் விஷயத்தில் சலுகை காட்டிவரும் நாடுகளின் சரக்குகளுக்கு ஜப்பானும் சலுகை காட்டிவரும்.

* * * *

ஜப்பானில் கோரமான வெள்ள விபத்து

சென்ற 20-ந்தேதி மச்சி.. ஜில்லாவில் ஒரு கோர வெள்ளவிபத்து நேரிட்டதாக டாகியோவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஓராகு..வா தாமிரச்சுரங்கத்திற்கு ..மேலுள்ள ஒரு ஜலத்தேக்கத்தின் கரைகள் உடைந்து விட..வ ஏராளமான ஜனங்கள் ..ரண்டனர். 300 வீடுகள் ..கொண்ட ஒரு கிராமம் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு ..பாதிக்கப்பட்டது.

இந்திய வர்த்தமானம்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

சேலம் ஜில்லாபோர்டு பிரிவினை

சேலம் ஜில்லா போர்டு இரு பிரிவுகளாக (வட சேலம் ஜில்லா போர்டு, தென் சேலம் ஜில்லாபோர்டு) டிசம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து பிரிக்கப்படும் விஷயமாக கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். ஓமலூர், தர்மபுரி, ஹரூர், கிருஷ்ணகிரி, ஒசூர் முதலிய தாலூகாக்கள் வட சேலம் போர்டில் அடங்கும். வடசேலம் போர்டுக்கு தலைமை ஸ்தானம் தர்மபுரி திருச்செங்கோடு, நாமக்கல், ராசிபுரம், ஆத்தூர், சேலம் ஆகிய தாலூகாக்கள் தென் சேலம் ஜில்லா போர்டில் அடங்கும். இதற்குத் தலைமை ஸ்தானம் சேலம்.

இவ்விரு போர்டுகளின் அதிகாரத்தை ஜில்லா கலெக்டர் டிசம்பர் முதல் தேதியிலிருந்து ஏற்றுக்கொண்டு டிசம்பர் 15-ந் தேதிக்குள் ஒவ்வொரு போர்டுக்கும் தலைவர் தேர்தலை நடத்துவார். தற்பொழுது இருக்கும் ஜில்லா போர்டின் கைவசமுள்ள பணம் புதிய இரு போர்டுகளுக்குச் சரிசமமாகப் பங்கிடப்படும். பொதுவாக நிர்வாகத் திறமையை முன்னிட்டே தற்பொழுது இருக்கும் போர்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறதென கவர்ன்மெண்டு உத்தரவு கூறுகிறது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மெம்பர்கள் பெயர் கெஜட்டில் பதிவு செய்யப்படும்போது ஒவ்வொரு போர்டின் மொத்த மெம்பர்களின் அளவு இவ்வளவென்றும், நியமன மெம்பர்கள் இவ்வளவென்றும் அறிவிக்கப்படும்.

* * * *

திருவாங்கூர் ஆலயப் பிரவேச விதிகள்

திருவாங்கூர் மஹாராஜா சமீபத்தில் தமது சமஸ்தானத்தில் எல்லோருக்கும் ஆலயப் பிரவேச உரிமை யளித்தார். அது சம்பந்தமாக 21 விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன்படி ஆலயப் பிரவேச விஷயத்திலும் வழிபாடு விஷயத்திலும் எல்லா சமூகங்களுக்கும் இருந்துவரும் பொதுவான சம்பிரதாயமான நிர்ப்பந்தங்கள் இனியும் நீடித்திருந்து வரும்.

கோயில் பிரதம நிர்வாக அதிகாரி ஸ்ரீமுகத்தின் நோக்கத்திற் கிணங்க அவ்வப்பொழுது எந்தெந்த நேரத்தில் தொழுகைக்கு வரவேண்டுமென்பதையும் ஒரே சமயத்தில் எவ்வளவு பேர் தொழுகைக்கு வரலாமென்பதையும் பற்றி உத்தரவுகள் பிறப்பித்து அவற்றை ஒழுங்கு படுத்த அதிகாரம் பெற்றிருப்பார். சில நபர்கள் சமூகங்கள் இவர்களது விசேஷ வழக்கங்கள் சம்பிரதாயங்கள் இவற்றைப் பராமரித்து வருவதற்குவேண்டிய ஆக்ஞைகளையும் பிறப்பிக்க அவருக்கு அதிகாரமுண்டு.

ஹிந்துக்களல்லாதவர்கள் குடும்பத்திலேற்படும் பிறப்பு இறப்பு இவற்றின் காரணமாகத் தீட்டு உள்ளவர்கள், மதுபானம் செய்தவர்கள், ஒழுங்கீனமாக நடப்பவர்கள். தீட்டு காலத்திலுள்ள ஸ்திரீகள். பிச்சை எடுத்தலைத் தொழிலாக உடையவர்கள் ஆகியவர்கள் கோயிலுக்குள் வரக்கூடாது.

விதிகள்பொதுப்படையாகக் கோயிலுக்குள் நுழைகிறவர்கள் எப்படி நடக்கவேண்டும், எம்மாதிரி உடை தரிக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கின்றன. கோயிலுக்குள்ளாகவோ அன்றி அதன் எந்தப்பாகத்திலோ எந்த சாமான்களை எடுத்துக்கொண்டு போகக்கூடாது; கோயிலின் எந்தெந்த பாகத்திற்குள் யார் யார் நுழையக்கூடாது என்பதை விதிகள் எடுத்துரைப்பதுடன் அவற்றை மீறி நடப்பதற்கான தண்டனைகளையும் எடுத்துரைக்கின்றன விதிகளின் வியாக்யானத் தகராறுகள், எதிர்பாராத கஷ்டங்கள் அவசர சமயங்கள், சந்தேகங்கள் இவை சம்பந்தமாக திவான் செய்யும் முடிவே இறுதியானதாகும்.

* * * *

மழை கொட்டுகிறது
குளிர் நடுக்குகிறது!

வீட்டுக்குள்ளேயே
இருக்க முடியுமா?

முடியாது. நீங்கள் வேலைக்குப் போகவேண்டும் அல்லது கடையைக் கவனிக்கவேண்டும்.

ஆனல் மழை உங்களை நனைக்கிறது; குளிர் உங்களை நடுக்குகிறது—உங்கள் ஊக்கம் குறைகிறது. தேகத்தில் செழிப்பான சிவந்த இரத்தம் நிறைந்திருந்தால், நீங்கள் எதையும் எதிர்த்து நிற்கலாம். இவ்வகையில் சிறந்த இரத்த டானிக்

அமிர்தா

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்
அல்லது
கேஸரி குடீரம், மதராஸ்.

ராதா

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தனை யோசனைக்கும் இது இசைந்த சமயமல்லவே? உலக ஞானம் சிறிதுமற்ற யாதுமறியாப் பச்சைக் குழந்தையினிடம் என்னுட்கருத்தை வெளியிடல் முறையல்லவே? வெளியிடினும், அவளுக்கு அதன் பொருளே தெரியாதே? ஒரு ஜாதி விட்டொரு ஜாதியில் கலப்பு விவாகம் செய்வது நியாயந்தானென்னும் ஆசாரசீர்திருத்தக் கொள்கை அவளுக்கு இந்த வயதில் தெளிவாய்ப் புலப்படுமா? அன்றியும் ராதா இப்பொழுது என் மீது கொண்டிருக்கும் அன்பு காதலாய் வளர்தற்கேற்ற காலம் இன்னும் வரவில்லையே? ஐயோ! அவ்வன்பு என்னும் விதை காதலென்னும் பூம்பயிராய் முளைத்து வளர்தற்கு அவளுடைய இருதயமென்னும் புலம் இன்னும் பண்படவில்லையே? அப்படிப் பண்படாத அவளுடைய மனப் புலத்தில், நான் கொண்டிருக்கும் காதல் விதையை ஊன்றினும் அது முளைக்காதே?. இந்த நிலைமையிலிருக்கும் இந்தப் பெண்ணை எந்த மூடனுக்கோ விவாகம் செய்ய வேண்டுமென்று அந்த நாகரிகமற்ற நந்தகோபர் கருதியிருக்கின்றாரே? இந்த சமயம், நான் என்னுடைய சொந்த நன்மையைக் கருதாவிடினும், அவளுடைய நன்மையைக் கருதியாவது, இந்த விவாகத்தை நிறுத்துவதற்கு இயன்றவரை முயல வேண்டியது என் கடமை. அதற்காக, ஒரு காரியம் செய்ய வேண்டும். இது முதல் காதற்பெருமை கூறும் நூல்களை அவளுக்குப் படிப்பிப்போம். அதில் அவள் மனம் பற்றும் விதத்தையும், அவள் மனத்தின் ஓட்டத்தையும் பக்குவத்தையும் அவள் முகக்குறியால் உணர்வோம். இத்துடன் ஜாதிபேதக் கொள்கையின் இழிவைப் பற்றியும் அதை யொட்டிய கலப்பு விவாக நியாயத்தைப் பற்றியும் அனந்த கல்யாணிக்குப் போதித்து அவள் மனவிசாலத்தையும் அறிவோம்" என்றிவ்வாறு தீர்மானம் செய்து கொண்டான்.

மறுநாள் முதல் அமரேசன் வேதநாயகம் பிள்ளை நீதிநூலில் "புருட பாரியரியல்பு" என்னும் அதிகாரத்தை யெடுத்துத் தினமிரண்டு பாட்டாக, உபகதைகளுடனும் அநுபவ திருஷ்டாந்தங்களுடனும் வேடிக்கையாயும் விளையாட்டாயும் ராதாவுக்குப் படிப்பிக்கத் தொடங்கினன். இதுவரையும் கேவலம் கல்வியின்மீது மட்டும் ஆசை கொண்டிருந்த ராதாவின சித்தம, இப்பொழுது இல்வாழ்க்கையின் நீதி முறைகளையும் மற்ற லௌகிக விஷயங்களையும் விவரிக்கின்ற அமரேசனுடைய சாதுரியமான வசனங்களைக் கேட்டு மெல்ல மெல்ல ஒரு பக்கம் அளவற்ற பூரிப்பையும் மற்றொரு பக்கம் தன் சொந்த வாழ்வு எப்படியிருக்குமோவென்ற கவலையையுமடையத் தொடங்கிற்று. தான் பெரியவளான பின், இல்வாழ்க்கையில் இன்னின்னபடி ஒழுக வேண்டுமென்று ராதா தனக்குள் எண்ணிக்கொள்வாள். தன் விளையாட்டுகளையெல்லாம் மறந்து சதா நீதி நூலும் கையுமாய் பாட்டுகளைப்பாடி முனங்கிக்கொண்டு தன் சொந்த வேலைகளைப் பார்ப்பாள். இதுவரை ராதாவுக்கு அமரேசன் வேறு நூல்களைப் படிப்பித்துக் கொண்டிருந்த காலங்களிலும், அவற்றை அநந்த கல்யாணியும் பக்கத்திலிருந்து கேட்பது வழக்கம். இப்பால், அவன் நீதி நூல் படிப்பிக்கத் தொடங்கியது முதல் அவள் தன்வீட்டு வேலைகளையும் போட்டுவிட்டு நீதிநூல் கேட்க வந்துவிடுவாள். அவன் சில பாடல்களுக்குப் பொருள் கூறும் பொழுதே இடையிடையே சொல்லும் வேடிக்கையான உபகதைகளைக் கேட்டுக் குலுங்கக் குலுங்க நகைப்பாள்.

ஒரு நாள் அமரேசன் நீதி நூலில், ஸ்திரீ புருஷர்க் கிடையில் அமைந்திருக்க வேண்டிய அன்பைப் பற்றியும் அதனால் விளையும் இன்பத்தைப்பற்றியும் கூறும் சில பாட்டுகளை, கரும்பினுமினிய ஆனந்த பைரவி ராகத்தில், தன் பக்கத்திலிருக்கும் அநந்த கல்யாணி பிரமிக்கும்படிக்கும், தன் வாயை இமை கொட்டாமற் பார்த்துக் கொண்டு கொடிபோல் எதிரே உட்கார்ந்திருக்கும் கன்னிகையாகிய ராதாவின் மனம் கரைந்து அன்பு நீராய்ப் பெருக்கெடுத்தோடும் படிக்கும், இனிமையாய்ப் பாடி, அவற்றின் பொருளைச் சீர்சீராய் அடியடியாய்ப் பிரித்துப் பதவுரை, கருத்துரை, சிறப்புரை, உபகதை, அநுபவப் பிரமாண முதலியவற்றுடன் விளக்கி விவரித்துக் கொண்டிருக்கும் பொழுது,

அநந்:—தம்பி, தாங்கள் சொல்வதுபோல், எல்லாருக்கும் நல்ல மனைவியும் நல்ல கண

அந்த

இருமலை

நிறுத்துக



இடைவிடாத இருமலுக்கு இன்றியமையாத நிவாரணி; தொண்டை பலவீனத்தால் ஏற்படும் இருமல்களுக்கும், பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரண மாத்திரைகளை வாயில்போட்டுச் சப்புங்கள். இவற்றின் ஆவிகள் சுவாசாசயத்தினுள் சென்று குணமளிக்கும். பெப்ஸ் இருமலை நிறுத்தி, மார்பையும், சுவாசாசயத்தையும் வலுப்படுத்தும் பரீட்சியுங்கள்'

பெப்ஸ் சீல் வைத்த புட்டி 1-க்கு ரூபா 1 வீதம் கிடைக்கும். ஏஜண்டுகள்:-தாதா & கம்பெனி, லிமிடெட், பார்க் டவுன், மதராஸ்.

பெப்ஸ் கிருமிநாச மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 டின்களின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிறதென்று பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:-M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்

வனும் அமைந்தால்தானே இப்படி நடக்கலாம்? அமைவது விதிப்படிதானே அமையும்?

அம:—அம்மா, விதி விதியென்பது அந்தப் பழைய காலம். தெய்வச் செயலாய, நம்முடைய சக்தியைமீறி நேரிடும் மரணம்முதலிய அகஸ்மாத்தான சம்பவங்கள்தான் விதிவசமென்று சொல்லலாமன்றி, நல்ல கணவனும் மனைவியும் அமையாமற்போவதற்கு நமது மதிக்குறைவுதான் காரணம்.

அநந்:— (புன்னகையுடன்) நல்லது. தங்களுக்கு நாளை எப்படி மனைவி வாய்க்கிறுளென்று பார்ப்போம்.

அம:—நன்மனைவி கிடையாவிட்டால் விவாகமே வேண்டாம். நானொருவன் பிரம்மசாரியாய் இருந்துவிட்டால் உலக முழுதும் மூழ்கிப்போய் விடுமா?

அநந்:—ராதாவின் (முதுகைத் தடவிக் கொண்டு) தம்பி, நீங்கள் ஆண்பிள்ளைகள் அப்படி விரதம்பூண முடியும். பெண்கள் உத்தம நாயகரை அடையாவிட்டால் என்ன செய்வார்கள்? கிடைத்ததை வைத்துத்தானே காலத்தைத் தள்ளவேண்டும்? தேவடியாள் வீட்டிற்குத் தாலியைக் கேட்டாலும், கழற்றிக் கொடுத்துவிட்டுத்தானே இருக்க வேண்டும்?

அம:—அம்மா, தற்சமயம் பெண்களின் நிலைமை அப்படித்தானிருக்கிறது. பெண்களுக்கு ஸ்வாதீனம் காணுது. ஆயினும், பெண்களுக்குப் போதிய கல்வியும் தைரியமுமிருந்தால், அவர்களும் சுகப்படுவதற்கு வழியில்லையென்பதில்லை (என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டுவெளியே போன பின்)

ராதா:—அம்மா, பாற்கடல் நல்ல ஊரா? பூந்துறை நல்ல ஊரா?

அநந்:—தாயே, அதைப் பற்றி என் இப்பொழுது திடீரென்று கேட்கிறுய்? உனக்கு எது நல்ல ஊர்?

ராதா:—எனக்குப் பூந்துறைதான் நல்ல ஊர். பாற்கடல் நன்றுயில்லை. பட்டணமென்ற பெயரிருந்தென்ன?

அநந்:—பாற்கடல் உனக்கு நன்றுயில்லையா? உன்னை உன் அப்பா பண்ணை வீட்டு மாப்பிள்ளைக்குக் கொடுத்தால், நீ அந்த ஊரிலேயேதானே இருக்க வேண்டும்?

ராதா:—அதற்குத்தான் உனக்கு இஷ்டமில்லையென்று அம்மா சொல்லிக்கொண்டிருக்கிறுயே? பின்னையென்ன?

அநந்:—அதெல்லாமிருக்கட்டும். உன்னிஷ்டமெப்படி?

ராதா:—(தாயின் மடிமீது புன்னகையுடன் சாய்ந்து கொண்டு) என்னிஷ்டம் உன் இஷ்டப்படிதான்.

அநந்:—என்னிஷ்டம் உன் அப்பா இஷ்டப்படிதான் சரிதானு?

ராதா:—(சிணுங்கிக்கொண்டு) இல்லை. நீ பொய் சொல்லுகிறுய். அப்பாதான் ஒன்றும் தெரியாத சாதுவென்கிறுயே?

அநந்:—பின்னை உன் அப்பாவுக்கு என்ன தெரியும்? சம்பாத்தியம் செய்யத்தானே தெரியும்? பாரெஸ்டு ஆபீஸும் தெரியும்! வேறே நல்லவர்கள் கெட்டவர்களென்று பகுத்தறியத் தெரிகிறதா?

ராதா:—ஆம்; நீ சொல்லுவது நிஜம்தான். (பக்கத்தில் நின்ற)

ராஜு:— நம்ம சின்னம்மாளுக்கு வாத்தியாரய்யா இத்தனை நேரம் படித்துக் கொடுத்தமாதிரி மாப்பிள்ளை பார்க்க வேண்டும். உள்ளதைச் சொல்வதற்கென்ன? பண்ணைவீட்டு மாப்பிள்ளை எனக்கும் பிடிக்கவில்லை. நீங்கள் கோபித்துக் கொண்டாலும் சரி.

அநந்:— அந்தப் பயலுக்கு யார் பெண் கொடுக்க நிற்கிறுர்கள்? அவனுக்குப் பெண் கொடுத்தால் நமக்கு வேறே என்ன குறை? ராதா அவ்வளவு படிப்புக்கூட அவனுக்கில்லையே?

ராஜு:—நம்ம சின்னம்மா படிப்பு அவருக்கிருந்தால் தான் தாசில் வேலை பார்க்கலாமே? வாத்தியாரய்யா படிப்பிக்கத் தொடங்கி ஒரு வருஷத்திற்குள் சின்னம்மா படிப்பு தண்ணீர்போல் மழமழவென்று வந்து விட்டதம்மா. வாத்தியாயர் ரொம்பக்கெட்டிக்காரர். நல்ல குணம். இங்கிலீஷ்தான் அவர் எப்படிப் பேசுகிறுர்! அன்றைக்கொரு நாள் பார்த்தேன். 'தஸ். புஸ்' என்று ஓயாமல் பொறியத்தான் செய்கிறுர்!

ராதா:— ஹெட்மாஸ்டரும் நம்ம மாமாவும் இங்கிலீஷில் பேசினுல் ஹெட்மாஸ்டர் திகைத்துத் திகைத்து ஒரு வார்த்தை சொல்வதற்கு முன் மாமா பத்துவார்த்தை பேசி விடுவார்கள்.

அநந்:—அப்படியானுல், ராதா, உன்னை மாமாவுக்கு விவாகம் செய்து விட்டாலென்ன? செட்டியாராயிருந்தாலுமிருக்கட்டும்; குற்றமில்லை (என்று சொல்லி முடிப்பதற்குள்)

ராதா:—(புந்நகை கலந்த பொய்க்கோபத்துடன் தாயின் வாயைத் தன் கையினுல் மூடிக் கொண்டு) என்னம்மா? அப்படிச் சொல்லாதே! இனிமேல் அப்படிச் சொன்னுல் அழுவேன் (என்று சொல்லிக் கொண்டு சிரித்தாள்)

அநந்:—என்ன ராதா? அழுவேன் என்று சொல்லிக்கொண்டு சிரிக்கத்தானே செய்கிறுய்?

ராஜு:—அம்மா, அப்படிச் செய்யலாமா?

என்ன அழகான கூந்தல்

நீளம்...மிருதுவு......
எனெனில் ஆரோக்கியமானது
வாசனைத்தேங்கா
யெண்ணெய்

தலைமயிர் பிசுக்குத் தட்டாமல் நல்ல பளபளப்புடன் பிரகாசிக்க வாசனைத் தேங்காயெண்ணெய்.

ஔஷத வாசனை
கூந்தல் டானிக்

தலைமயிர் வளர்ச்சி குன்றி அழகுங்குன்றி இருக்கிறதா? அப்படியானுல் இந்த டாம்கோ ஹேர்டானிக்கை தடவி வாரிப் பாருங்கள்; ஓரிரு நாளில்அதில் உயிரும் ஒளியும் பிரகாசிக்கும்.

இதர டாம்கோ சரக்குகள்
ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை மிகுந்த கூந்தல் டானிக், லேம்ஸ் & கிளிஸரின்

TOMCO

டாம்கோ விற்பனை இலாகா
19 A வாணியர் தெரு, மதராஸ்

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்., பம்பாய்.

(T H 410)

ஏமாறுதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது எனப்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறேம்

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,

பழனி, S. I.

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.

(கேட்லாக இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்
187, சைனு பஜார் ரோட். ஜி டி
மதறஸ்

அநங்:—ஏன்? செய்தாலென்ன? செட்டிகளும் பிள்ளைமாரும் கலந்து விவாகம் செய்வதுபோல் நாமும் செய்யப்படாதா? துணிவுதான் வேண்டும்

என்று மூவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுதே நந்தகோபர் வெளியிலிருந்து வந்துவிட்டார்.

இவ்வாறாக ராதா அமரேசன்மீது உயர்வான எண்ணங்கொண்டிருப்பினும், அவ்வெண்ணம் அன்பு வடிவமாயிருந்ததன்றிக் குறிப்பான காதல் வடிவம் பெறவில்லை. புருடபாரியரியல்பு வாசிக்கத் தொடங்கிய காலமுதல் அவள் மனம் தனக்கிசைந்த நாயகனொருவனை நாடிச் சென்றதுண்மையாயினும் அமரேசனைப்பற்றி ஒன்றும் நினைக்கவில்லை. அமரேசன் குருஸ்தானத்திலும், ராதா சிஷஸ்தானத்திலுமிருந்த ஒரு காரணமே அவள் மனத்தில் அப்படிப்பட்ட எண்ணத்தை உண்டாக்கவில்லை. அன்றியும் தொடக்கமுதல் பக்தியும் பயமும் அன்பும் வைத்துவந்த ஒரு பேரின்பக் கர்த்தாவின் மீது, சிற்றின்பத்துக்கியல்பான ஆசையும் விடாயுங் கலந்த காதலுணர்ச்சி தோன்றுதல் உலகத்தில் மிகவும் அரிது. ஆகவே, ராதா இதுவரை அமரேசனுடன் பேசிய பேச்சும் அவனைப் பார்த்த பார்வையும் பக்திப் பேச்சும் பக்திப் பார்வையுமாகவேயிருந்தன. காதலின் மணமும் கூட அவற்றிலில்லை. இனி அமரேசனுடைய பேச்சும் பார்வையும் காதலும் கருணையும் கலந்திருந்தன. அவற்றின் கருணைக் குறியை மட்டும் ராதா அறிந்தாளேயன்றி, அவன் பேச்சிலும் பார்வையிலும் கலந்து கிடந்த காதற் குறிகளைப் பகுத்தறியும் அறிவும் நுட்பமும் இதுவரை அவளிடம் அமையவில்லை. ஆனால் அன்று தன் தாயக்கும் சேவகன் ராஜுவுக்குமிடையில் நடந்த சம்பாஷணையையும் தன் தாய் தன்னிடம் பரிகாசமாய்ச் சொன்ன வார்த்தைகளையும், செட்டிகளும் பிள்ளைமாரும் கலப்பு விவாகம் செய்யும் வழக்கத்தையும், இதற்கனுகூலமான இவைபோன்ற விஷயங்களையும் நினைக்கவே, மெல்லிய வற்றுளெல்லாம் மெல்லிய ராதாவின் இருதய கமலத்தில் தன் குருவாகிய அமரேசன் மீது ஒரு லேசான காதல் போன்ற ஒருவித ஆசையின் சாயல் சிறிது தோன்றத் தொடங்கிற்று.

பார்த்தோர் கண்களைக் கொள்ளைகொள்ளும் அசாதாரணமான பிரகாசமுடைய பெரிய நக்ஷத்திரங்கள், பகற்பொழுதெல்லாம் இருக்குமிடந் தெரியாமல் மறைந்து கிடந்துவிட்டு, சூரியாஸ்தமன காலத்தில் கண்ணுக்கெட்டாத பல்லாயிரம் யோசனை தூரத்திற்கப்பால் மெல்ல மெல்லத் தோன்றியும் தோன்றுமலும் மறைந்து மறைந்து மினுங்கத் தொடங்குவதுபோல், ராதா அமரேசன்மீது அன்று கொண்ட—மேற்கூறிய காதற் குறிதாங்கிய உணர்ச்சியானது ராதாவின் மனப்பார்வைக்கு வெகு தூரத்தில் வெகு நுட்பமாய் ஒரு கனவுபோல் முதன்முதல் தோன்றத் தொடங்கிற்று. அமரேசன் தனக்கிசைந்த நன் மனைவி கிடையாவிடின் விவாகமின்றிப் பிரம்மசாரியாய் இருக்கப் போவதாய்ச் சொன்ன வசனமும், பெண்களும் கல்வியும் தைரியமுமுடையவர்களாயிருந்தால் சுகமடையலாமென்று அவன் கூறிய வார்த்தையும் ராதாவின் எண்ணங்களினூடே சென்றன. இது மட்டுமா? "இவ்வளவு அரிதினுமரிய நற்குணமும், கடலினும் விரிந்த கல்வியும், பார்ப்போரை மகிழ்விக்கும் கருணைப் பார்வையும், கேட்போர்க்கினிக்கும் சாதுரியமான நாவன்மையுமுடைய நமது சற்குருநாதனுகிய அமரேசருக்கு மனைவியாய் எவள் இவ்வுலகில் பிறந்திருக்கின்றாளோ அவளே பாக்கியசாலி; அவருடைய திருவுள்ளம் எவள் மேற் பற்றுமோ அவளே புண்ணியவதி; அவருடைய கருணைப் பார்வையையும் இனிய வசனத்தையும் தன் ஆயுள்பரியந்தம் எவள் ஓயாது அனுபவிக்கப் போகின்றாளோ அவளே உத்தமி" என்றிவை போன்ற கருத்துள்ள எண்ணற்ற எண்ணங்கள் ராதாவின் குடிசைபோன்ற சிறிய மனத்துள் மாறிமாறிப் புகுவதும் போவதுமாயிருந்தன. இன்னும் ஒரு விஷயம். ராதாவின் மனத்தில் இன்று நிகழ்ந்து கொண்டிருந்த எண்ணங்களை அமரேசன் சிறிதேனுமறிவானு? இல்லை. அல்லது, ஒரு வருஷ காலத்திற்கு மேலாய் அமரேசன் மனத்தில் நிகழ்வதை ராதா அறிவாளா? அதுவுமில்லை அமரேசனுடைய கிருபாநோக்கம் தனக்குக் கிடைக்குமோவென்று ராதா தயங்குகின்றாள். ராதா தன்னை ரக்ஷிப்பாளோ கைவிட்டுவிடுவாளோவென்று அமரேசன் மனமுடைந்து மாய்கின்றான். ஒருவரையொருவர் உள்ளறியாமல், தனித்தனிகொண்ட காதலே ஒவ்வொருவரையும் இவ்வாறு தனித்தனி வாட்டத் தொடங்கிவிட்டதாயின், ஒருவரையொருவர் உள்ளறிந்தபின் தோன்றும் அந்நியோந்நியக் காதல் என் செய்யுமோ அறியோம்.

(தொடரும்)

அற்புதமாக இல்லையா

ஆம், அற்புதமே!!

"புரொபஸர்—இன்னவர்—மாயா பத்திரக்காரர் அமெரிக்காவிலிருந்து வந்திருப்பவரின் மாயா சக்தி இதோ இருக்கிறது! அற்புத வேலைசெயவது—உண்மையானது உங்கள் மனோபீஷ்டங்கள் யாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

மாய மோதிரம்

1½ வருஷத்திற்குள் 1,27,000 மோதிரங்கள் விற்பனையாகிவிட்டன. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குக்கு மட்டுமென்றி, வெளி நாடுகளுக்கும் இது சென்றிருக்கிறது.



விலை ரூ. 2-தான்

இனும் ரூ. 100

3 மோதிரங்கள் வாங்கினுல் ரூ, 5; 6-க்கு ரூ. 8; 12-க்கு ரூ, 14 தபால் & பாக்கிங் செலவு தனி. உபயோகிக்கும் முறை பார்சலுடன் வரும். உபயோகித்துப் பலனில்லையெனக்கண்டால் நிரூபிப்பவர்களுக்கு பூராகிரயமும் ரூ.100-ம்இனும்.

(உங்கள் திருப்திக்காக இதோ சில நற்சாக்ஷிகள்)

1. பண்டித என். கிஷோர் சர்மா, போஹம்பூர் ரோட், சித்தாமன் ஸ்டேட், மத்திய இந்தியா எழுதுவதாவது:-"தங்கள் மாய மோதிரம் நல்ல பலனளித்தது. இன்னென்று அனுப்பவும்."

2. டாக்டர் எச் கோஸ்வாமி, P. O. கல்பாரி, குதியா சத்ரா கிராமம் அஸ்ஸாம் எழுதுவதாவது: 'தங்கள் மாய மோதிரத்தின் உதவியால் லாட்டரியில் எனக்கு ரூபா 1500 கிடைத்தது. வேறு உத்தியோக விஷயத்திலும் நல்ல வேலை செய்கிறது.

3. டாக்டர் டின் அலி சாஹிப், டாமாடிஸ்பென்சரி, P. O. கைகட்டா, ஜெஸ்ஸார் எழுதுகிறுர்:-'கோரிய பலன் கிடைத்தன. என் மனைவி நீண்டகாலமாக காச நோயால் கஷ்டப்பட்டாள்; இப்பொழுது ஒன்றுமில்லை. மலடி ஒருத்தி மகவைப் பெற்றுள்.'

4 டாக்டர் ஜய் பூஷண முகர்ஜி P. O சதாயி, பெல்டங்கா மார்க்கம், கிழக்கு வங்காள ரெயில்வே எழுதுவதாவது:-"மாய மோதிரம் ரொம்ப உபயோகப்பட்டது, அதன் துணையால் நான் வைத்தியப் பரீட்சையில் முதலில் தேறினேன்."

5 லியூன் பூகான் c/o வ. எஸ். வாட்சன & கம்பெனி லிமிடெட், அலெக்ஸாண்டிரியா, ஹாங்காங் எழுதுகிறுர்:-"இத்துடன் ரூபா 2-8க்கு மணியார்டர் அனுப்பியிருக்கிறேன். மோதிரம் ஒன்று அனுப்பவும்.

6. மிஸ்டர் ப்ரேம் பிஹாரிலால், மத்தார் கத்தியார் ரைஸ் & ஆயில் மில்ஸ, P. O. கத்தியார் மல்ஸ் பூர்ணியாஜில்லா எழுதுவதாவது:-"தாங்கள் மாய மோதிரத்தால் நல்ல பலன் கண்டேன். எனவே என் நண்பர் ஒருவருக்கு இன்னென்று அனுப்பிவைக்கவும்."

மொத்த ஏஜண்டுகள் :

BENGAL MESMERISM HOUSE,

No. 29, Panchpota, BENGAL.

கண்ணோட்டம்

பிரமுகர்கள்

(மேல் படம்)

கல்கத்தா இத்தாலிய ஸ்தானீகரான (இடது பக்கம்) சயில்லோ கியுரியாடியும், காபூல் இத்தாலிய ஸ்தானிகரான பீட்ரோ க்வாரனியும் சமீபத்தில் நியமனம் பெற்று இந்தியா வந்து சேர்ந்தனர்.

சென்னைக் கார்ப்பொரேஷனின் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் திவான்பகதூர் ஆர். சுப்பைய நாயுடு.

ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறிய ஸ்ரீமான் என். இ. எஸ். ராகவாச்சாரி.

சென்னை ஸ்பென்ஸர் அண்டு கம்பெனியில் உத்தியோகம் வஹிக்கும் ஸ்ரீமான் எம் எஸ் ஜீவரத்னம் செட்டி சென்னை நகர கௌரவ மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை சிவாஜி வியாயம மண்டலின் வருஷாந்தக் கொண்டாட்டத்தின் போது பல அரிய தேகாப்பியாஸ வேலைகளைச் செய்து காட்டிய ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணசாமி.

ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறிய ஸ்ரீமான் என் சுப்ரமணியன்.

டாக்டர் மிஸ் சுபத்ராபாய், எம். பி. பி. எஸ். இவர் எப். ஆர். ஸி. எஸ். பட்டம் பெறுவதற்காக இங்கிலாந்து சென்றிருக்கிறார்.

பேச்சுத் திருத்தம்

——::——

"பூரி."

"திம்மாச்சி பண்டிதரே! சௌக்கியமாங்காணும்?" என்று தெருவில் சென்று கொண்டிருந்த ஒருவர் மற்றொருவரை விசாரித்தாராம்.

"அதெப்படி ஐயா நான் பண்டிதர் என்று உமக்குத் தெரிந்தது?" என்று பண்டிதர் கேட்டார்.

"மூஞ்சியைப் பார்த்தால் தெரியவில்லையா?" என்று பதில் வந்தது.

ஆனல் நாகரிகம் முன்னேறி வரும் இந்தக் காலத்தல் முகத்தைப் பார்த்து மட்டும் அப்படியெல்லாம் சொல்லிவிட முடியாது

ஐரோப்பிய உடை அணிந்து, 'பாழான கெற்றி'யுடனும் கிராப் தலையுடனும் விளங்கும் பேர்வழியைப் பார்த்த மாத்திரத்தில் யார் என்று நிர்ணயிக்க முடியும்? அதிலும் இன்ன ஜில்லாக்காரர் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?

எந்த ஜில்லாவென்று கண்டு பிடிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. உம்முடன் பேசிக்கொண்டிருப்பவரை "ஸார் ஒன்பதுக்கு ஒன்பது என்ன?" என்று கேளுங்கள். அவர் உமக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று எண்ணிக்கொண்டு பேசாமலிருந்தாலும் இருக்கலாம். அல்லது "எம்பளத்தி ஒன்று" என்று கன்னத்தில் அறைந்ததுபோல் பதில் சொன்னாலும் சொல்லலாம். இந்தப் பதில் வந்தால் நீங்கள் உடனே தஞ்சாவூர் சரக்கு என்று தீர்மானம் செய்துகொள்ளுங்கள். இதேமாதிரி ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பிரத்தியேகமான வார்த்தைகள் உபயோகிப்பதைக் கண்டு பிடித்து இன்ன ஜில்லாக்காரரென்று தெரிந்து கொள்ளலாம்.

சதாசிவம் இந்த 'எம்பளத்தி ஒன்று டிரேட் மார்க்' உள்ள பேர்வழி. அதாவது அசல் தஞ்சாவூர் ஆசாமி. காலேஜ் விட்டதுமே அவனுக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது. கள்ளிக்கோட்டையில் ஒரு பாங்கில் குமாஸ்தா உத்தியோகம்.

வேலைக்குப்போய் ஐந்தாறு வருஷம்வரையில் எனக்கு அவனைப் பற்றி ஒரு தகவலும் கிடையாது. ஐந்தாறு மாதங்களுக்கு முன், அவன் சென்னைக்கு மாற்றப்பட்டு வந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டேன். அவன் வீட்டு விலாசத்தைத் தெரிந்துகொண்டு அவனைப் பார்க்கப் போனேன்.

அந்த விலாசத்தில் வாசலில் நின்றுகொண்டு மாங்காய் வாங்கிக்கொண்டிருந்த ஒரு பெண்மணியைப் பார்த்து "சதாசிவம் இந்த விட்டில் தானே இருக்கிறர்?" என்று விசாரித்தேன்".

"அதே. ஈவீடுதன்னே. இன்னும் ஆப்பீஸினின்றும் வந்து நில்லா" என்று பதில்வந்தது.

அந்த ஸ்திரீ மலேயாளத்தில் பேசியதும் எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. விலாசம் தவறிப்போய் வேறு யார் வீட்டிலாவது வந்து விசாரிக்கிறேமோ என்று எண்ணிச் சட்டைப்பையிலிருந்த கடிதமொன்றை எடுத்து விலாசத்தைப் பார்த்தேன். சரியாயிருந்தது.

"மலேயாளம் பாங்கியிலிருக்கிறரே அந்த சதாசிவம்" என்றேன்.

"அவருடைய வீடு தன்னே" என்றாள்.

எனக்கு மலேயாளம் தெரியாத போதிலும் பேச்சுத் தோரணையிலிருந்து ஒருவாறு அர்த்தத்தை ஊகித்துக் கொண்டேன்.

"எப்பொழுது வருவார்?" என்று கேட்டேன்.

"எப்போ என்ன நிச்சய மாய்பரயான்வய்யா" என்றாள். "பரயான் வய்யா" என்பதற்கு அர்த்தம் புரியாததால் நான் பிறகு வருகிறேன்" என்றுசொல்லிக்கிளம்பினேன்

"நிங்கல் யார் என்ன பரயானும்?" என்று கேட்டாள்.

"என் பெயர் அவருக்கு ஞாபகமிருக்கிறதோ, இல்லையோ. எதற்கும் ரங்கநாதன் என்று சொல்லுங்கள். நாளைக்காலை நான் வருகிறேன்" என்று சொல்லி வீடு திரும்பினேன்.

* * * *

மறுநாள் சதாசிவத்தைப் போய்ப் பார்த்தேன்.

நெடுநேரம் பழைய விஷயங்களையெல்லாம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அவன் பாலக்காட்டிலேயே தான் காதலித்த ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டதாகத் தெரிவித்தான்.

இதற்குப் பிறகு நாங்கள் அடிக்கடி சந்திப்பதுண்டு. தான் தன்மனைவி பார்வதியின் மலேயாளப் பேச்சை மாற்ற முயன்று வருவதாகவும், அதில் அவள் அபிவிருத்தியடைந்து வருகிறாளென்றும் கூறினான். இதற்காக அவன் பட்ட சிரமம் கொஞ்சம் நஞ்சமல்ல. தஞ்சாவூர் பேர்வழிகளாகப் பார்த்து சிநேகிதம் பிடித்துப் பார்வதியை அவர்கள் வீட்டு ஸ்திரீகளுடன் அதிகம் பேசிப் பழகச் செய்தான். தானே தினம் இரண்டு மணி நேரம் அவளுக்கு 'ட்யூஷன்' மாதிரி சொல்லிக் கொடுத்து வந்தான்.

பார்வதி கெட்டிக்காரி. எதையும் கிரகித்துக்கொள்ளக் கூடிய சக்தி அவளுக்கு உண்டு. நாளாக நாளாக அவள் மலையாளப்பேச்சுக் குறைய ஆரம்பித்தது.

சதாசிவத்தைச் சந்திக்கும் போதெல்லாம் அவன் தன் மனைவி அடைந்துவரும் அபிவிருத்தியைக் குறித்து என்னிடம் பெருமையுடன் சொல்லிக் கொள்வான்

* * * *

நடுவில் இரண்டு மூன்று மாதங்கள் நான் வெளியூர் போயிருந்துவிட்டுச் சென்ற வாரம் தான் திரும்பினேன் நேற்று சதாசிவத்தைப் பார்த்து வரலாமென்று போனேன்.

நான் சென்ற சமயம் கணவனும் மனைவியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பார்வதி சாதாரணமாக என்னிடம் பேசுவதுண்டு. அவள் என்னைக் கண்டதும் "வாங்கோ! உங்களுக்கு நூறு வயஸு இப்போ தான் உங்களைப்பத்திப பேசிக்கிண்டிருந்தம்" என்றாள்.

அவள் மலேயாள இராகம் எதுவும் இல்லாமல் இப்படிப் பேசியதைக்கேட்டு சதாசிவத்தைப்பார்த்துச் சிரித்தேன்.

அவன் சந்தோஷத்துடனும் பெருமையுடனும் "அதே; நிங்களைப்பற்றித் தன்னே ஸம்சாரிக்கொண்டிருந்தோம். இப்போ எங்ஙனே ஸம்சாரிக்குன்னு நோகு"

நான் ஒன்றும்புரியாமல்விழித்தேன். பார்வதி "ஆமாம்! உங்களைப்பற்றித்தான் பேசிக்கிண்டிருந்தம். இப்போ எப்படிப் பேசறுபாத்தியா என்று கேக்கறர்" என்று எனக்கு வியாக்யானம் சொன்னாள்.

சதாசிவம் இப்பொழுது அசல் மலையாளம் பேசி வருகிறான். பார்வதி தஞ்சாவூர்ப் பெண்ணு இல்லையா என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகமே ஏற்படுவதில்லை.

"சதாசிவம் இந்த வீட்டில்தானே இருக்கிறர்?" என்று விசாரித்தேன்.

"அதே ஈ வீடு தன்னே இன்னும் ஆப்பீஸினின்றும் வந்து நில்லா" என்று பதில் வந்தது.

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்!

கீழ்க்கண்ட எதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.

சாம்பாக்	ரூ. 2-0	போகுல்	ரூ. 1-8
காஷ்	,, 2-0	ஹீனு	,, 1-8
கேவ்டா	,, 2-0	லில்லி	,, 1-0
மஸ்க்	,, 2-0	தாமரை	,, 1-0
கதம்பம்	,, 1-8	கோலோன்	,, 1-0
மல்லிகை	,, 1-8	மோதியா	,, 1-0
ரோஸ்	,, 1-8	ஸ்வீட்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக்கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு.

S. PAUL & Co., Perfumers, (Dept. S. W.) 4, Hospital Street, Dharamtola, Calcutta.

தையல் வேலை

—:[o]:—

ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.

[காபிரைட்]

மணி வேலை

மணியினலான கை பை

கண்ணாடி கோதுமை மணியாவது உருண்டையான மணியாவது உபயோகிக்கலாம்.

சாதாரண ஊசியில் கெட்டியான நூலை கோர்த்துக் கொண்டு, உருண்டையான மணிகளில் பதினன்கு மணிகளைக் கோர்த்துக் கொள்ளவும். பின்னர் வேறோர் மணி கோர்த்துக்கொண்டு கடைசியில 14-ம் மணியை விட்டு 13-ம் மணியில் ஊசியைப் பின்புறமாக விட்டு முன்னுக்கு இழுக்கவும். இந்த முறையாக 1 மணி விட்டு அடுத்த மணியில் ஒரு ஒரு மணி கோர்த்துத் தைக்கவும். ஒவ்வொரு வரி திருப்பும் போதும் ஒரே பக்கமாகத் தைத்துத் திருப்ப வேண்டும். கடைசியில் ஒரு மணி கோர்த்து முதல் மணியைவிட்டு அடுத்து வரும் மணியில் எப்போதும் கோர்க்கவும். அப்போது அந்த வரிசை ஒழுங்காகவும் கிரமமாகவும் அமையும். இப்படியே மாறி மாறிப் பையின தேவையான நீளத்திற்குத் தைத்துப் பிறகு சாதாரண துணிப் பையை மடிக்கிறாப்போல மடித்து கெட்டி நூல் கோர்த்த தையல் ஊசியினல் இரண்டு பக்கமும் தெரிகிற நூலைச் சேர்த்து அமையும்படித் தைக்கவும். கைப் பிடிக்காக கடைசியில்



தைத்து வரும்போது நூலைத் தேவையான அளவிற்கு சரியாய் விட்டு எந்த நிற மணி உங்களுக்குப் பிரியமாய் அமையுமோ அதைக் கோர்த்து கடைசியில் கெட்டியாய் முடிக்கவும்.

இன்னும் பெரிய அளவான பை தேவையானல் மணிகளை இரட்டை மடங்கு கோர்க்கவும். தேவையான மணிகளைக் கோர்த்து இஷ்டம்போல் அளவு பார்த்துக் கொள்ளவும்.

(தொடரும்.)

மோசம் எப்பொழுதும் நாசம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வண்டி மாடு வாங்கி, வாடகைக்கு ஓட்டி அதைக் கொண்டு கடனைக் கொஞ்சம், கொஞ்சமாகக் கட்டி விடுவதென்று முடிவு செய்தான். வண்டி மாட்டுக்கும் அந்த தர்மதாதா விடமே கடன் பெறச் சென்றான்.

அவரிடம் கிணறு, மாடு, இவைகள் தயாராகி விட்டதென்றும், விதைப் பண்டம், எருவு, முதலிய சாகுபடி வகையராச்செலவுகளுக்கு நூறு ரூபாய் கடன் கொடுத்து, காப்பாற்றும்படி கேட்டான் சங்கரன். அவரும் மனம் கோணமல் ரூபாய் கொடுத்தார்.

சங்கரன் அதிக சிரத்தையுடன் பெற்றுச் சென்றான். முன்போலவே மேற்படி கிணற்றங் கரையில் வைத்துவிட்டு, ஸ்நானம் செய்துவிட்டு வந்து முடிப்பை பார்த்தான். முடிப்பு இருந்த இடத்திலேயே இருந்தது. சந்தோஷம் கொண்டான். பிறகு அங்கேயே சமையல் செய்து சாப்பிட்டுச் செல்ல எண்ணினன். அருகிலிருந்த கடையிலிருந்து சாமான்கள் வாங்கி வந்தான். விறகிற்காக அருகிலுள்ள ஆலமரத்திலேறி அதிலுள்ள காய்ந்துபோன கிளைகளை முறித்தான். அதிலிருந்து பணமுடிப்பு பொத்தென்று கீழே விழுந்து ரூபாய்கள் நாலாபக்கம் சிதறி ஓடின. சங்கரன் கீழே குதித்தான். ஆனந்த தாண்டவமாடினன். பொறுக்கி எடுத்துக் கொண்டு கிணற்றுக்கு வந்தான். அடுப்பில் வைப்பதற்கு 'விராட்டி' ஆகுமென்று காய்ந்து கிடந்த சாணி மொத்தையை எடுத்தான். அதில் பழையபடி நூறுரூபாய் முடிப்பு அப்படியே இருக்கக் கண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான்.

மூன்று முடிப்பு பணத்தையும் எடுத்துக்கொண்டு அந்த தர்மதாதாவிடம் ஓடோடியும் வந்தான். அவர் பாதத்தில் வைத்து,

நமஸ்கரித்து, தன்னை மன்னிக்கும்படி அழுதான். அவரும் விஷயம் என்னவென்று கேட்க, அவன் ஆதிமுதல் தனது கருத்தையும் அதற்குப் பிறகு நடந்த மோசங்களையும், தான் கொண்ட உறுதியையும், பிறகு சாணியல் போன முடிப்புகள் கைக்கு எட்டியவிதத்தையும் கூறி, தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான்.

அவரும் அவனை மன்னித்து "மோசம் எப்பொழுதும் நாசம்" என்று கூறி நூறு ரூபாய் சன்மானம்கொடுத்தனுப்பினர்.

இரங்கோன் கலர் சிந்தடிக்கற்கள் மணிமாலைகள்

இந்தியாவில் எல்லா பாகங்களிலும் ஏராளமாய் விரும்பக்கூடிய தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு கெமிகல் கோல்டினல் புதுமாதிரியாய் தயார் செய்தவை. இவைகள் ஸ்திரீகள் குழந்தைகள் நேர்த்தியாய் அணிந்து கொள்ளலாம்.

25" நீளமுள்ள கலர் கல்மாலை 1க்கு ரூ. 4-0-0
டை பெண்டனடு போட்டது 1க்கு ,, 5-0-0
ஜாலர் ஒட்டியாணம் பெரியது 1க்கு ,, 6-8-0
நெ.1. சாதா கெஜ்ஜை ஒட்டியாணம் 1க்கு 5-8.
நெ. 2. 1க்கு 3-8-0 நெ. 3. 1க்கு 2-8-0
கைவளையல்கள் பெரிய. சைஸ் ஜதை 1-க்கு 2-8-0. கெமிகல் கோல்ட் ரங்கோன் டைமண்டு 14 கற்கள் உள்ள கம்மல் ஜதை 1க்கு 6-0-0. எல்லாவற்றிற்கும் 5 வருஷம் உத்தரவாதம். F. M. O. ஆர்டருக்கு முன் பணம் அனுப்பவும்.

கே. நாதமுனி & சன்ஸ்,
(ஸ்தாபிதம் 1910.)
168, சைனா பஜார் ரோட் மதராஸ்

நவ நாகரீகம்

சில மாலை தினுசுகள்

(காசினி எழுதியது.)

* * * 'கடிகாரச் சங்கிலி, காப்பிக்கொட்டை மாலை, பிரும்ம முடிச்சு, அவல் மாலை, மணி மாலை இவைகளைத் தவிர மாலை தினுசுகள் வேறு கிடையாதா? என் தம்பி பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயமாகி இருக்கிறது. தை பிறந்ததுமே கலியாணம் ஆகிவிடும். தை பத்துத் தேதிக்குள்ளேயே இரண்டு முகூர்த்தம் பார்த்திருக்கிறார்கள். எனக்கு அத்தைச் சீரை, ஒரு மாலையாகச் செய்து போடலாமே என்று தோன்றிற்று. அப்புறம் அவசரம், அவசரமாக வாங்குவதைவிட, ஆர அமர, நாலு தினுசுகளைப் பார்த்து, நல்ல மாலையாக ஒன்று செய்யத் தீர்மானித்திருக்கிறேன். எங்கள் ஊர் தட்டானைக் கூப்பிட்டு, சங்கிலி தினுசுகள் கொண்டு வரச் சொன்னேன் அவன் கொண்டு வந்தது எல்லாம் பழைய மாஸ்தர்களாவே எனக்குப் பட்டது. புதிய தினுசு என்று அவன் காட்டினதும் எனக்கு அவ்வளவு கப் பிடிக்கவில்லை. காப்பிக்கொட்டை மாலையிலேயே நடு நடுவே இதர தினுசுகளில் செய்யப்பட்ட மணிகள் முதலியவற்றைக் கோத்து இருந்தது. இதெல்லாம் எனக்கு மனதிற்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. எதாவது புதிய தினுசுகளாக இருந்தால் எழுது!' என்று நீ கேட்டிருக்கிறாய்.

இங்கும் அப்படிப் புதிய தினுசு என்று சொல்லும்படி ஒன்றையும் காணேோம். இந்த 'மணி மாலைகள் தான்' இப்பொழுது முழங்குகிறது. மாலையின விலை முப்பது, முப்பத்தைந்து ரூபாய்களுக்குள் அடங்கி விடுகிறதினால், புடவையின் வர்ணத்திற்கு ஏற்றாப்போல, ஆளுக்கு இரண்டு, மூன்று நிறங்களில், மணி மாலைகளை வாங்கிப் போட்டுக்கொள்ளுவது தற்காலத்தில் ஒரு நாகூக்காக வழங்குகிறது. நீ சொல்லுவதைப் பார்த்தால், நாலைந்து பவுன்களுக்கு ஒரு வடம் செய்ய உத்தேசிக்கிறாய் என்று தோன்றுகிறது. போன வாரம் லேடி சின்னையா தன் பேத்திக்கு ஒரு ஒத்தைவடம் மாலை வாங்கினாள். கூலி உள்பட நூற்றுப் பத்து ரூபாய்கள் ஆச்சுது இதற்குக் கடைக்காரன் சுருதி கருகமணி மாலை என்று பெயர் சொன்னான். இதழ் பூ இதழ்கள் மாதிரியில் செய்து, இணைத்திருந்தது ஒவ்வொரு இதழும் சுமாருக்கு ஒரு குமபிடி அகலமிருந்தது. இதழ்களின் ஓரங்கள் அழகாகக் கத்தரிக்கப்பட்டிருந்தது. மாலையின் எடை நாலு பவுன் சொச்சம் இருந்தது. கூலிமட்டும் அசாத்தியம்; இருபத்தி ஐந்து ரூபாய்கள் ஆச்சுது. மாலை பார்வைக்கு மிகவும் அழகாகவும், நாகூக்காகவும், நேர்த்தியாகவும் இருந்தது. ஆனால், லேடி சின்னையாவின் பேத்திமட்டும், குத்துகிறது என்று சொல்லுகிறாள். குழந்தைக்குக் கழுத்தில உறுத்துகிற மாதிரியில் தோன்றுகிறதோ என்னமோ? பெரியவர்கள் போட்டுக்கொள்ளச் சரியாக இருக்கும் என்றே எண்ணுகிறேன். கடையில் மற்றொரு தினுசும் பார்த்தேன். எதுவும் ஒரு ஒத்தை வடம் சங்கிலிதான் மூன்றரைப்பவுன் எடை இருப்பதாகக் கடைக்

அண்ணாமலை சர்வகலாசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்திரீகள் ஹாஸ்டல் வாசிகளும், உப அத்யக்ஷர் மஹாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும்.

காரன் சொன்னான். கூலி பதினைந்து ரூபாய்கள். கை கடியாரம் கட்டிக்கொள்வதற்கு, ஒன்றின்மேல் ஒன்று இணைத்து இழுத்த மாதிரியில் ஒரு தினுசு 'ஸ்பிரிங்' சங்கிலி நீ பார்த்திருக்கிறாய் இல்லையா? இந்த மாலையும் கொஞ்சம் அந்தமாதிரியில் தான் இருந்தது. 'ஸ்பிரிங்' இல்லை; சிறிய, சிறிய துணுக்குகளாகச் செய்து இணைத்திருந்தது. பார்வைக்குப் பள பளப்பாகவும், வழ வழப்பாகவும் இருந்தது. எனக்கு இந்த மாலை மிகவும் பிடித்திருந்தது. ஆனால் இந்த மாலை, சந்திரகாந்த ஹாரத்தைப்போல் பார்வைக்குக் கனிசமாக இல்லை. மாலை தினுசுகள் உனக்குப் பிடிக்காவிட்டால், ஒரு வைர மோதிரமாகச் செய்து கொடுக்கிறதுதானே? இப்போ வைரம் என்னமோ மலிவாக அகப்படுகிறது. சுங்கவரி குறைந்திருப்பதினால், போன வருஷத்தை விட இப்பொழுது இன்னும் விலை குறைந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒரு வைரமும், ஒரு சிகப்பு, அல்லது நீலம் வைத்து, நல்ல, அழகிய மோதிரம் ஒன்று, நீ சொல்லும் ரூபாய்களுக்குள் செய்யலாமே! எல்லாவற்றிற்கும் யோசித்து எழுது.

காய் கறி

காய் கறிகளை வேக வைப்பதினால், அதில் உள்ள சாராம்சங்கள் வெந்த ஜலத்தில் இறங்கி விடுகிறது; பாக்கி இருப்பது சத்து அற்ற சக்கைதான். இதனால், எல்லாவற்றையும் ஒன்று கூட்டி, குழம்பு போன்ற போஜன பதார்த்தங்களாகச் செய்து சாப்பிட வேண்டும்; அல்லது வேக வைக்காமல் வதக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள் இல்லையா? இவ்விதம் வேக வைப்பதனால் சத்தெல்லாம் போய்விடுகிறது என்று சொல்லுவது அவ்வளவு சரியில்லை; மிகச் சிறிய அளவே வெந்த தண்ணீருடன் கலந்து, அழிந்து போகிறது என்று இப்பொழுது ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்களாம். காய் தினுசுகளை வேக வைப்பதனால் அதில் உள்ள வைடமின்கள் நசித்து விடுகிறது. எல்லாம பச்சையாகவே சாப்பிட வேண்டும் என்று சொல்லுவது மற்றொரு தத்துவம்; இத்துடன் அதைக் குழப்பிக் கொண்டு விடாதே. இதைப் பற்றி லேடி சின்னையாவின் மகன் ஒரு பத்திரிகையில் வாசித்து விட்டு, 'அம்மா, நீங்கள் இனிமேல் காய்களை வேகவைத்து, வதக்கலாம். அப்படிச் செய்வதினால் குடிமோசம் ஏற்படாதாம்' என்று சொன்னான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த என்னுடைய அத்தை, 'ஆமாம்; பெரியவா தெரிஞ்சுதான் செய்திருப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தால்தானே. நீங்கள் சாக்கடையில் கொட்டும் வெந்த தண்ணீரில்தான் எல்லாச் சத்தும் இருக்கு என்று சொன்னீர்களே? இப்போ, அப்படி இல்லை என்கிறீர்கள். எனக்கு என்னமோ இந்தக் 'குக்கர்' சாதம் கொஞ்சமும் பிடிக்க வில்லை. இதே மாதிரியில் கஞ்சியில் தான் எல்லாச் சத்தும் இருக்கு என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். யாராவது அயல் நாட்டான் ஒருவன் பரிக்ஷை செய்து, அரிசியைக் களைந்து, கழுநீரைப் போக்கி, நல்ல பதத்தில், கஞ்சி வடித்த சாதம் தான் உடம்புக்கு நல்லது என்று சொன்னால், அப்பொழுது உங்களுக்கு அதில் நம்பிக்கை வரும். அதுவரைக்கும் கஞ்சிச் சாதம் தான், சுய புத்தி இருந்தால் தானே?' என்று ஒரு பிரசங்கம் விட்டாள். அத்தை எப்படி? மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

* * * *

சுப்பி:—எந்த சாமானைப் பார்த்தாலும் லக்ஷ்மி விலை கேட்காமலிருப்பதே இல்லை.

சேஷி:—ஏன்?

"நான் கட்டிக்கொண்டிருக்கும் புடவை என்ன விலை என்று கேட்டாள்"

"விலையைத் தெரிந்து கொள்வதில் அவளுக்கு அவ்வளவு ஆசையா? சரி, போகட்டும். நீ என்னவிலை என்றுசொன்னாய்?'

* * * *

Tele:—"SIMILICURE ,Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

கர்ப்பத்தைத் தடுக்க சாஸ்திரீயமான இரண்டு திவ்ய ஔஷதங்கள்

கர்ப்ப நிக்ரஹ வடி
(Temporary Birth Control)
ஒரு வருடத்திற்குக் கர்ப்பமேற்படாமல் தடுக்கும். 12 மாத்திரைகள் கொண்ட டப்பி ரூ. 2—0—0

கர்ப்ப நிவாரணி
(Permanent Birth Control)
இது எப்போதுமே கர்ப்பமுண்டாகாமல் தடுக்கும். 15 மாத்திரைகளும் 8 அவுன்ஸ் பானகமும் அடங்கிய ஸெட் 1-க்கு ரூ. 5—0—0 தான்.
இவைகளை மாதவிடாய் காலத்தில் தான் உபயோகிக்க வேண்டும்.

ஆயுர்வேத பூஷண பண்டிட் K. சுப்ரமணிய சாஸ்திரி, A.K.A.C.
18, கலவ செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

என்ஜினியரது நன்மொழி.

டி. கே. ஐயாசாமி, என்ஜினீயர். ஸ்ரீ வைகுண்டம், 9-3-35.

என் கிருஹத்தில் கேசவர்த்தினியை வருஷத்துக்கு மேலாக விடாமல் உபயோகித்து வருகிறோம். தயாரிப்பவர்கள் அதற்கு என்னென்ன குணங்களை கள் உண்டென்று பிரசுரப்படுத்தியுள்ளார்களோ, அவையெல்லாம் அதற்கு உண்டு என்பது எமது அனுபவம். அதன் உபயோகத்தால் மயிர் உதிர்வது நிற்பதுடன், வழுக்கை இளநரைகளும் தீர்ந்து, கூந்தலும் அதிசீக்கிரத்தில் கருகரு என்று வளர்கிறது. கேசத்துக்கு இதைவிடச் சிறந்தது ஒன்றில்லை என்பதைப் பிரகடனப் படுத்துவதில் எனக்குப் பரம ஸந்தோஷம்.

(கையொப்பம்) டி. கே ஐயாசாமி.

கேசவர்த்தினி விலை அணா 12; ஷாம்பு விலை அணா 12.
மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

அறிவிப்பு

தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழி பிரபல வியாபாரியும், நிலச்சுவான்தாரும், சென்னை, நாஷனல் ம்யூச்சுவல் அஷ்யூரன்ஸ் ஆப் இந்தியா லிமிடேட்டின டைரெக்டரும், திருச்சிநுப்பள்ளியிலுள்ள கீழத் தஞ்சாவூர் மின்சார சப்ளை கார்ப்போரேஷன் லிமிடேட்டின் டைரக்டருமான ஸ்ரீமான் எம். டி. குழந்தைவேலு செட்டியார் அவர்கள் இப்பொழுது சென்னை, நெ. 363, எஸ்பிளனேட் முதல் மெத்தையிலுள்ள இந்தியா லினிடோன் லிமிடெட்டின் (பிராஞ்சாபீஸ்) மானேஜிங் டைரக்டராகவிருந்து பூரா நிர்வாகத்தையும் கவனித்துவருகிறார் என்கிற விஷயத்தைப் பொதுமக்களுக்கு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்தியா லினிடோன் லிமிடெட்.,
பம்பாய்.

நோயற்றவாழ்வு

ஆஹாரமும் ஆரோக்கியாநுகூலமான ஜீர்ண முறையும்

(வைத்தியரத்ன பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேதபூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது)

[நாம் உயிருடன் வாழவும், திடகாத்திரமாயிருந்து தீர்க்காயுளைப் பெறவும் இரத்தம் என்னும் திரவதாதுவே இன்றியமையாதது. அந்த இரத்தத்தின் செழிப்புக்கு ஆஹாரங்களின் ஸத்தே ஆதாரமாயுளது. நாம் உண்ணும் உணவு பலவிதமான அரிசி, காய்கறி, பருப்பு பால், பழம் முதலான உருவங்களாயிருக்க, அவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட உருவமும் தன்மையுமுள்ள இரத்தம் எவ்வாறு அவற்றிலிருந்து உண்டாகுமென்பதையும், அவ்வுணவுகள் சுத்த ரக்தத்தைச் செழிப்பாக விருத்திசெய்யுமாறு உணவு ஜீர்ணமாவதற்கு நமது விவேகத்தை எவ்வாறு உபயோகிப்பதென்பதையும் இவ்வியாஸம் விளக்குகிறது]

ஜீர்ண வேலை

நமது வாய்தான் உணவுகளை உயிர்வாழ்க்கையின் நிமித்தம் வரவேற்று உபயோகப்படுத்தும் வாயிலாகவும், வாக் என்னும் அஸாதாரணச் செயலைக் கொண்டு உயிர் வாழ்க்கையின் உயர்வான உபயோகத்தை விளக்கி நிறைவேற்றும் நிகரில்லாக் கருவியாகவும் அமைந்திருக்கிறது. வாயினால் வாங்கிக் கொள்ளப்பட்ட உணவானது அவ்வாயிலேயே ஜீர்ண ரூபமான மாறுதலுக்கு முதலில் ஆரம்பித்து ஆமாசயம் என்கிற இரைப்பையில் ஆமத்திரவம் என்கிற ஒருவகைக் கூழாகவும், அதற்குக் கீழே கோஷ்டமென்கிற குடலில் இறுதியில் இரத்தமாக மாறுவதற்கான பரிபக்குவத்தையும் பெற்று அகில தாதுக்களையும் போஷிப்பதற்கு அனுகூலமான அபூர்வ குணாதிசயங்களையும் அடைகிறது. ஜீர்ண வேலையென்னும் உணவின் பரிபாக ரீதியானது பிராணதாரணத்திற்கும், உடல் புஷ்டியடைந்து பலம் பெறுவதற்கும் நேர்முகமாகச் சம்பந்தப்பட்ட முக்கியமான பதார்த்த பரிணாம முறைகளுள் ஒன்று. ஆகவே, அவ்வேலை சரியானபடி நிறைவேறுவது ஒவ்வொரு மனிதனுடைய சரீர ரக்ஷணைக்கும் மேலான ஸாதகமாகும். உடலில் அடங்கிய அநேகவிதமான அவயவங்களும் அகில தாதுக்களும் தம் ஆரோக்கிய நிலைமையை நிலை நிறுத்திக்கொள்வது முறை தவறாத ஆஹார ஜீர்ண முறையைப் பொருந்தியிருக்கும் இந்த ஜீர்ண வேலை ஒழுங்கீனங்களுக்கு உட்படவும், அதிலிருந்து அளவற்ற ஜீர்ணக் கோளாறுகளென்கிற அஜீர்ண நோய்கள் கிளம்பவும் முகாந்தரங்கள் பல முகமாக ஏற்படுவது ஓர் ஆச்சரியமல்ல.

ஜீர்ண முறையும் அவயவங்களும்.

முகமென்னும் வாயானது, அதிலடங்கிய நாக்கு, உள் தவடைகள், தொண்டை, பற்கள் ஆகியவற்றோடு பேசுவதற்கு இணையற்ற இயந்திரமாய் அமைந்திருப்பதுமல்லாமல், உணவின் ஜீர்ண வேலையினுடைய முதல் நிலைமையை நிறைவேற்றவும் நிகரில்லாக் கருவியாய் நிர்மிக்கப்பட்டிருக்கிறது. கிரஸநம், தம்சநம், சர்வணம், கிலேதநம், பக்ஷணம், கிரணம் என்கிற ஆறுவித வேலைகள் முகத்தினுள் உணவைப் பக்குவம் செய்யும் விஷயத்தில் நடைபெறுகின்றன. (1) உணவை மொத்தமாக அல்லது கவளமாகக் கிரஹித்துக்கொள்ளும் வேலை கிரஸநம் என்றும், (2) அப்படிப் பெற்றுக்கொண்ட (கிரஸித்த) உணவுப் பொருட்களில் கடினமாயுள்ளவற்றைக் கடித்துப் பொடியாக்குவது தம்சநம் என்றும் (3) அவற்றை இன்னும் மெதுவாகச் செய்யும் மெல்லும் வேலை சர்வணம் என்றும் (4) யந்திரணம் என்கிற மெல்லுவது முதலியவற்றால் மெதுவாக்கிய உணவை இரஸாயன முறையிலும் பக்குவமாக்குவதற்காகவும் குழம்பாகச் செய்யவும் ஏற்றவாறு லாலா ஜலம் என்கிற உமிழ்நீரால் மிகப் பசையுள்ளதாகப் பக்குவப்படுத்தும் செயல் கிலேதநம் என்றும், (5) அவ்வாறு பக்குவமானதைக் கீழ்மேலாகக் கலந்து இரைப்பை ஏற்குமாறு தவடைகளாலும் நாக்காலும் குழைத்துக் கலக்கும் வேலை பக்ஷணம் என்றும், (6) இவ்விதம் முகத்தில் முதற்படியாகப் பக்குவமான உணவை விழுங்கும் வேலை கிரணம் என்றும் படிப்படியான முறையில் வழங்கப்படும். சர்வணம் அல்லது பக்ஷணம் என்கிற மெல்லும் வேலை ஜீர்ண சக்திக்குப் பெரிதும் உதவக்கூடிய ஆரம்ப வேலையாகும்; ஏனெனில் வாயினால் உணவு எவ்வளவுக்கெவ்வளவு மிருதுவாக மெல்லப்பட்டு உமிழ்நீருடனும் கலக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஆமாசயம் என்கிற இரைப்பையினால் துரிதமாகவும் எளிதாகவும் குடலுக்குள் தள்ளப்பட்டு, இரஸமாக மாற்றப்பட அனுகூலம் ஏற்படும். போதியவளவு புசித்து மசித்து உண்ணப்படாத உணவு அடிக்கடியும் அஜீர்ணத்திற்குக் காரணமாகும். "ஜிஹ்வாமூல — கபோலாநாம் ஜலம் பித்தஞ் சரஞ்ஜகம். ஆம-பக்வாசயரஸா: பாசயந்த்யந்நமந்வஹம். ஜாடரேணாக்நிநா வ்ருத்தா தாத்வந்தரகம்தகஸ" என்றால் "நாக்கின் அடிப்புறத்திலும், உள் தவடைகளின் உட்புறத்திலும் அடங்கிய சில அவயவங்களிலிருந்து (கிரந்திகளிலிருந்து) சுரக்கும் திரவமும், உணவைப் பக்குவப்படுத்தி இரஸமாக்கும் மஞ்சள் நிற பித்த நீரும், இரைப்பை, சிறுகுடல் முதலியவற்றில் ஊறும் திரவங்களும் அந்தந்த தாதுக்களினுட்புறத்திலிருந்து உண்டாவதும் ஜாடராக்னியினால் விருத்தியாவதுமான உஷ்ண வீர்யத்தினால் செழுப்பிக்கப்பட்டு உணவைக்குடல்களில் பக்குவப்படுத்தி ஜீர்ணம் செய்விக்க மிக்க உதவுகின்றன" என்று அந்த ச்லோகம் ஜீர்ணமுறையில் உபயோகமாகும் உமிழ்நீர் முதலியவற்றைப்பற்றிய உண்மைக் குணங்களை விளக்குகிறது.



1. அன்னவாஹி. 2. ஆமாசயம். 3. யக்ருத். 4. கிலோமா. 5 கிரஹணி. 6. ஸூக்ஷ்மாந்த்ரம். 7 வர்மி அல்லது கிருமிகம். 8. ஸ்தூலாந்திரம். 9. மலாசயம். 10. இந்த பாகம் ஸூக்ஷ்மாந்திரத்தின் ஒரு பகுதி; இதற்கு அடியில் உள்ள பாகம் வெளியில் தெரிவதற்காக இப்பகுதி வயிற்றை விட்டு வெளியில் இழுக்கப்பட்டதாகப் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

"கிரஹணி"

முகத்தினால் பக்குவம் செய்யப்பட்டு விழுங்கப்பட்ட உணவு அன்னவாஹி அல்லது அன்னநாடி என்னும் தொண்டை முதல் ஆமாசயம் வரையிலுள்ள மாம்ஸபேசியாலான குழாயின் மூலமாய் உதாவாயு என்கிற வாயுவின் இயக்கத்தினால் தள்ளப்பட்டு இரைப்பையில் விழுகிறது. முன் ச்லோகத்திற் குறிப்பிட்ட விதமாய் இங்கு (ஆமாசயத்தில்) ஒருவித திரவம் இவ்வுணவுடன் கலந்து, அங்கு, 'மதநம்' என்னும் கடைவது போன்ற செயலால் மிகக் குழம்பாக்கப்படுகிறது. வாயில் ஆரம்பித்து அன்னவாஹி, இரைப்பை, சிறு குடல், பெருங்குடல், மலாசயம், குதம் என்கிற அவயவமீறாக உட்புறத்தில் ஒரு வகை ச்லேஷ்ம சவ்வு என்கிற ஜவ்வுப்போர்வை நெடுகவும், இவ்வவயவங்களை உட்புறமாகப் போர்த்திருக்கிறது. இந்த சிலேஷ்ம சவ்வில் ஒருவித திரவத்தையும், ஆமாசயத்தில் காரமுள்ள (அம்லத்தன்மையுள்ள) ஒருவித திரவத்தையும், குடலில் ஒருவகைப் பிசின் போன்ற திரவத்தையும் சுரப்பித்து ஆஹாரஜீர்ண வேலைக்கு

உபயோகப்படுத்துகின்றது. இவ்வாமாசயத்தின் (இரைப்பையின்) கீழ்வாய் ஸூக்ஷ்மாந்திரம் என்கிற சிறு குடலோடு சேருமிடத்தில், "கிரஹணி" என்று ஒருவித கபாட வாயில் உண்டு. நாம் உட்கொண்ட பலவிதமான உணவுப் பொருளும் இரைப்பையால் நன்கு கடைந்து கூழாகப் பக்குவம் செய்யப்படுமளவும் அவ்வுணவைக் கீழ குடலுக்குள் விடாது அவ்வாயிலை மூடிக் கிரஹித்திருக்கும் சுபாவம் இதற்கு இருப்பதால் இதைக் கிரஹிணி (அக்நஸ்ய க்ரஹணாத் கிரஹணீ மதா) என்று ஆயுர்வேத சாஸ்திரஞர் கூறுவர். உணவு போதியவளவு கூழாகப் பக்குவமான பிறகு இந்தக் கிரஹணியின் வாய் திறக்க, அக்கூழும் கீழே சிறு குடலுக்குள் பாய்கிறது. கிரஹணி யென்கிற கபாடபாகம் ஆஹாராதிகளின் கெடுதிகளால் கோளாறடைந்து விட்டால், இரைப்பையில் போதியவளவு உணவு பக்குவமாகாமல் அப்படியே சிறு குடலுக்குள் விழ, அதனால் ஒருவித அஜீர்ண பேதி ஏற்படுவதுண்டு; கிரஹணியின் கோளாறால் ஏற்படுவதால் அவ்வஜீர்ண பேதியையும் "கிரஹணி ரோகம்" என்று கூறுவது வழக்கம். தமிழில் இதைத்தான் கொச்சையாக "கிராணி" என்று வழங்குகிறார்கள். ஆஹாரத்தை அளவு மீறியும் அடிக்கடி காலந்தவறியும் வியவஸ்தை யில்லாமற் புஜிப்பவருக்கு இக் கிரஹணி யென்னும் குடலில் கோளாறு ஏற்பட்டு, கிரஹணி ரோகம் என்கிற அஜீர்ணபேதி அநேகமாய் ஸம்பவிப்பது வழக்கம். ஆமாசயத்தில் (இரைப்பையில்) நடைபெறும் ஜீர்ணவேலை வெகு மெதுவானது. இரைப்பையிற் சென்ற உணவு உருவத்தில் மாறுதலடைய ஒரு மணி நேரத்திற்கு மேலாகும்; ஆனால் இறைச்சி முதலியதைப் போன்ற உணவு இரண்டு அல்லது மூன்றுமணி நேரத்திற்கு முன் ஜீர்ணமாவதில்லை.

இரஸ தாதுவைப் பிரிக்கும் விதம்

இரைப்பையில் பக்குவமான பிறகு உணவை கிரஹணீ கபாடம் என்னும் ஆமாசயத்தின் கீழ்த்வாரம் தன் முகத்தைத் திறந்து ஸூக்ஷ்மாந்திரத்தினுள் விடுகிறது. அவ்விடத்தில் கிலோமா (பாங்கிரியஸ்) என்கிற நீண்ட கிரந்தியிலிருந்தும். யக்ருத் (கல்லீரல்) என்பதிலிருந்தும் வெவ்வேறு சிறு குழல்கள் வழியாய் வருகிற பித்த நீரும், ஸூக்ஷ்மாந்திரத்திரவமும் சேர்ந்து உணவுக் குழம்பை இரஸ தாதுவாகவும் மலமாகவும் பிரித்து, இரஸத்தை இரத்தத்துடன் சேர்க்கவும், மலத்தை மலாசய மூலமாய் வெளிப்படுத்தவும் வேண்டிய வேலைகளை உசிதப்படி செய்கின்றன. இந்து ஸ்தானத்தின் செழிப்புக்கு இன்றியமையாத மூன்று முக்கிய நதிகளின் ஸங்கமஸ்தானமான பிரயாகைபோல், கிரஹணிக்குக் கீழ்ப்பாகம் முன் கூறிய மூன்றுவித ஜீர்ணோபயோகமான-உடலின் போஷணைக்கு இன்றியமையாத-திரவப்பொருட்கள் ஸங்கமமாகும் இடமென்றும், த்ரிவேணீ ஸங்கமத்தில் தீர்த்த ஸ்நானம் செய்பவர் தோஷங்கள் நீங்கி சுத்தாத்மாக்களாய் முக்தியடைந்து பகவத் ஸாரூப்யம் பெறுவதாகக் கூறப்படுவது போல், இந்த மூன்று திரவாம்சங்கள் சேருமிடத்தில் வந்து விழும் உணவுகளிலிருந்து தோஷப்போன்ற மலபாகம் வேருக்கப்பட்டு, ஸத்வபாகம் இரஸ ரூபமாகப் பக்குவமாய் மோக்ஷ ஸாரூப்யம்போல் இரத்த ஸாரூப்யத்தைப் பெறுகிறதென்றும் கூறினேனானால், இவ்வேதாந்த தத்துவ ரூபமான திருஷ்டாந்தம் வாசக நேயர்களுக்கு விஷயத்தை விளங்கத் தெரிந்துகொள்ள அனுகூலமாயிருக்கும்.

குடல்

ஆமாசயம் என்கிற இரைப்பையில் ஆரம்பித்து, குதமென்கிற மலத்வாரபவரையிலுள்ள கோஷ்டம் என்கிற குடலானது பலவாறு சுருண்டு மடிந்து வயிறு என்கிற உதர குஹைக்குள் அடங்கி, ஆஹாரத்தின் ஜீர்ணத்திற்கும், ஆஹார ரஸத்தின் சோஷணத்திற்கும் ஏற்ற மிக நீண்ட குழாயால் அமைந்திருக்கிறது. இதை நீட்டிப் பிடித்தால் அவரவருடைய உடலின் உயரத்தைப்போல் சுமார் ஆறு மடங்கு அளவுள்ளதாயிருக்கும். ஆகவேதான் இது 'மஹாஸ்ரோதஸ்' என்று ஆயுர்வேத நூல்களில் வழங்கப்படுகிறது. "ஆமாசயாத் குதம் யாவத் கோஷ்டஸ் ஸ்தூலாந்த்ர ஸம்ஜ்ஞித: வ்யாயாம பஞ்சகமிதம் மஹா ஸ்ரோ தோங்நபாசகம்" என்று ஆஹாரம் இரஸரக்தமாகப் பக்குவமாவதற்காகச் சுமார் ஐந்து மார் நீளமுள்ளதாய் மஹாஸ்ரோதஸ் என்கிற குழாய் ஸூக்ஷ்மாந்திரம் (சிறு குடல்) ஸ்தூலாந்திரம் (பெருங் குடல்) என்கிற இரு பிரிவுள்ளதாய் அமைந்திருப்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த மஹாஸ்ரோதஸ்ஸின் உட்புறம் நெடுகவும் ஸமமாயில்லாமல் மேடு பள்ளமாகப் படிப்படியான மடிப்புகளடர்ந்ததாயிருக்கும்; அந்த மடிப்புகள் மேலிருந்து கீழ்நோக்கி உணவுப் பொருள் நெகிழுமாறு புழுவைப்போல் அசைந்துகொண்டிருக்கும். இந்த மடிப்புகளுக்குள உணவு தங்கித் தங்கி நெகிழும்போது, அதிலிருந்து பிரிந்த இரஸ தாதுவை மிகமிக நுண்ணிய இரஸவாத ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற இரஸாயனக் குழாய்கள் உறிஞ்சி, உரஸ் ஸ்ரோதஸ் என்கிற மற்றொரு பெரிய இரஸாயனியிலும், அதிலிருந்து ஜத்ரூர்த்வஸிரை என்கிற மார்பின் பக்கமாயுள்ள காரிரத்தக் குழாயிலும் சேர்ப்பிக்கின்றன. சிறுகுடலில் உணவு பக்குவமாகையில், கிலோமாவிலிருந்து வரும் ஒருவிதப் பித்தநீர் (பாங்கிரியாடிக் ஜ்யூஸ்) ஆஹாரக் குழம்பிலுள்ள தேஹ போஷணைக்கான ஸத்துக்களைப் பிரித்து அதை இரஸமாக மாற்றி இரஸாயனிகள் உறிஞ்ச உபயோகமாகும்படிச் செய்கிறது. அதே ஸமயத்தில் யக்ருத்திலிருந்து சுரந்துவரும் மற்றொரு வகைப் பித்தநீர் (பைல்) ஆஹாரத்திலுள்ள மலாம்சங்களைப் பிரித்து அதற்கு ஒரு வகை வழவழப்பையும் பசுமை அல்லது மஞ்சள் நிறத்தையும் உண்டுபண்ணி மெதுவாக மலாசயம் பக்கமாய் வெளிப்படுத்துகிறது. குடலிலிருக்கும்வரையில் மலம் சில நாழிகைகள் வரையில் உடலுக்கு உபாதையுண்டாக்காமலிருக்குமாறு அதைப் பக்குவ நிலைமையில் வைத்திருக்கும் குணம் இந்தப் பித்த நீராலேயே ஏற்படுகிறது. மலத்தை எளிதில் நெகிழச் செய்யும் ஸ்ரம்ஸநம் (மலசோதனை) என்னும் குணமும இப்பித்தத்தினால்தான் உண்டாகிறது. ஆகவே மலம் வெளியாகத் தடையேற்பட்டாலும், வெளியாகும் மலம் மஞ்சளாக இல்லாமல் வெண்மையாய் அல்லது கறுப்பாய் அல்லது களிமண்ணைப்போல் இருந்தாலும், அப்பொழுது யக்ருத் என்னும் கல்லீரல் கோளாறடைந்திருப்பதாய் நன்கு உணரலாம். அப்பொழுது பசி

கே. ஏ. ஸமாஜம் ஆஸ்பத்திரி.

ஷோரனூர் (P. O.) S. I RY

ஸ்தாபிதம்—1916.

சிறந்த ஆரோக்ய ஸ்தலம்.

பாரத நதிக்கரையில் வனப்பு மிகுந்த காக்ஷிகளுக்கு மத்தியில்

நம்பிக்கை வாய்ந்த ஆயுர்வேத ஸ்தாபனம்	எல்லாவித ஆயுர்வேத மருந்துகளையும் தயாரிப்பவர்கள்

இந்த சமாஜம் வைத்தியசாலை, கொச்சி சமஸ்தானத்தில் பட்ட செருதுருத்தியிலுள்ளது. ஆகையினால் எக்ஸைசு நியமத்துக்கு விரோதமான உப்பு புகையிலை வகையரா தீர்வையுள்ள சாமான்களை பிரிட்டிஷ் இலாகாவிலிருந்து வைத்திய சாலைக்குள் கொண்டுவருவது நியமத்துக்கு விரோதமாகும்.

கொச்சி கவர்ன்மெண்டாரின் சகாயமும் மேற்பார்வையுமுண்டு, பொதுஜன உதவியால் நடத்தப் படுவது. கோளத்திலுள்ள பிரபல வைத்தியர்கள் டைரக்டர்களின் போர்டிலிருக்கின்றனர்.

புகழ்பெற்ற பிரம்மஸ்ரீ வைத்ய ரத்ன இ டி. நாராயணன் மூஸ் அவர்கள், கோள அஷ்டவைத்யர், கொச்சி சமஸ்தான வைத்யா, பிரதம வைத்யர்.

இடவசதிகள் அளிக்கப்படும். தாரா, நாஸ்யம், சிரோவஸ்தி, பிழிஞல், நவாகழி, வஸ்தி முதலிய மலையாள ஆயுர்வேத முறையில், சிறமையான மேற்பார்வையில் வைத்யம் செய்யப்படும். தங்கும் செலவு வியாதயஸ்தர்களது.

மற்ற விவரங்களுக்கு, பதிலுக்கு ஸ்டாம்புடன் மானேஜருக்கு எழுதவும்.

யின்மையும், பித்த மயக்கமும், சிரோவேதனையும், வேறு பல பித்த ஸங்கடங்களும் தோன்றுவது இயல்பு. குடலுக்குள்ள செளிவு ரூபமான அசைவினுலும், பித்த நீருக்குள்ள ஸ்ரமஸக (மலசோதக) குணத்தினுலும் உணவிலிருந்து உடலுக்கு உபயோகமற்றதென்று பிரித்துவிடப்பட்ட கிட்ட ரூபமான மலம் கிரமக்கிரமமாகச் சிறு குடலிலிருந்து பெருங்குடலுக்குள் மலாசயம்வரையில் தள்ளிக்கொண்டே போகப்பட்டு, அங்கு சில நாழிகைகளாகவும் அந்த மலம் தங்கியிருக்கும். அப்பால் அவ்வவயவத்தினுடையவும், அபாந வாதத்தினுடையவும் இயற்கைச் சக்திகளால் குதத்வாரத்தினுல் அது வெளிப்படுத்தப்படுகிறது

இரஸ தாதுவாக மாறின உணவின் பாகம் ஸூக்ஷ்மாந்திரத்தினுள் அடங்கிய ஸூக்ஷ்மமான இரஸாயனிகளால் உறிஞ்சப்படுவதுதான் ஜீர்ண வேலையில் நடக்கும் பலவேறு முறைகளுள் கடைசி முறையாகும். இரஸாயனிகளினுலே ஆஹார ஸத்தான இரஸம் என்னும் தாது செல்லும்போது, குடல்களுக்கடியில் அமைந்துள்ள சில கோளங்களிலும் அதற்கு ஒருவிதப்பாசக மாறுதல் ஏற்படும்; இத்துடன் ப்லீஹம் என்கிற மண்ணீரலிலிருந்து ஒரு வகை இரஞ்ஜகதாது (ஆங்கிலத்தில்ஹெமக்ளோபின்) இரஸதாதுவில் சேர்ந்து, அதை ஒருவாறு இரத்தமாகப் பரிபக்குவம் செய்கிறதென்று ஆயுர்வேதக்ஞர்கூறுவர். இது இக்காலத்திய மேனாட்டுச் சாஸ்திரவல்லோராலும அங்கிகரிக்கப்பட்ட உண்மை.

உடலுக்கு உபயோகமாகாத
பாகம்

ஆஹார ஸம்பந்தமான ஆரோக்கியோபாயங்களில் கருத்து செலுத்துபவர் சிறுகுடல் பெருங்குடலுடன் சேருமிடத்தில் உள்ள 'வர்மி' அல்லது "கிருமிகம" என்கிற ஒரு சிறு பாகத்தைப்பற்றிய விசேஷத்தையும் கவனித்தல் அவசியம். இந்த வர்மி அல்லது கிருமிகத்தினுல் உபயோகம் விசேஷமாயில்லையென்றாலும், அதனுல் ஏற்படும் உபத்திரவம் உயிரையுறிஞ்சக்கூடிய நிலைமையையும் உண்டுபண்ணிவிடும். ஜீர்ணமாகக்கூடாத கிச்சிலிப்பழ விதைகள்போன்ற வஸ்துக்கள் சிறுகுடலினுல் பெருங்குடலுக்குள் மலரூபமான மற்ற வஸ்துவுடன் தள்ளப்படும்போது இக்கிருமிகத்தினுள் சிறு துவாரத்தில் தங்கிவிட்டால், மீண்டும் அது வெளிவர முடியாமற்போகுமாதலால், அவ்விடத்தில் (கிருமிகத்தில்) அந்தர்வித்ரதி என்கிற வீக்கத்துடன் கூடிய சிழ்க்கட்டியை அது உண்டுபண்ணும். ஜீர்ணக் கோளாறுலேயோ, மலச் சிக்கலின் சில நிலைமைகளாலேயோ குடலிலுண்டாகும் சில தோஷங்கள் தங்கி இடம் பெறுவதற்கு இக்கிருமிகத்தின் சிறு த்வாரம் ஏற்றதாயிருப்பதாலும், இவ்விடம் வீக்கங்கொண்டு விசேஷ பாதைகளை விளைவிக்க ஹேதுவாகிறது. உலகத்திற்கு எவ்வகையிலும் உபயோகமில்லாத ஒருவன் ஒரு மூலையில் இருந்தால், அவனது சுபாவம் எப்படியாகுமென்றால், வெறுமனே இருக்க முடியாமல், தானும் ஒருவன் உலகத்தில் உயிர்வாழ்வதாக வெளிப்படுத்த வெம்பான வழியில் முயன்று உபத்திரவங்களைக் கிளப்பிவிடுவதுமுண்டு. அதுபோலவே உடலுக்கு எவ்விதத்திலும் உபயோகப்படாது குடலின் ஒரு மூலையில் தொங்கும் வர்மி என்னும் இச்சிறு அவயவமும் நமது கவனக்குறைவால் அல்லது அறியாமையால் ஏற்படும் உணவின் வைஷம்யத்தை வியாஜமாகப் பெற்று அநேக ஸங்கடங்களையுண்டுபண்ணி, தானும் ஓர் அவயவம் வயிற்றில் அடங்கியிருப்பதாக அறிவிப்பதாயிருக்கிறது. ஆகவே, தான் இவ்வுபயோகமற்ற ஒரு சிறு அவயவத்தைப் பற்றி அநேக நூல்களும், சாஸ்திர சிகித்ஸகர்களும பிரத்தியேகமாக ஏற்பட்டுப் பிரா பல்யம் அடைய நேர்ந்தது.

முடிவாகச் சுருங்கக் கூறினுல், உண்ணும் உணவை மெதுவாகப் போதுமாறு மென்று விழுங்குவதால்,வாயில் நிறைவேறும் ஜீர்ண வேலை நன்கு நடைபெறுமென்றும், காலந்தவறாமலும் மிதமாகவும் சுசியாகவும் புசிப்பதால், இரைப் பையில் நடைபெறும் பக்குவ வேலை இனிது நிறைவேறுமென்றும், காய் கறி கிரைகளைத் தாராளமாகப் புசித்தால் பித்தாசயம் முதலியவற்றின் வேலை ஒழுங்காக நடைபெற ஸெளகர்யமுண்டென்றும், ஜீர்ணமாகக்கூடாத வித்து முதலியதை விழுங்காமலும், மலச்சிக்கல் முதலியதற்கு இடங்கொடாமலும், உணவுகளை யுண்பதில் ஒழுங்கு தவறாமலும் இருந்து வந்தால், கிருமிகத்தால் உண்டாகும் அந்தர் வித்ரதி (சிழ்க்கட்டி) முதலிய உபத்திரவங்களிலிருந்து தப்பிப் பிழைக்கலாமென்றும் இக்கட்டுரை விளக்குவதாய் வாசகநேயர் தெரிந்து கொள்வர். ஆகவே, இவ்வியாஸம் உணவு ஜீர்ணமாகும் வகையை விளக்குவதற்கு மாத்திரமல்ல ஆரோக்கிய ஸாதகமாயிருக்குமாறு ஆஹாரமுண்ணும் முறைகளையும் சுருங்க மொழிந்திட உபயோகமாயிருக்கும் வகையில் இயற்றப்பட்டிருப்பதால், நோயற்ற வாழ்விலே நோக்கத்துடன் வாசகநேயர்கள் இதைப் படிப்பது நலம்.

வெற்றி கிட்டியது

என மிஸ்டா..........22-6-36உ பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"தங்கள் "திபேத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால கீழ்க கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன். ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவா அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர் விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித் கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம் விலை ரூ. 3-8-0 6 பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிடடுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் யாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினுல் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P. O SALKIA HOWRAH

நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்.

BALA KALA STORES,
P. O. Kansi Simri (Darbhanga.)

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம்,சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

"மறக்க மாட்டீரே! வரும்போழுது "ஜே" மார்க் பெருங்காயம் வாங்கி வாருங்கள்"

கோபால்ஜீ அண்ட் கோ.,
பம்பாய், மதராஸ், மதுரை உகும்பகோணம்

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை. நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுதுக.

நீளம்	அகலம்	உயரம்	சாதா	உயர்த்தது	மோனது
அடி	அடி	அடி	ரூ.	ரூ.	ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூனறு வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

30வருஷ பிரசித்தி பெற்றது

வாயுமுக்தா

வலி. பைத்தியம் இவற்றிற்குச் சிறந்த நிவாரணி

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள்-பலவீனர்களும். கர்ப்பிணிகளும்—பிதற்றல், அழுகுரல் கிளப்பல், அடித்துக் கொள்ளுதல், நரம்பு பலவீனம். பித்தமயக்கம். வலி, இவற்றால் கஷ்டப்படுகிறார்கள். இவ்வளவையும் இம் மருந்து 24 மணி நேரத்தில் நிறுத்திவிடுகிறது. பிரக்ஞையின்மை, இழுப்பு. 10 நிமிஷத்தில் மறைகின்றன.

10 நாள் மருந்து ரூ. 2.
30 நாளுக்கு ,, ரூ. 5.

தபால் செலவு தனி. ஆங்கிலத்திலேயே கடிதமெழுதுக.

C. L. NAMAWALLA
Palace Road, Baroda

தென்னிந்தியப் பிரமுகர்கள்

(4-ம் பக்க தொடர்ச்சி)

மூலிகைகளின் தன்மையை சரிவர நாம் அறியாமலிருக்கிறோம். ஆயுர்வேத முறையானது பிணியைப் போக்கி, அது திரும்பிவராமல் தடுக்கின்றது என நாம் சொல்லலாம். மலையாளப் பிரதேசத்தில் மட்டுமே இந்த ஆயுர்வேத சாஸ்திரமானது ஒருவாறு வளர்க்கப்பட்டு வந்தது. வெகுகாலம் வரையில் நம்மவர், மேனாட்டு நாகரீகத்தை யனுசரித்து, நாட்டு வைத்தியம் செய்துகொள்வதினால் இழிவடைந்து விடுவதாக எண்ணி வந்ததுண்டு. இப்போது சில வருஷங்களாகத்தான் சில பெரியார்களது முயற்சியின் பலனாக இவ்விதமான மனப்பானமை நம்மை விட்டுப் பிரிய வாரம்பித்திருக்கிறது.

சர்க்காராதரவும் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடமும்

ஆயுர் வேதத்திற்கு இப்போது ஒரு புத்துயிர் ஏற்பட்டிருக்கின்றது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் மயிலாப்பூரில் "வேங்கடரமண ஆயுர்வேத வைத்திய சாலை"யை தர்ம சிந்தனையுடன் ஆரம்பித்தார். இதன் மூலம் மேனாட்டு வைத்தியத்திற்குச் செலவழிக்கவியலாத அநேக ஏழைகள் இவ்வைத்திய சாலையில் இலவசமாக சிகிச்சைகள் செய்துகொள்வதை அப்பெரியார் சாத்தியமாக்கினார். இதே காலத்தில் இம் மாகாணம் முழுமையும் ஆயுர்வேதத்திற்கு பெருமை ஏற்படலாயிற்று. ஆனால் சில வருஷங்கள் பரியந்தம் சென்னை கவர்ன்மெண்டார் ஆயுர்வேதத்தற்கு தக்க ஆதரவு அளிக்க முன்வரவில்லை. இந்த ஆயுர்வேத முறை விஷயத்தில் பல பிரமுகர்கள் ஆர்வம் கொண்டபின்னர்தான் அரசாங்க ஆதரவும் கிட்டலாயிற்று. சில வருஷங்களுக்கு முன்பு சென்னை கவர்ன்மெண்டார், ஸர் மஹம்மது உஸ்மான் தலைமையில் எ. எஸ் கிருஷ்ணராவ், திவான் பஹதூர் டி. ஆர். ராமச்சந்திரய்யர் ஆகியவர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை, ஆயுர்வேதம், யுனானி போன்ற இத்தேசத்திய வைத்திய முறைகளின் ஸ்திதி, போக்கு இவைகளைப்பற்றி ஆராய்ந்து அரசாங்கத்தார் இவைகளுக்கு எவ்வாறு ஆதரவளிக்க வேண்டுமென்பதைப்பற்றியும் தெரிவிப்பதற்காக ஏற்படுத்தினார்கள். இக்கமிட்டியார் இவற்றை ஆதரித்து எழுதினர். பின்பு காலஞ்சென்ற பனகால் ராஜா இந்நகரில் "இந்திய வைத்திய பள்ளிக்கூட"த்தை தாம் பிரதம மந்திரியாகவிருந்தபோது ஏற்படுத்தினர். இது கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு இன்னும் அநேக மாணவர்கள் சிறப்பிற்குரிய நம் பழைய முறைகளைக் கற்று வருகின்றனர். வைத்தியப் பரிக்ஷைகளில் தேறும் மாணவர்கள் தொழில் நடத்த அனுமதிக்கப்படுகின்றனர். இதனுடன் இந்தியா கவர்ன்மெண்டார் அறிஞர்களுக்கு "மஹாமஹோபாத்யாயர்" பட்டம் அளிப்பதுபோல், இத்தேசத்திய வைத்திய சாஸ்திர நிபுணர்களுக்கு "வைத்ய ரத்னம்" என்ற பட்டங்களையும் அளிக்க முன் வந்துள்ளார்கள். இது நிற்க ஆயுர்வேத சாஸ்திரம் மேற்குறிப்பிக்கப்பட்டபடி சென்னை மாகாணத்தில் பரவி பிரசித்தமாகப் பிரகாசிப்பதற்கு மிகவும் உழைத்த உத்தம புருஷர் வைத்திய ரத்ன பண்டித டி. கோபாலாசார்லு ஆவார். இப்பெரியார், ஆயுர்வேத சாஸ்திரத்தின் முன்னேற்றத்திற்காக தமது ஜீவிய காலம் முழுதும் ஏகமனதாக சிரமப்பட்டு வந்தார். இவரது புகழ் பலவிடமும் விஸ்தரித்துள்ளது.

தன்வந்திரி தோன்றிய மாதத்தில் பிறப்பு

வைத்ய ரத்ன ஆயுர்வேத மார்த்தாண்ட பிஷங்மணி பண்டித தேவி கோபாலாசார்லு 1872-ம் வருஷம் அக்டோபர் மாதம் மசூலிப்பட்டணத்தில் பிறந்தார். இவரது பிதாவின் பெயர் ராமகிருஷ்ணமாச்சார்லு என்பதாகும். இவர்கள் வைகானஸர்கள். இவரது பிதாவும் பாட்டனாரும் மிகப் பிரசித்திபெற்ற வைத்திய சாஸ்திரிகள். இவர்கள்போல் இவரது மாதா மஹரும வைத்திய சாஸ்திரத்தில் நிபுணராகவிருந்தவர். ஆகவே, இவரது பிறவிச் சந்தர்ப்பங்கள் வைத்தியத் துறையில் இவர் பிரகாசிப்பதற்குச் சாதகங்களாகவிருந்து வந்தன. இவை தவிர இவர் பிறந்த மாதமும் வைத்திய சாஸ்திரிகளால் பஹுமானிக்கத் தக்கதாகவிருந்தது. ஏனெனில் இதே மாதத்தில்தான வைத்திய சாஸ்திரத்திற்கு அதிதேவதையான தன்வந்தரியும் தோன்றியதாக

—நீலகிரி—

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை ரூபா 5—2—0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)
1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் ,, 14—4—0
1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு ,, 12–11—0

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்,
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்
T. ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD.

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!
புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து
ஆனந்தமடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகங்கள்)	ரூ. 2—8—0
2.	வசனங்கள் (6-பாகங்கள்)	,, 2—0—0
3.	கதைக்கொத்து	,, 0—8—0
4.	பகவத் கீதை	,, 0—8—0
5.	கட்டுரைகள் பகுதி 1 தத்துவம்	,, 0--10—0
	,, ,, 2 மாதர்	,, 0—8—0
	,, ,, 3 கலைகள்	,, 0—8—0
	,, ,, 4 சமூகம்	,, 0--12—0
6.	Bharathi and his works by Mr. C. Visvanathan, Brother of Bharathi	0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்

நமது சம்பிரதாயம். இவர் இந்த மாதத்தில் பிறந்தவுடனேயே ஊரிலுள்ள விருத்தஸ்திரிகள் முதலானோர் இவர் பிற்காலத்தில் வைத்திய சாஸ்திரத்தின் மூலம் மிகுந்த கியாதயை சம்பாதித்துக்கொள்ளப் போவதாகத் தெரிவித்தனர். எது எவ்வாறிருந்தபோதிலும் இவர் தமது இளமைக் காலத்திலிருந்தே தமது பிதாவின் வழியைப் பின்பற்ற வாரம்பித்தார். இதன்மூலம் வைத்திய சாஸ்திரத் துறையில் இவருக்கிருந்துவந்த ஆத்மீகப் பிரியம் அதி ஸ்பஷ்டமாகியது.

ஆகையினால் இவர் மைசூர் மஹாராஜா கலாசாலைக்கு ஆயுர்வேத சாஸ்திரத்தை முழுவதும் படிப்பதற்காக அனுப்பப்பட்டார். அங்கு சிலகாலம் தங்கியிருந்து இவர் தமது பகுதிகளை நன்கு கற்றுக்கொண்டார். இவர் பின்பு மைசூர் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியிலும் சிறிது காலம் வேலை செய்து, சிகிச்சா முறைகளைப் பழக்கிக் கொண்டார். இதன் காரணமாக இவருக்கு கவர்ன்மெண்ட் "டிப்ளோமா" ஒன்றும் வழங்கப்பட்டது. இந்த யோக்யதா பத்திரம் இவர். அத்தொழிலை அனுசரிப்பதை அனுமதித்ததாகும்.

ஆயுர்வேத சாஸ்த்ரத்தைக் கற்பதில் ஆர்வம்: வட இந்திய சுற்றுப் பிரயாணம்

இவர் இதனுடன் திருப்தி அடைந்து விடவில்லை. மேலும் மேலும சாஸ்திரத்தைப் படித்து ஆராய்ந்து, மக்களுக்கு உபயோககரமாக அதைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அவாவே இவருக்கு அதிகரித்து வந்தது ஆதலால் இவர் மைசூரில் தமது காரியம முடிவாகிய பின்னர் அகில இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கினர். ஆயுர்வேதத்திற்குப் பிரசித்தமான பிரதேசங்களுக்கெல்லாம் இவர் சென்று திரும்பினர். கல்கத்தா, காசி, பம்பாய், காஷ்மீரம், ஹரித்வாரம், ஜயப்பூர், நாஸிக், லாகூர் முதலிய நகரங்களுக்கெல்லாம் இவர் சென்று வந்தார். சென்ற விடங்களில் எல்லாம் பிரபல ஆயுர்வேத வைத்தியர்களைக் கண்டு அவர்களுடன் சம்பாஷிப்பது, ஆஸ்பத்திரிகளுக்குப் போய் அங்கு தாமும் கூட விருந்து சிகிச்சா முறையில் பழகுவது, அனுபவத்தால் விஷயங்களை எளிதில் தெரிந்துகொள்வது ஆகியவை மூலம் இவரது ஞானம் விஸ்தரித்தது; இவைகளினால் இவருக்கு வைத்திய சாஸ்திர சிகிச்சைகளில் தேர்ச்சியும் அதிகமாகக் கிடைத்தது. இவ்வாறு தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்ட பின்னர் இவர் மீண்டும் பெங்களூர் வந்து சேர்ந்தார்.

ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தான வைத்திய சாலையின் பிரதம வைத்தியர்

சிறிது காலத்திற்கெல்லாம் இவர் சென்னைக்கு. ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தான வைத்தியசாலையின் பிரதம வைத்திய நிபுணராக வந்து சேர்ந்தார். இந்த வைத்யசாலை அப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அங்கமாக சிறிதுகாலத்திற்குப் பின் ஆயுர்வேத கலாசாலையை நிறுவுவதில் இவர் விசேஷ சிரத்தையும் ஊக்கமும் எடுத்துக்கொண்டார். தமது முயற்சிகள் காரணமாக ஸ்தாபிக்கப்பட்ட இக் கலாசாலையின் தலைவராகவும் இவர் அந்திய கால பரியந்தம் இருந்து வந்தார். இவர் கீழ் வைத்தியசாலை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இப்பதவியை இவர் அங்கிகரித்துக்கொண்ட சொற்ப காலத்திற்குள்ளாகவே இவரது பெயர் பிரஸித்தமாகப் பரவலாயிற்று.

கலாசாலை அதிபராக இவரது திறமை எங்கும் கோஷிக்கப்பட்டது. இக்கலாசாலைக்கு இத்தேசத்தின் பல பக்கங்களிலிருந்தும், இலங்கைத் தீவிலிருந்தும் மாணுக்கர்கள் குவிய வாரம்பித்தனர். இவர் கீழ் படித்த மாணவர்கள் எல்லோரும் இவரை சதா புகழ்ந்து வந்தனர். இவரது சக்தியையும் சாமர்த்தியத்தையும், எச்சமயத்திலும் தைரியத்தை இழக்காமலிருக்கும் தன்மையையும், எல்லோரும் கண்டு வியந்தனர். இவரது போதனு சக்தியில் மாணவர்களுக்கு மிகுந்த பிரியம் ஏற்பட்டது. ஆரம்பம் முதல் அந்தியம்வரையில் ஆயுர்வேத சாஸ்திரத்தில் இவருக்கிருந்த ஆர்வம்குறைந்ததில்லை. இந்த ஆயுர்வேத சாஸ்திரத்தை வளர்ப்பதில் இவர் எந்த இடையூறுகளைக் கண்டும பின் வாங்கியதில்லை; அதற்காக இவர் எதையும் செய்யத் துணிந்திருந்தார். சில வருஷங்களுக்குப் பின்பு இக்கலாசாலையை நடத்தி வந்த தர்ம நிர்வாகிகள் சில காரணங்கள் பற்றி கலாசாலையை மூடி விடத் தீர்மானித்தனர் இந்த தருணத்தில் இவர் ஆயுர்வேத கலாசாலையை மூடிவிடுவதால் ஏற்படும் விபரீதத்தை உணர்ந்து, கலாசாலையைத் தாமே நடத்த முன்வந்தார். இச் செய்கை மிகவும் தைர்யமானதன்றே! இதற்காக இவர் சென்னை ஆயுர்வேத பிரசாரணி சபையை நிறுவினர். இச் சபை மூலம் கலாசாலையையும், இலவச ஆஸ்பத்திரியையும் சம்ரக்ஷிக்க இவர் சில ஏற்பாடுகளைச் செய்துவைத்தார். இவரது இக்காரியம் ஒன்றே ஆயுர்வேதத்தில் இவருக்கிருந்த அளவிலாத நம்பிக்கையையும், ஆர்வம் ததும்பும் அபிமானத்தையும், தன்னலம் கருதாத ஸ்வபாவத்தையும், மக்களின்

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார்ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார்ஸோப்பு சிறந்த சுத்திகரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணு. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

குழந்தைகளின் வயிற்று ஜுரக் கட்டிகளை

சந்தேகமின்றி சமனப்படுத்துவது

பால சஞ்சீவினி

இதுவேதான்

உண்மையான அசல் விஜயநகரம் மருந்து

விஜயநகர சமஸ்தான வைத்திய பரம்பரை பிள்ளா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு பிரதர், விஜயநகரம்.

மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடீஸ் ரோட், மைலாப்பூர்.

(ராமகிருஷ்ண மடம் எதிர்.)

க்ஷேமாபிவிருத்தியில் இருக்கும் பிரியத்தையும் பிரகாசப் படுத்துகிறது.

வைத்திய ரத்னம், பிஷங்மணி ஆயுர்வேத மார்த்தாண்டம் ஆகிய பட்டங்கள்

இந்தியா கவர்ன்மெண்டார் 1913-ல் இவருக்கு மிகச் சிறந்த 'வைத்யரத்னம்' எனும் பட்டத்தை அளித்தனர். நம் வைத்ய ரத்னம் அநேகம் பழைய சிறந்த சிகிச்சா முறைகளை மீண்டும் உயிர்ப்பித்துப் பிரயோகத்திற்குக் கொண்டு வந்தார். இத்துறையில் இவர் சாதித்துள்ள காரியத்தைப் பற்றி டாக்டர்கள் தான் ஏற்றபடி பஹுமானிக்க இயலும். பிளேக், காலரா, இன்ப்ளுயன்ஸா முதலிய பிடைகளுக்கு இவர் தயாரித்த நிவாரண மருந்துகள் மிகப் பிரசித்தமானவை. இவரது பிளேக் நிவாரண மருந்து கத்வால் சமஸ்தானதிபதியிடமிருந்து ஒரு தங்கப் பதக்கத்தை இவருக்குப் பஹுமானமாகக் கொண்டு வந்தது. 1904-ல் இவர் தயாரித்த "ஹமாடி விரப்பு" என்ற பானகம் பற்றி இவருக்கு மற்றுமொரு தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. 1905-ல் காசியிலும், 1906-ல் கல்கத்தாவிலும் இவர் தங்கப்பதக்கங்களையும், நற்சாக்ஷிப் பத்திரங்களையும் பரிசாகப் பெற்றுக் கொண்டு கௌரவ மடைந்தார். 1907-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் இவருக்கு கல்கத்தாவில் "பிஷங்மணி" என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அவ்வருஷம் மே மாதம் நாஸிக்கில் இவருக்கு "ஆயுர்வேத மார்த்தாண்டம்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

அகில இந்திய ஆயுர்வேத பரிக்ஷாதிகாரிகள் சங்கத்தில் ஒருவராக இவர் நியமிக்கப்பட்டார்; இச் சங்கத்தின் சார்பாக இவர் பிரபல ஸ்தானம் வஹித்தார். மைசூர் சமஸ்தான ஆயுர்வேத வித்வத் பரிக்ஷாதிகாரியாகவும் இவர் இருந்தார். அநேகம் ஆயுர் வேத கலாசாலைகளிலும், பரீக்ஷைகளிலும் இவர் பிரதான பரீக்ஷகராக விருந்து வந்தார். அநேகம் கைத் தொழில் விவசாய மஹா நாடுகளில் இவர் பெருமையுடன் கலந்து கொண்டார்; பதக்கங்களும் இவர் சன்மானமாகப் பெற்றார். கல்கத்தாவில் நடந்த அகில இந்திய ஆயுர்வேத பொருட்காட்சியிலும் இவர் சிறப்புற்றார்.

மலையாளத்தில் கூடிய ஆயுர்வேத காங்கிரஸிலும், பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய ஆயுர்வேத மஹாநாட்டிலும் இவர் தலைமை வகித்து, ஆயுர்வேதப் பிரசாரத்திற்கு அரிய தொண்டாற்றினர். இவரது சிரத்தைமூலம் தான் ஜனங்களுக்கு ஆயுர்வேத முறையில் நம்பிக்கையும் திடமும் ஏற்பட்டன.

ஆயுர்வேத சாஸ்திர உத்தாரணத்திற்கு அரிய சேவை

தெலுங்கிலும் சம்ஸ்கிருதத்திலும் இவருக்கு நல்ல ஞானம் உண்டு. இவர் அநேகம் அரிய வைத்திய சாஸ்திர நூற்களை தமது தாய் பாஷையான தெலுங்கில், வியாக்யானங்களுடன் மொழி பெயர்த்தார். "மாதவா," "விதானு," "அர்க ப்ரகாஸம்" "ரஸப்ரதீபிகை" "பத்யபத்யம்", "ஆயுர்வேத பரிபாஷை" "பேஷஜகல்பம்" ஆகிய அரிய கிரந்தங்களை இவர் வெளியிட்டார். இதற்கு முன்பு இவைகள் எங்கிருந்தன என்பதுகூட ஒருவருக்கும் தெரியாதாம். சுஸ்ருதன், சாரகன் ஆகியவர்கள் எழுதிவைத்த கிரந்தங்களுக்கும் உயர்ந்த வியாக்யானங்களை இவர் எழுதினார்; இவை இவர் உயிருடன் இருக்கும்வரையில் அச்சிட்டு வெளியிடப்படவில்லை. விலையில்லாத இவ்வுயர்ந்த புத்தகங்களை வெளியிட்டிருப்பதே இவருடைய பெருமைக்குப் போதுமானது; இதுவே ஆயுர்வேத சாஸ்திர உத்தாரணத்திற்கு மிகவும் உகந்த சேவையுமாகும். இவருக்குப் பின்பு இவரது உதாரணத்தைப் பலரும் பின்பற்றியுள்ளார்கள். இவரது சாஸ்திரீய ஞானமும், விஸ்தாரமான படிப்பும் ஆச்சர்யகரமானவை.

இவரிடம் படித்த சிஷ்யர்கள் பலர். அவர்களுள் இப்போது நம்மிடையே சுகஜீவியாக விருக்கும் வைத்திய ரத்ன ஆயுர்வேத பூஷணம் எம் துரைஸ்வாமி அய்யங்காரைக் குறிப்பிடலாம். இவரும் தமது குருவின் வழியை அனுகூலத்துடன் அனுசரித்து வருபவர். வைத்திய ரத்ன கோபாலாசார்லுவின் புத்தகங்கள் இத் தேசம் முழுவதும் வியாபித்து, இவருக்குத் தனிப் பெருமையைக் கொண்டுவந்தன. ஆயுர்வேத சாஸ்திரத்தில் ஒரு பிரதான அதிகாரி என்ற புகழ் இவருக்குக் கிட்டியது.

இவ்வாறு மிகச் சிறப்புற்ற வைத்ய ரத்னம் கோபாலாசார்லு 1920-ம் வருஷம் அக்டோபர்மாதம் 29-ந் தேதியன்று தமது 48-வது பிராயத்தில் காலமானார். இவரது மரணத்தினால் நம் பாரததேசம் பிரமுகரை இழந்தது. அடியோடு மறந்துவிடப் பட்ட ஒரு சாஸ்திரப் பகுதியை உயிர்ப்பித்து அதை எங்கும் பரவச் செய்வது யாவருக்கும் சாத்யமல்ல! மேனாட்டு நாகரீகம் ஓங்கி நிற்கும் இக்காலில் பண்டைய கால முறைகளை முன்னுக்குக் கொண்டுவந்து அவற்றில் நம்பிக்கையை உண்டாக்குவது எல்லோராலும் இயலாத சேவையாகும்.

இவை எல்லாவற்றையும் நிறைவேற்றி வைப்பதற்கு அதிமானுஷ்ய சக்தியும், அசாதாரண உழைப்பும் அவசியமாகும். இத்தகைய உத்கிருஷ்டமான சேவையைச் செய்து வைத்த நம் பண்டித ரத்னத்தின் பெருமை அளவிடற்கரியது. பண்டித கோபாலாசார்லு அநேகம் புதிய மார்க்கங்களை நிர்ணயித்தார். அவர் இன்னும் சிறிது காலம் ஜீவித்திருந்தால் இன்னும் அதிக மேன்மைக்கு எட்டியிருக்கக்கூடும்.



நஞ்சன்கூடு சத்வைத்யசாலை
ச்யாவனப்ராச
சுவாச டானிக்
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ்

(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

கெற்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூர்ச்சை, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-விதமலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடு வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2· 3-புட்டி ரூ. 5. செலவு வேற

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை.

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை

தலைமை ஆபீஸ், பழனி

கிருஷ்ண தேவராயர் - விஜய நகர மன்னன்

ஓர் சரித்திர சம்பந்தமான நாடகம்

(காபிரைட்)

(சிங்காநல்லூர் ரா. சாரங்கன்)

காட்சி 10

களிங்கரின் பாளையம். நள்ளிரவு வீரர் பேசிக்கொண்டிருத்தல்

மு. வீ:—யுத்தத்தின் இறுதி எவ்வாறு முடியுமோ?

இ. வீ:—ஜய அஜயமில்லாது இன்றைய போர் முடிவடைந்தது. விஜய நகரத்தான் அசகாய சூரன். அவன் அசைக்கவல்லானைப்போல் தோன்றுகிறதே!

மு. வீ:—மகா பத்திரர்கள் வந்துவிட்டால் இவ்விஜயநகரத்தான் தன் வீரர்களுடன் இடம் தெரியாது ஓடிமறைவான். நமதரசரும் மகா பத்திரர்களைக் குறிப்பிட்டுள்ள ஓர் இடத்தில் சந்திக்க லிகிதம் அனுப்பித்துள்ளார் அவர்கள் வந்துவிட்டால் இவன் பாடு தொல்லையாக முடியும். என்ன நான் சொல்வதை நீ காதில் வாங்காது எங்கோ கவனித்துக்கொண்டிருக்கிறீர்களே!

மு. வீ:—அதோ பார், சிலர் பெரிய பெட்டி ஒன்றைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்.

இ. வீ:—இவ்விரவில் அவர்கள் யாவராக இருக்கக் கூடும்.

மு. வீ:—அவர்களும் நம் கிட்டே நெருங்குகிறார்கள். அவர்கள் உடுத்தியிருப்பதைப் பார்த்தால் விஜய நகரத்தார் போல் தோன்றுகிறது

இ. வீ:—ஒருவேளை எதிரி சைன்னியத்தைச் சேர்ந்த வேவுகாரர்களாக இருக்கலாம். சீக்கிரம் உள்சென்று நம் படையினர் சிலரை உஷார் படுத்தி அழைத்துவாரும் (சீக்கிரம் ஒருவன் செல்கிறான் மற்றிருவரும் தங்கள் கைத்துப்பாக்கிகளை நீட்டிச் சுடுவதற்குத் தயாராக நிற்கின்றனர். விஜயநகரவீரர்களும் வருகின்றனர்.)

வீரர்:—நீங்கள் யார்? நில்லுங்கள். உயிரைத் திரணமாக மதித்து இக்காவலைத் தாண்டுங்கள்.

வீரர் அஞ்சி நிற்பதுபோல் பாவனை செய்து பெட்டியை ஓர் புறம் வைத்துவிட்டு சமருக்குத் தயாராகின்றனர். களிங்க வீரர் கும்பலைத் தோன்றி விஜயநகரத்தாரை சிறைபிடிக்கின்றனர். தேவரின் ஆட்கள் சண்டை செய்வதுபோல் பாவனை செய்து தோல்வியுற்று அடிவணங்குகின்றனர்.'

வி-வீ:—காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள், உண்மையைக்கூறி விடுகிறோம்.

அதற்குள்ளாக சில களிங்கர் பெட்டிகளை உடைத்துப் பார்க்கின்றனர்.

க-வீ:—ஆ......ஆபரணங்கள் நாணயங்கள்.

அதோ ஒரு கடிதம் மகா பத்திர தலைவர்களுக்கு பிரதாபருத்திரன் மெய்க்காப்பாளருடன் தோன்றல்.

பி-ரு:—சேனை வீரர்களே! என்ன கலவரம்.

த-கா:—அரசே! ஏதோ சதி; மகாபத்திரத் தலைவர்களுக்கு எதிரி அரசரிடமிருந்து பணமும் கடிதமும்.

பி-ரு:—(ஆச்சரியமடைந்து) நிச்சயமாகவா? எங்கே கடிதத்தைக் கொடுங்கள். ஆத்திரத்துடன் அதைப் பிடுங்கி, பிரித்து படிக்கிறான்.

மகாபத்திர வீரர்களுக்கு!

தாங்கள் என் தலைவர் கிருஷ்ண தேவராயருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இதோ பணப் பெட்டியும் அனுப்பித்துள்ளோம். மற்ற பதினைந்து தலைவர்களுக்கும் தனித்தனியாக கடிதங்கள் வரைந்துள்ளோம். நீங்கள் வாக்கு பிசகமாட்டீர்கள் என்பது நாங்கள் அறிந்ததே. ஆதலின் இக்கடிதம் கண்டவுடன் பிரதாப ருத்திரனை தனித்துவிட்டு உங்கள் தேசம் அடைவீர்களென்று நம்புகிறோம். ராயரிடம் உங்களன்பு மிகப் பாராட்டப்படுகிறது.

இப்படிக்கு
விஜயநகர பிரதம மந்திரி
சாலுவ திம்மன்.

இராஜத்துரோகம், இராஜத்துரோகம் (விரைக்க விரைக்க ஓர் வீரன் ஓடிவருகிறான்.)

வீரன்:—அரசே! தப்பித்துக்கொள்ளும், தப்பித்துக்கொள்ளும். எதிரி சைனியம் பின்புறம் தாக்குகின்றன. மகா பத்திர வீரர்கள் மோசம் செய்துவிட்டதை அறிந்த நம் சேனை வீரர்கள் கதி கலங்கி சின்னாபின்னமாக சிதறுண்டு ஓடுகின்றனர். சைனியத்தை சீர் செய்ய முடியாது தத்தளிக்கிறார் நம் சேனாபதி சீக்கிரம்.

பி. க:—அப்படியா! மெய்க்காப்பாளர்களே! வீரர்களே! இத்தடவை தோல்வியுற்றோம். விஜயநகரத்தான் மிஞ்சிவிட்டான். புரவிகளை சவாரி செய்யுங்கள்.

(பெரிய கலவரம். வீரர்கள் அங்குமிங்கும் ஓடி மறைகின்றனர். சாலுவதிம்மர் சமயத்தில் தோன்றி தப்பி ஓடும் கஜபதியைக் கைதுசெய்கின்றனர்.)

சா. தி:—கிருஷ்ண தேவராயர் ஆணை! உம்மைக் கைது செய்கிறோம்.

பி. க:—சமாதானத்திற்கு வழியில்லையா?

சா. தி:—முதல் நிபந்தனை, மகாபத்திர வீரர்களை எங்கு சந்திக்குமாறு இடம்குறிப்பிட்டுள்ளீர். தெரிவியும்.

பி. க:—ஆனால் மகாபத்திரர் துரோகம் நினைக்கவில்லையா, சூழ்ச்சி-சூழ்ச்சி. நான் வஞ்சிக்கப்பட்டேன்.

கிருஷ்ணதேவர் வீருடன் தோன்றல்.

வி. வீ:—களிங்காதிபதி கிருஷ்ண தேவருக்கு ஜே!

கி. தே:—பிரதாப ருத்திர கஜபதி அரசனே வந்தனம்.

பி. க:—வந்தனம்

கி. தே:—நம் சிநேகிதம் என்றும் நீடூழிவாழ வேண்டும். கையைக் கொடும்.

இருவரும் கட்டித் தழுவுகின்றனர்.

நம விரோதத்தை மறப்போம். களிங்கத்தை நீரே எமக்குப் பிரதிநிதியாக யிருந்து அரசாள்வீர்.

பி. ரு:—மிகவும் சந்தோஷம். இப்பொழுதே தலை நகருக்குப் புறப்படுவோம்.

கி. தே:—சாலுவதிம்மரே! மகாபத்திர வீரர்களைப் பற்றி என்ன யோசனை செய்தீர்?

சா. தி:—தங்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டதாகவும், ஆதலின் மகாபத்திரர்கள் உதவி வேண்டுவதில்லை என்றும் தங்கள் பட்டாபிஷேகத்திற்குத் தலை நகருக்கு வர வேண்டுமென்றும் கஜபதி அரசரே அவர்களுக்குக் கடிதம் அனுப்பட்டும்.

பி. க:—அப்படியே செய்துவிடுவோம்.

காட்சி 11

களிங்கம் தர்பார்

மகாராஜாதி இராஜன், இராஜமார்த்தாண்ட கிருஷ்ண தேவராயர், களிங்க தேசத்

சென்னை கவர்னர் தம்பதிகள் சமீபத்தில் எட்டியாபுரத்திற்கு விஜயம் செய்தபோது அவர்களுக்காக எட்டியாபுரம் ஜமீன்தார் ஒரு தோட்டக் கச்சேரி நடத்தினர்.

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2.
மின்சார ரசம் கம்பெனி, (லிட்)
சேலம்.

தின் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். அவரது வலதுபுறம் சாளுவதிம்மரும், இடதுபுறம் பிரதாப ருத்திர கஜபதியும் அமர்ந்திருக்கின்றனர். அமர நாயக பிரபுக்களும், மகாபத்திர வீரர்களும், ஜக்கய்யாவும், தங்கள் அந்தஸ்திற்குத் தகுந்தவாறு உட்கார்ந்திருக்கின்றனர். வீரர் அங்கங்கே காவல் புரிகின்றனர்.

கி. தே—சபையோர்களே! நாமும், கஜபதி இராஜனும், இருதறத்தாருக்கும் மனத்தாங்கல் இல்லாது சமாதானம் செய்துகொண்டோம். எமக்கு அடிவணங்கி சிற்றரசராக களிங்கத்தை அரசாள்வார். அரசே, இந்த உடன்படிக்கை பத்திரத்தல் கையொப்பமிடும்.

வீரர்:—களிங்காதிபதி கிருஷ்ண தேவருக்கு ஜே! பிரதாப ருத்திர கஜபதி மகாராஜாவுக்கு ஜே!

பி. க:—அரசரே! உமது சக்யம் எனக்கு ஏற்பட்டதுபற்றி மிகவும் சந்தோஷம். உமது உடன்படிக்கைக்கும் ஒப்புக்கொண்டேன். இதோ எனது கை ஒப்பம். (சாளுவதிம்மர் நீட்டிய பத்திரத்தில் கை ஒப்பமிடுகிறார்) உமக்குக் கப்பம் கட்டுவதில் யாதொரு தடையுமில்லை. நான் அளிக்கும் இவ்வாபரணங்களையும், இப்பட்டாக்கத்தியையும் அங்கீகரிக்க வேண்டும்.

காவலர் சிலர் தட்டுகள் நிரம்பஆபரணங்களைக் காண்டு வருகின்றனர். பட்டாக்கத்தியை கிருஷ்ண தேவருக்களித்து பிரதாப ருத்திரன் வணங்குகிறான். மகாபத்திர வீரர்களும் எழுந்திருந்து மரியாதை செய்கின்றனர்.

ம. தலை:—அரசே! எங்கள் பிழையை மன்னிக்க வேண்டும். உமது அதிகாரத்திற்குட்படாது கஜபதியுடன் சேர்ந்து உம்மை எதிர்த்ததற்கு மிக வருந்துகிறோம். நாங்கள் எங்கள் ஆயுள் உள்ளவரை ராஜபக்தியுடன் சேவை செய்வோம.

கி. தே:—உங்கள் சேவையை ஆவலுடன் அங்கீகரித்தோம். பிரதாபருத்திரரே எங்கே உமது மகள்? நம் பிரதம மெய்க்காப்பாளராகிய இந்தஜக்கய்யா என்பவரேஉம்உயிரைக் காப்பாற்றியவர். அவர் செய்த பேருதவிக்காக உமது மகளை மணம் செய்துகொடும்.

பி. ரு:—(சற்று வருந்தி-பின் தேறி) அரசே என் மகளை அழைத்துவர ஏற்கனவே ஓர் வீரனை அனுப்பித்துள்ளேன். அதோ அவனும் வந்து விட்டனன்.

(ஓர் வீரன் மிக விசனத்துடன் வந்துபணிந்து நிற்கிறான்.)

என் மகளுக்கு யாதுற்றது?

வீரன்:—இளவரசியின் அறையில் இந்தக் கடிதத்தைக் கண்டெடுத்தேன். தலையணையடியில் இந்தப் படமும் இருந்தது.

பி. ரு:—(படத்தை வாங்கி வருத்தத்துடன் நோக்கி ராயரிடம் அளிக்கிறார். கடிதத்தையும் பிரித்துப் படித்து கிருஷ்ணதேவரிடமளிக்க, தேவர் சாளுவதிம்மரிடம் அளிக்கிறார்.)

சா. தி:—(படிக்கிறார்) தந்தையே!

தாங்கள் குறிப்பிட்டது வாஸ்தவமே. காதல் நோயே என் மனதைக் கவர்ந்த சுந்தரநிரன் உமது வைரியாகிய விஜயநகர வீரனே. அவரை தேடியே புறப்பட்டுவிட்டேன். காரியத்தில் அபஜய மடைந்தால் என்னை காண்பதரிது. என்னை மன்னிக்கவும். இப்படிக்கு

ஜகன்மோகினி.

ஜக்க:—பிரதாப ருத்திரரே! அரசர் உமது மகளை எனக்குக் கொடுக்க உம்மைக்கேட்ட சமயம் நீர் சற்று வருத்தமுற்றதைக் கவனித்தேன். இக்கடிதத்தால் இளவரசியும் அரசரையே நேசிக்கிறாள் என நன்கு வெளியாகிறது. ஆதலின் என் ஆசை நிராசைதான். எப்பாடு பட்டாவது ஜகன்மோகினியைக் கண்டுபிடித்து வருவது என் பொறுப்பு அவளை அழைத்து வந்தால் விஜயநகர மன்னர் அவளை மணம் புரிய இசைவாரா?

பி. ரு. க:—அரசே!

கி. தே:—என்னையே நம்பியிருக்கும் அவ்வனிதையை அலக்கழிப்பது தர்மமாகாது.

ஜக்க:—(தன் உடைகளையும், பொய் மீசையையும் களைக்கிறான்-ஜகன் மோகினியாகத் தோன்றுகிறாள்.)

பி. ரு:—(ஓடி யணைந்து) கண்ணே!

கிருஷ்ணதேவரும், ஜகன் மோகினயும், பிரதாபருத்திர கஜபதியின் மனதிற்குகந்து ஒருவரை ஒருவர் கட்டித் தழுவுகின்றனர்.

கி. தே:—கண்ணே ஜகன் மோகினி! ஜக்கய்யனுக இருந்த பொழுதே என்னை வஸ்யம் செய்துவிட்டாய். பெண் என்றறிந்திருந்தால் அப்போழுதே விவாகம் செய்துகொண்டிருப்பேன்.

ஜகன்:—எல்லாம் ஏழுமலையாண்டவன் திருவருள்.

கி. தே.—சாளுவதிம்மரைப் பார்த்து, சாளுவ திம்மரே! இப்படை எழுச்சியின் வெற்றிக்கு நீரே காரணம். உமது உதவியால் இவ்வீர லட்சுமியையுமடைந்தேன். ஆதலின் இனி உம்மை என் பிதாவுக்கு சமானமாகத்தான் மதித்தல வேண்டும். அப்பாஜி! நான் உமக்கு பரிசாக அளிக்கும் இவ்வாபரணங்களைப் பெற்றுக் கொள்வீர். வீரர்களே! இனி சாளுதிம்மரை யாவரும் அப்பாஜி எனவே கூப்பிட வேண்டும்.

ஜயகோஷத்துடன் சபை கலைகிறது.

:முற்றிற்று.

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனை யூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

நஞ்சன்கூடு பல்பொடி
I. D. L. No 61.

ஜீர்சிப்

போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஜகப்பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர் முகம் அண்டு கம்பேனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்



இந்திய மக்களுக்கு

இந்திய

தேயிலை

பானம்

தேயிலை பானம் அருந்துவோரின் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது. ஜாதி மத பேதமன்னியில் ஒவ்வொருவரும் மென்மேலும் தேயிலையைப் பற்றிப் புகழ்கின்றார்கள். உண்மையாகவே ஆதரிக்கக்கூடிய அறிகுறிகளிருக்கின்றன. இதற்கிடான பானம் வேறெதுவுமில்லையென்று இந்திய மக்களில் புதிதாகத் தேயிலை பானம் செய்ய ஆரம்பித்தவர்களும் உணருகிறார்கள்.

உலகிலேயே சிறந்தது இந்தியாவில் உண்டாகிற தேயிலையைவிட வேறொன்றுமில்லை. உற்சாகமான மனதையும் ஆரோக்கியமான சரீரத்தையும்பெற இந்தியத் தேச பானமான இந்தியத் தேயிலை பான வழக்கத்தை விடாது பழக்கிக் கொள்ளுங்கள்.

தேத்தண்ணீர் தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவை, உலர்ந்த பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்தியத் தேயிலையைப் போட்டுக் கொதிக்கும் ஜலத்தைவிடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டிப் பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக்கொள்ளவும்.



உண்மையான ஸ்வதேசி சரக்கு - இந்திய தேயிலை

IK 35

Regd. No. 2514

ஸ்ரீமத்

பகவத்கீதை

(இரண்டாம் பதிப்பு)

அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும்
நாகர லிபியில் மூலமும் தமிழ் அர்த்தமும்

இதுவரையில் வெளியிடாத பல ரஹஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவில் மூன்று மத பாஷ்யகாரர்களின் தாத்பரிய சுருக்கமும், விஷய அட்டவணையும் அடங்கியுள்ளது.

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயராயிருந்த கீர்த்தனாசார்ய வி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 3.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T. S. Visvanatha Iyer B. A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras—Editor C. R. Srinivasan B. A.